ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே வரவரமுநயே நம

அர்த்தபஞ்சகம்

இதற்கு
ஸ்ரீபிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த
வியாக்யானம்.

திரிசிரபுரம் நம்பிள்ளை சபை ஸ்தாபகரும்
போஷகருமான திருப்புறம்பயம்
ஸ்ரீமான் இராமஸ்வாமி இராமாநுஜ தாஸரால்
சேர்க்கப்பட்ட அரும்பத விளக்கம்
இவை
திரிசிபுரம் நம்பிள்ளை சபையாரால்
கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்
1931இல் பதிப்பிக்கப்பெற்றது.

மறுபதிப்பு.
ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ
214, கீழ உத்தரவீதி [விக்ரமசோழன் திருவீதி],
திருவரங்கம், திருச்சி-6. ☎ : (0431) 434398
வெளியீடு நாள்: 6.09.2001
வி[illegible] 40/- தபாற்செலவு தனி

ஸ்ரீ:

முன்னுரை.

ஸர்வேச்வரன் லோகோஜ்ஜீவநார்த்தமாகச் செய்த திருவவதாரபரம்பரைகளைக் காட்டிலும், பூர்வாசாரியர்கள் ஆசரித்துக் காட்டிய சிறந்த வழியே கண்ணழிவற்றது என்பது எல்லாரும். இவர்களில் ஒருவரான ஸ்வாமி பிள்ளைலோகாசாரியர் உபதேசமாத்ரத்தில் நில்லாது, பெண்களும் பேதைகளும் உய்யுமாறு அரிய பெரிய இரகசியார்த்தங்கள் உள்ளிட்ட அநேக கிரந்தங்களைத் தெய்வமொழியின் மிச்ரமாக வெளியிட்டருளினர். இதுவே இவருடைய பரமக்ருபைக்குப் போதிய சான்றாகும். இவர் அருளிச்செய்த சில நூல்களுக்கு விசதவாக் சிகாமணியான ஸ்ரீவரவரமுனிகள் வியாக்யானம் செய்தருளினதுபோல், அர்த்தபஞ்சகத்திற்கும் பிள்ளைலோகஞ்சீயர் அவர்கள், ஓர் அரிய வியாக்யானம் செய்தாரென்பது யாவரும் அறிந்ததே.

திருச், சென்னை பாளையங்கோட்டை, ப்ரபன்னவித்வான் ஸ்ரீமான் ச.பு.குருஸ்வாமி நாயுடு அவர்கள், பலருக்கும் பயன்படுமாறு இதை அச்சிட்டு வெளியிடக்கருதி, பலவாண்டுகளுக்கு முன் சில தாள பத்திரங்களைக்கொண்டு பரிசோதித்து எழுதி முடித்திருந்த ஸ்ரீகோசத்தை, பாகவதவிஷயத்தில் பற்றுடைய பெருமாள்கோயில் ஹெட் இன்ஸ்பெக்டர், ஸ்ரீமான், V. ஸ்ரீநிவாஸநாயுடு அவர்கள், இதுகாறும் பாதுகாத்துவைத்திருந்து, சென்ற வருடம் ஸ்ரீரங்கம் ஸ்ரீமான், R. A. பன்னாருஸ்வாமி நாயுடு அவர்கள் வசம் ஒப்படைத்து அச்சிடும்படி கேட்டுக்கொண்டனர். மேற்படி R. A. பன்னாருஸ்வாமி நாயுடு அவர்களும், திருச்சி நம்பிள்ளை சபையாரும் இதன் பெருமையை யுணர்ந்து இக்கைங்கர்யத்தை நடத்தும்படி அடியேனுக்கு நியமித்தார்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள பலபெரியோர்களால் முயற்சிக்கப்பட்டதும், அறிவிற்சிறந்த பெரியோர்களால் செய்தற்குரியதுமான இக்கைங்கர்யத்தை, பலவகையிலும் சிறியேனாகிய அடியேன் இயற்ற முன்வந்தது, பாகவதர்களுடைய நன்முயற்சி பழுதுபோகாவண்ணம் அக்கிரந்தத்தை விசதமாக வதிக்கவேண்டுமென்னும் கருத்தினாலேயேயன்றி, பிறிதொன்றினாலன்று. இவ்வெண்ணத்தினாலேயே இது இனிது முடிவுபெற்றதென்பது நன்கு விளங்குகிறது.

இக்கிரந்தம் அச்சிட்டு பூர்த்தியடைவதில் முன்னின்று பல வழிகளிலும் உதவிபுரிந்த ஸ்ரீமான் R. A. பச்சாகுன்னாமி ராயுடு அவர்களின் பெருந்தன்மை பெரிதும் பாராட்டத்தக்கது.

இது படிப்படியாக பலபேரிடத்திலிருந்து வெளிவந்தமையின், இதனிடை மிகவிருக்கும் குற்றங்கள் பல வகையாலும் வந்திருக்கக்கூடும்.

அருள்நிறைந்த அறிஞர்கள் அக்குற்றங்களை அறிவிப்பரேல், அஃதொப்பன பாடபேதங்களாம், வேறனதென்ப தொன்றில்லையே.

T. D. இராமஸ்வாமி இராமாநுஜதாஸன்,
(திருப்புறம்பயம்)


ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அர்த்தபஞ்சகாவதாரிகா.

ஸ்ரீய:பதியாய், அகிலஹேயப்ரத்யநீகத்வ கல்யாணைகதாநத்வாதி ஸ்வேதரஸமஸ்தவஸ்து விலக்ஷணனாய், அப்ராக்ருதமாய் சுத்தஸத்வமயமாய் ஸ்வாஸாதாரணமாய் புஷ்பஹாஸஸுகுமாரமாய் புண்யகந்தவாஸிதாநந்ததிகந்தராளமாய் ஸர்வாபாஸ்ரயமாயிருக்கும் திவ்யமங்கள விக்ரஹோபேதனும் அபூர்வ கிரீடாத்யமான திவ்யபூஷணபூஷிதனும் சங்கசக்ராதி திவ்யாயுததரனும் நிரதிசயானந்தமயமாய் தேசகாலாதி பரிச்சேத்ய பரமவ்யோமமான ஸ்ரீவைகுண்டத்திலே ஆநந்தமயமான திவ்யாஸ்தாநமண்டபத்திலே பெரிய பிராட்டியாரும் நாச்சிமாருமுடன் கூடச் சேஷனுடைய சிறிய சிம்ஹாஸனத்திலே எழுந்தருளி செங்கோல் செலுத்தி வீற்றிருந்தருளி, நித்யஸூரிகளாலும் முக்தர்களாலும் ஸ்வரூப ஸ்திதிப்ரவ்ருத்திபேதராய் அனந்தவைபவராயிருக்கிற "அயர்வறுமமரர்களதிபதி" அவராதயபரிசர்யமான சரணங்களையும்கொண்டு ஆளுஞ்செல்வ நித்யவைத்து ஸ்வைகஸ்யபரத்தஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திநிவ்ருத்திமான ஸகல சேதநாசேதநங்களைத் தனக்கு போக்யமாகத்தான் போக்தாவாகத் திவ்யபூஜித்வமைஸபோகனாய் விபூதயாத் தேசத: பரிச்சேத்யராஹித்யனும், நித்யத்வாத்காலத: பரிச்சேதராஹித்யனும், ஸர்வதாஸமந்தர்களும் தனக்கு ப்ரகாரங்களாகத்தான் ப்ரகாரியாய்த் தனக்கு ப்ரகாராந்தரமில்லாமையாலே வஸ்துத: பரிச்சேதராஹித்யனுமாய் நத்ததோஷாஸம்ப்ருஷ்டனும், ஜ்ஞாநாநந்தனும், ஸத்யத்வஜ்ஞாநத்வாதி ஸ்வரூபநிரூபகதர்மயுக்தனும் ஜ்ஞாநபலைச்வர்யாதி ஸௌசீல்ய ஸௌலப்யாதி கல்யாணகுணகணமஹோததியாய் நாராயணாதி திவ்யநாமங்களையுடைய ஸர்வேச்வரன் தன்னுடைய ஸமஸ்த சரீரங்களும் ஸ்ருஷ்டிஸ்திதிப்ரதமானதையும், அநாதியாகவும் சேதநவிஷய ஜ்ஞாநியனுமிருக்குமவர் தம் ரக்ஷகத்வமென்கிற தந்நிமித்தமானவையும் விடாதே ஸ்வப்ரகாரங்களுமிருப்பதைவிட்டு, ஆஸ்ரிதவாத்ஸல்யத்தாலே "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து" என்கிற திருமுகப்பாசுரத்தின்படியே ஜன்மபரம்பரைகளிலே தோன்மாறிச் சுற்றிச்சுழன்று ஸம்ஸாரத்திலே வருந்தாவிட்டு, நித்யஸம்ஸாரிகளைத் தப்புவிக்கைக்காக நிற்கும் ஜ்ஞாநியனுக்குத் தன் பரமக்ருபாதிசயத்தாலே அவர்கள் உத்தாரகனாய் ஸம்ஸாரியுமலாவிடங்களிலே, திருவவதாரங்களைப் பண்ணும் ஸமயங்களும், அவ்வவதாரங்களில் ஈடுபடப்பெறாத ஸம்ஸாரிகளும்



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அர்த்தபஞ்சக

மூலம், வ்யாக்யானம். அரும்பதம்.



தனியன்.

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே ।
ஸம்ஸாரபோகிஸந்தஷ்டஜீவஜீவாதவே நம: ॥
லோகமாரும் மாருவின்னபூர்வர் ஈர்ந்தெடுத்த
மஹாரணமுதாரம் । ஸ்ரீரங்கவராமஸோமனை ஜீப்ர
பய: ஸமாரும் சாவிஜாதகம் ॥

மூலம் க. ஸம்ஸாரியான சேதநனுக்குத் தத்வஜ்ஞானம் பிறந்து உஜ்ஜீவிக்கும்போது அர்த்தபஞ்சகஜ்ஞாநமுண்டாகவேணும்.

வ்யாக்யானம்:— ஸம்ஸாரியான சேதநனுக்கு, "அநாதி மாயயா ஸுப்த:" என்கிறபடியே, அநாதியான ஸம்ஸாரஸமுத்ரத்திலே உழன்றிருக்கும்சேதநனுக்கு என்னுதல்; ஸம்ஸாரத்தையே நிரூபகமாம்படியிருக்கிற சேதநனுக்கு என்னுதல்; தத்வஜ்ஞாநம்

அரும்பதம்— ஜ்ஞாநாந்மோக்ஷ:, அஜ்ஞாநாத் ஸம்ஸார: என்கிற ருக்கையாலே, பலத்ப்ராப்திக்கு ஜ்ஞாநம் காரணமாம். உஜ்ஜீவனம்— ஸம்ஸார ஸம்பந்தமற்று உஜ்ஜீவிக்கை; உத்க்ருஷ்ட ஜீவனமாம். தத்வம்:— தஸ்யபாவ: தத்வம் அதாவது—பரமார்த்த வஸ்துவாயிருப்பது. தயிர் பால்களில் வெண்ணெய்போலச்சேதநாசேதநங்களிடத்தில் வியாபித்திருக்கும் பரமாத்மாவிருப்பவர். இவ்விடத்தில் உஜ்ஜீவனத்துக்கு பலத்தத்வஜ்ஞாநம் என்று சொல்லாமையாலே தத்வஜ்ஞாநமென்று கொள்ளவேணும். "தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி" என்று வியாக்யாதாக்கள் தத்வஜ்ஞாநத்தால் உஜ்ஜீவநமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இத்தால் ஈச்வரனை அறியும்போது சேதநாசேதந விசிஷ்டத்தோடு அறிவ

பிறந்து—இவர்தாமே, தத்வஜ்ஞாநமாவது— "ஸர்வஸ்மாத்பரனான நாராயணனுக்கு ஸர்வப்ரகார பாரதந்த்ரரான ஸர்வாத்மாக்களினுடையவும் ஸ்வரூபத்துக்கு அநுரூபபுருஷார்த்தமான கைங்கர்யத்தை அநாதியாக ப்ரதிபந்தித்துக்கொண்டு போருகிற கர்மமாம் பந்தத்தை நிவர்த்திப்பிக்குமுபாயம்-தச்சாஸ்த்ரோக்தஸாதநத்தை என்கிற ஜ்ஞாந விசேஷம்" என்று தத்வசேகரத்தில் ஸாதித்தருளின ப்ரகாரம், ஸ்வரூபபாரதந்த்ர்ய விஷயத்தில் ஜ்ஞாநம் பிறந்து, உஜ்ஜீவிக்கும்போது—உய்யும்போதைக்கு என்றபடி. அர்த்தபஞ்சகஜ்ஞாநம் உண்டாகவேணும்— அர்த்த பஞ்சகங்களாகிறவற்றினுடைய ஜ்ஞாநம் உண்டாகவேண்டியது.

அவதாரிகை:— அர்த்தபஞ்சகஜ்ஞாநமாவதுதான் ஏதென்ன அருளிச்செய்கிறார் (அர்த்தபஞ்சகஜ்ஞாநமாவது) என்று தொடங்கி.

உ. அர்த்தபஞ்சகஜ்ஞாநமாவது:- ஸ்வஸ்வரூப பரஸ்வரூப புருஷார்த்தஸ்வரூப உபாயஸ்வரூப விரோதிஸ்வரூபங்களை யுள்ளபடியறிகை.

தவிர்த்தவை. இவ்விடத்தில் அர்த்தபஞ்சகஜ்ஞாநமாவது— திருமந்த்ரார்த்தமறியப்படும் ஜ்ஞாநமேயாம். ஸம்ஸாரியான சேதநனுக்கு என்றதால் — ஸம்ஸாரத்தில் வர்த்திக்கும் புபுக்ஷுக்களை வ்யாவர்த்திப்பித்து மோக்ஷத்தில் இச்சையுடையவர்களான முமுக்ஷுக்களை இங்கு சொல்லுகிறது. இவ்விடத்தில் முமுக்ஷுவானவன் பகவத்ப்ராப்திகாமனாய் ஸம்ஸாரவிமோசனத்தில் இச்சை பிறந்தவன். கேவலனைச் சொல்லுகிறதல்ல. நித்யரும் முக்தரும் நித்யமுக்தர்களை வ்யாவர்த்திக்கிறது; இவர்களுக்கு உஜ்ஜீவநாபேக்ஷை யில்லாமையாலே இவ்விடத்தில் 'ஸம்ஸாரி' என்று சொல்லாமல் 'ஸம்ஸாரியான சேதநன்' என்றருளிச்செய்ததால், விசேஷ்யத்துக்கு வ்யாவ்ருத்தி விசேஷணத்துக்கும் உண்டு என்கிற ந்யாயத்தின்படி, சரீரத்திருக்கும் மோக்ஷம் வரும்போது ப்ரக்ருதிஸம்பந்தமான மூலப்ரக்ருதிக்கும் மோக்ஷமுண்டென்பதை தவிர்ப்பிக்கிறது. ப்ரக்ருதிஸம்பந்தத்தோடு கூடியிருக்கும் ஜீவாத்மாக்களுக்கே மோக்ஷமென்பது சாஸ்த்ரார்த்தம். இத்தால் சாஸ்த்ரஜ்ஞாநம் அசேதநத்திற்கும் ஈச்வரனுக்கும் வேண்டுமென்பதில்லை, சேதநனுக்கே ப்ரயோஜநம்.

ஸம்ஸாரமாவது— புண்யபாபநிபந்தநமான அசித்ஸம்பந்தம்; அதாவது— தவிர்க்கவொண்ணாத ஸூக்ஷ்மப்ரக்ருதிஸம்பந்தங்களும், ஸ்தூலமான விகாரங்களும், புத்ரக்ஷேத்ராதிகளும், தத்கார்யங்களும்.

அநாதிஜ்ஞாநாவரணகரமான ப்ரக்ருதியிலே, ஸம்ஸாரத்—உதக் குதிக்கி:— நிமக்நனானவன்.

(வ்யா.) அதாவது:—ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி சேஷத்வஜ்ஞானத்தி னுடைய ஸ்வரூபத்தை; பரஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி பாரதந்த்ர்ய ஜ்ஞான னுடைய ஸ்வரூபத்தை; புருஷார்த்தஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி ப்ராப் யத்தினுடைய ஸ்வரூபத்தை; உபாயஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி ப்ராபகத் தினுடைய ஸ்வரூபத்தை; விரோதிஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி விரோதி யினுடைய ஸ்வரூபத்தை; [illegible], இத்தனை யையும் உள்ளபடியாக அறிவது.

(அவ.) உக்தார்த்தத்திலே அர்த்தபஞ்சகத்தினுடைய அர்த்தவிசேஷங்களை உபபாதிப்பதாகத் திருவுள்ளம்பற்றி ப்ரத மம் அவற்றினுள்ள அர்த்தவிபாகத்தை [illegible] பிரித்தருளிச்செய்கி றார்.— (இவற்றில் [illegible] [illegible] [illegible],

---

அரு—அர்த்தபஞ்சகமாவது — ஒருவன் [illegible] அறியத்தக்கதும் செய்ய வேண்டியதாயிருக்கும் [illegible] [illegible]. அவை யாவன— அடையவேண்டிய பரம், அடைகிறவன், அடைவதற்குச் செய்யவேண்டியவேலை, அடையவொட்டாமல் தடுக்கும் விரோதிகள், அடைந்தால் வரும் பலன். உதாரணம்— அடையவேண்டியது செல்வம், அடைகிறவன் ஒருவன். அடைவதற்குச் செய்யவேண்டிய வேலை தொழில் பயிலுதல், அடைவதற்கு விரோதமானவை [illegible] [illegible] முதலியவைகள், செல்வமடைந்தால் [illegible] [illegible] செய்தல், வீடு பணம் சேர்ப்பது முதலியனவாம்.

ஆத்மஸ்வரூபத்தின் லக்ஷணத்தை [illegible] [illegible] கள் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

ஆத்மாவுக்கு ஸ்வரூபநிரூபகதர்மம் [illegible] ஞானம். அதாவது பாரதந்த்ர்யத்தோடு கூடின [illegible] ஆத்மாவுக்கு [illegible] வகுணம். [illegible] [illegible] [illegible] ஆத்மாவுக்கு [illegible] [illegible] [illegible] [illegible] கொடுக்கிறது, [illegible] [illegible] திருமந்திரத்தில் முக்கியமான ப்ரமாணம். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] முதலில் சொல்லி [illegible] [illegible] [illegible] [illegible]. இத் தால் [illegible] [illegible] [illegible] [illegible] ஸ்வரூப மிருப்பது. இதனைத் திருவுள்ளம்பற்றியே ஆழ்வாரும் "என்னுள்ளான்" என்னாதே "அடியேனுள்ளான்" என்றருளிச்செய்தார்.

ரு. இவற்றிலோரோருவிஷயந்தானஞ்சடிபட்டிருக்கும்.

(வ்யா.) அதாவது:- இவற்றில் இந்த அர்த்தபஞ்சகங்களில் ஓரோருவிஷயந்தான் தனித்தனியே ஒவ்வொரு அர்த்தவிஷயந்தான் அஞ்சுபடி பட்டிருக்கும் ஐந்து ப்ரகாரமாயிருக்கும்.

(அவ.) இவற்றில் முதலில் ஸ்வரூபமாவது ஏது? என்ன அருளிச்செய்கிறார்- (ஸ்வஸ்வரூபம் என்கிறது) என்று தொடங்கி,

சு ஸ்வஸ்வரூபமென்கிறது ஆத்மஸ்வரூபத்தை.

(வ்யா.) அதாவது:- ஸ்வரூபம் என்கிறது அஸாதாரண ஆகாரம், ஆத்மஸ்வரூபம் என்றும் ஆத்மாவினுடைய அஸாதாரண ஆகாரம். இப்படிகாரால் ஆத்மாவினுடைய அஸாதாரண ஆகாரத்தை ஸ்வஸ்வரூபமென்கிறது என்றபடி.

(அவ.) அத்தை விவரிக்கிறார்- (ஆத்மஸ்வரூபந்தான்) என்று தொடங்கி.

எ ஆத்மஸ்வரூபந்தான்:- நித்யர், முக்தர், பத்தர், கேவலர், முமுக்ஷுக்களென்றைந்து.

(வ்யா.) அதாவது:- ஆத்மஸ்வரூபந்தான் ஆத்மாவுடைய அஸாதாரண ஆகாரமாகிற ஸ்வரூபந்தான், நித்யர் ஸம்ஸ்ருஷ்டமனாகத்தாசப் பரமபதத்திலேயிருக்கிறவர்கள் நித்யஸூரிகளென்றும், முக்தர் ஸம்ஸாரவிநிர்முக்தராய்விளங்கிப் பரமபதத்துக்குப்போனவர்கள் முக்தர் என்றும், பத்தர் "அநாதிமாயயா ஸுப்த:" என்கிறபடியே அநாதியான அசித்ஸம்பந்தத்தையெப்போதும் விடாமலிருக்குமவர்கள் பத்தர் என்றும், கேவலர் ஆத்மாநுபவம் பண்ணுமவர்கள் கேவலர் என்றும், முமுக்ஷுக்கள் பகவத்ப்ராப்திநிமித்தமாகஸம்ஸாரநிவ்ருத்தியில் இச்சையையுடையவராகிற பக்திநிஷ்டர்க்கும் ப்ரபத்திநிஷ்டர்க்கும் முமுக்ஷுக்கள் என்று பேரக்கடவது; என்று ஐந்து ஆக இந்த ஆத்மாக்களுடைய ஸ்வரூபம் ஐந்துவிதமாயிருக்கும்.

(அவ.) இரண்டாவது பரஸ்வரூபமாவது ஏது? என்ன அருளிச்செய்கிறார்-(பரஸ்வரூபம்) என்று தொடங்கி,

அ பரஸ்வரூபமென்கிறது பரமாத்மஸ்வரூபத்தை.

(வ்யா) அதாவது பரமாத்மாவினுடைய அஸாதாரண ஆகாரமாகிற ஸ்வரூபத்தைப் பரஸ்வரூபம் என்கிறது.

(அவ.) அத்தை விவரிக்கிறார்- (பரமாத்மஸ்வரூபந்தான்) என்று தொடங்கி,

எ பரமாத்மஸ்வரூபந்தான்:— பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரமென்றைந்து.

(வ்யா.) அதாவது-பரமாத்மஸ்வரூபந்தான்— அதாவது பரமாத்மாவினுடைய அஸாதாரண ஆகாரந்தான். பரத்வம் பரமபதத்திலெழுந்தருளியிருக்கும் இருப்புக்குப்பரத்வம் என்று பேர், வ்யூஹம் ஆச்ரிதஸம்ரக்ஷணார்த்தமாக ஆமோதாதி லோகங்களிலெழுந்தருளியிருக்கும் இருப்புக்கு வ்யூஹமென்று பேர், விபவம் அயோத்யாமதுராதி திவ்யக்ஷேத்ரங்களில் ராமக்ருஷ்ணாதிரூபேண அவதரித்தருளின அவதாரங்களுக்கு விபவம் என்று பேர், அந்தர்யாமித்வம் ஸகல சேதநாசேதநங்களில் இருக்குமிருப்புக்கு அந்தர்யாமித்வம் என்று பேர், அர்ச்சாவதாரம் கோயில்களிலும் க்ருஹங்களிலுமிருக்கிற விக்ரஹ ஆகாரங்களுக்கு அர்ச்சாவதாரம் என்று பேராயிருக்கும். என்ற ஐந்து ஆக ஈச்வரனுடைய ஸ்வரூபம் ஐந்துவிதமாயிருக்கும்.

(அவ.) மூன்றாவது புருஷார்த்தஸ்வரூபத்தை விளக்கக் கோலி முன்னம் புருஷார்த்தசப்தத்திற்கு அர்த்தமருளிச் செய்கிறார்- (புருஷனாலே) என்று தொடங்கி.

அ. புருஷனாலே அர்த்திக்கப்படுமது புருஷார்த்தம்.

(வ்யா.) அதாவது:—புருஷனாலே சேதநனாலே, அர்த்திக்கப்படுமது- ப்ரார்த்திக்கப்படுமது, எதுவோ அது, புருஷார்த்தம் - புருஷார்த்தமாயிருக்கும்.

(அவ.) அத்தை விவரிக்கிறார்:- (அந்த புருஷார்த்தந்தான்) என்று தொடங்கி,

கூ அந்த புருஷார்த்தந்தான்— தர்ம, அர்த்த, காம, ஆத்மாநுபவ, பகவதநுபவம் என்றைந்து.

(வ்யா.) அதாவது:— அந்த புருஷார்த்தந்தான்-சேதநனாலே ப்ரார்த்திக்கப்படுமதான அப்புருஷார்த்தமென்கிறதுதான்; தர்மம்-தர்மமென்றும், அர்த்தம் - அர்த்தமென்றும், காமம் - காமமென்றும், ஆத்மாநுபவம் - ஆத்மாநுபவமென்றும், பகவதநுபவம் - பகவத் அநுபவமென்றும், என்ற ஐந்து ஆக புருஷார்த்தத்தினுடைய ஸ்வரூபம் ஐந்துவிதமாயிருக்கும்.

(அவ.) நான்காவது உபாயஸ்வரூபத்தை விவரிக்கிறார்-(உபாயஸ்வரூபம் என்கிறது) என்று தொடங்கி-

௰. உபாயஸ்வரூபமென்கிறது கர்ம, ஜ்ஞாந, பக்தி, ப்ரபத்தி, ஆசார்யாபிமானமென்றைந்து.

(வ்யா.) அதாவது:- உபாயஸ்வரூபம் என்கிறது- ப்ராபகஸ்வரூபம்என்றுசொல்லுமது. கர்மம்-கர்மயோகமென்றும், ஞானம்-ஞானயோக மென்றும், (பக்தி)-பக்தியோகமென்றும், ப்ரபத்தி - ப்ரபத்தியோகமென்றும், (ஆசார்யாபிமானம்)-ஆசாரிய அபிமான மென்றும்,என்றைந்து.ஆகஉபாயஸ்வரூபம் ஐந்துவிதமாயிருக்கும்.

(அவ.) இனி ஐந்தாவது விரோதிஸ்வரூபத்தை விவரிக்கிறார்-(விரோதிஸ்வரூபமென்கிறது) என்று தொடங்கி.

௧௧. விரோதிஸ்வரூபமென்கிறது- ஸ்வரூபவிரோதி, பரத்வ விரோதி, புருஷார்த்தவிரோதி, உபாயவிரோதி, ப்ராப்தி விரோதி என்றைந்து.

(வ்யா.) அதாவது:-விரோதிஸ்வரூபமென்கிறது விரோதிஸ்வரூபமென்று சொல்லுமது, ஸ்வரூபவிரோதி-ஆத்மஸ்வரூபவிரோதி யென்றும்,பரத்வவிரோதி - ஈச்வரஸ்வரூபவிரோதியென்றும், புருஷார்த்தவிரோதி-ப்ராப்யவிரோதி என்றும்,உபாயவிரோதி-ப்ராபகவிரோதி என்றும், ப்ராப்திவிரோதி - பகவத்ப்ராப்திவிரோதி என்றும், என்று ஐந்து ஆக விரோதிஸ்வரூபம் ஐந்துவிதமாயிருக்கும்.

(அவ.) இனிமேல், கீழ்ச் சங்க்ரஹேணச்சொன்ன அர்த்த பஞ்சகத்தில் ஒவ்வொன்றையெடுத்து உபபாதிக்கிறார். அதாவது- கீழ் அர்த்தபஞ்சகம் ஒவ்வொன்றே அஞ்சவிதமாயிருக்கும் படியை ஸங்க்ரஹமாக அருளிச்செய்து, அத்தைப் பஞ்சவிம்ஶதி தத்வங்களாக நிர்ணயித்து அந்த பஞ்சவிம்ஶதி தத்வங்களில் ஒவ்வொன்றை எடுத்து உபபாதிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, முதல்சொன்ன ஆத்மஸ்வரூபபஞ்சகத்தில் நித்யஸூரிகளின் படியை அருளிச் செய்கிறார்— (இவற்றில் நித்யரானவர்) என்று தொடங்கி.

௧௨. இவற்றில் நித்யரானவர்:— ஒருநாளும் ஸம்ஸாரஸம்பந்தமாகிற அவத்யமின்றிக்கே நிரவத்யராய், பகவதநுபவாநுகூல்யைகபோகராய்,"வானிளவரசு வைகுந்தக்குட்டன் வாசுதேவன்" என்கிற வைகுண்டநாதனுக்கு, 'விண்ணாட்டவர்

முதலவர்' என்கிறபடியே, பட்டங்கட்டுகைக்குரியராம்படியுமுப் பரான மந்த்ரிகளாய், ஸம்ஸாரியோகாத் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைப் பண்ணவும் யுக்தராய், ப்ரவ்ருத்தி வ்யா பாரங்களிலும் தொடர்ந்தடிமை செய்யக்கடவராய்க் கோயில்கொள் தெய்வங்களான சேனைமுதலியார் தொடக்க மான அமரர்கள்.

(வ்யா.) அதாவது:- நித்யரில் என்றது இவ்வர்த்தஸ்வரூப பஞ்சகத்தில் என்றபடி; அதாவது, பஞ்சவிம்சதி தத்வங்களில் என்றபடியாம்; நித்யராவர்:— நித்யஸூரிகளாகிறவர்கள். "ஸதா பச்யந்தி ஸூரய:" என்றும், "ஏகாந்திநஸ்ஸதாப்ரஹ்மத்யாயிந:" என்றும் சொல்லுகிறபடியே, பகவத்ஜ்ஞாநத்துக்கும் பகவதநு பவத்துக்கும் ஒருகாலும் ஸங்கோசமின்றிக்கே நிரந்தரமாயிருப்பவர் இவர்களை நித்யர் என்கிறது. ஒருகாலும் ஸம்ஸாரஸம்பந்தமாகிற அவஸ்தையின்றிக்கே - ஒருகாலத்திலும் ஸம்ஸாரத்தில் கட்டுறவை

அரசு- வாசியமாக வைகுந்தக்குட்டன் வாசுதேவன்:- இளவரசு யுவராஜ அதாவது, ராஜ்யத்தை ஆளும் சிரமத்தை வகிக்காமல் இளவர சாயிருத்தல், வைகுந்தம் - பரமேபதமாகுமண்டலமில்லாதவிடம், குட்டன்- மகன், இத்தால் - பக்வியன், ஆச்ரிதபாரதந்த்ரன், வாசுதேவன் - தான் யுவராஜனாய், ராஜ்யம் மந்த்ரிகளிட்ட வழக்கம் அத்தால் ராஜ்யம் நன்றாக நடாய் அவர்கள் செய்கைகளைத்தான் அறியாதவனுமிருப் பானென்கின்ற, தான் வாசுதேவனும் எங்கும் வியாபித்து அவைகளை விசேஷித்துக்கொண்டு ஆளும் தன்மையையுடைய தேவன் - வாசுதேவன். வைகுந்தக்குட்டன் - பக்தர்கள் தன்மையையடைவதற்கு இடையூறானவெல்லா வற்றையும்போக்கி அவர்களை எப்போதும் தம்மிடம் சேர்த்துக்கொள்ளுபவர். ஸம்ஸாரஸம்பந்தம் - ஜென்மபாசம் மனவுறுதியாலாசைகளில் உழன்று வர்த்திக்கவைக்கு தேவன்- உபகாரங்களைத் தாயின் கர்ப்பத்தில் போலத் தமக்குள் வைத்து பறவைகள் சிறகாலே குஞ்சுகளை அணைப்பதுபோல நின்றுகாவல் செய்தல் முதல் காப்பாற்றியும், அவர்களிடம் தாம் அந்தர்யாமியாக வசித்திருப்பதால் வானவன் என்றும், இரக்ஷணத்தை விளை யாட்டாக வைத்திருப்பதாலும், எல்லாவற்றையும் கடந்து மேலாயிருப்ப தாலும் ஸர்வேசுவரனாய் விளங்குவதாலும் பக்தர்களிடத்தில் விசேஷித்துச் சென்றடைவதாலும் தேவன் என்று சொல்லப்படுகிறான். கோயில் கொள் ளல் - குடிகொள்ளல், கோயில் - தேவாலயம், அதாவது விலக்ஷணமான விமானத்தோடு கூடிய தேவாலயம். ஸம்ஸாரியோகாத் - இத்தால் தக்க ஜீவாத்மாக்கள் கர்மத்தைச் செய்ய சக்தியற்றவர்களென்றபடி.

கிற தோஷமில்லாமையே; நிரவத்யராய் - நிர்தோஷராய்; பகவத் அநுபவ ஆநுகூல்ய ஏகபோகராய்-பகவானுடைய அநுபவமொன்றுக்கே இஷ்டமாயிருந்துள்ள போகரூபராய்; ஸூரிஜநாக - " வைசேஷாடபவர்ஜோமே " என்றும், 'ஸூரய:' என்றும் சொல்லுகிறபடியே—நித்ய ஸூரிகளும் குறைச்சலும் அறிவு பில்லாதபடி பதினாறு நிரதிஶயத்தையுடையவருமாய், பரம ஆகாசத்துக்கு அதாவது, பரமபதத்திற்கு இணையான அரசன் என்றும்; வைகுந்தக்குட்டன் - வைகுண்டத்திலெழுந்தருளியிருக்கிற பிள்ளை என்றும், குட்டன் என்று சொல்லுமாம். வாஸுதேவன் என்கிற "வாஸுதேவாய தீமஹி" என்கிறபடியே, ஸமஸ்த சேதநாசேதநங்களில் வ்யாபநம் பண்ணிக்கொண்டிருக்கிறவன் என்றும் ஆழ்வார் தமது அருளிச்செயலில் சொல்லுகிற, அதாவது, "ஸம்பூர்ண ஷட்குணஸ்தேஜா பரமேஶ்வரோ ஜகத் பதி:" என்று சொல்லுகிறபடியே, ஜ்ஞாந, பல, ஐஶ்வர்ய, வீர்ய ஶக்தி, தேஜஸ்ஸுக்களாகிற ஆறு குணங்களையும் பரிபூர்ணமாய்க் கொண்டு பரமபதத்திலே எழுந்தருளியிருக்கும் அந்த வாஸுதேவன் என்றும் ஆழ்வார் தமது அருளிச்செயலில் சொல்லுகிற என்னவுமாம்; வைகுண்டநாதனுக்கு - ஸ்ரீவைகுண்டம் என்னும் பரமபதத்துக்குத் தலைவனாயிருக்குமவனுக்கு. நிர்வாஹகனாயிருக்குமவனுக்கு என்னவுமாம்; விண்ணாட்டவர் மூதுவர் என்கிறபடியே விண்ணுலகு ஆண்டு பரம ஸ்வாமியான பரமபதம்—அந்தத் தங்களுக்கு வாஸஸ்தானமாகவுடையவர்களாகிற, "அமரர் முதல்வோர்" என்ற திருமுகப்பாசுரஞ்சொல்லுகிறபடியே, பட்டங்கட்டுகைக் குரியவன்படி - பட்டாபிஷேகம் பண்ணிவைப்பதற்குத் தக்கவராம் படி; முக்யரான மந்த்ரிகளாய் - சிறந்த மந்திரிகளாகி, ஸர்வ நியோகாத் - ஸர்வருடைய ஶாஸனத்தாலே, நியோகம் என்கிறது, நியமனம் என்றபடி; அதாவது—அநுமதி. ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைப் பண்ணவும் ஶக்தராய், லீலாவிபூதியுடைய உத்பத்தியையும், பாலனத்தையும், ஸம்ஹாரத்தையும் பண்ணுவதற்கும் ஶக்தியையுடையவர்களாகி, ப்ரத்யூஹாதி ஸர்வதேவதைகளிலும் ஸவிஶேஷித்வருடைய பரத்வம் வ்யூஹம் முதலான ஸர்வ அவஸ்தைகளிலும். கைங்கர்யவிஶேஷங்களுக்கு அவஸ்தை எனச் சொல்லுவது: ஆதி—என்கையாலே, மற்றை விபவ, அந்தர்யாமித்வ, அர்ச்சாவதாரங்களைப் பராமர்ஶிக்கிறது; ஸர்வ அவஸ்தை

களிலும் என்றது—என்ன அமரர்களிலும் என்றபடியாம்; அதாவது— ஸர்வமா... ...ம் என்பது; தொடர்ந்து "போக போதராகச்சதி [illegible]" என்கிறபடியே அவன் பின் சென்று, அடிமை செய்யக்கடவராய் - அடிமையின் க்ருத்ய மாகிற ஸகலவித கைங்கர்யத்தையும் செய்ய வைத்தாராய். கடகர் என்பது கடவர் எனமருவியது. கோயில்கொள் தெய்வங்களான, "பௌமவிகேதகேஷு [illegible]" என்கிறபடியே, பரம பதத்திலும்போலே விபவத்திலும் கோயில்கொண்டிருப்பதாகக் கொண்டுள்ள தேவதைகளான, மேலே முதலியார் தொடக்கமான அமரர்கள் விஷ்வக்ஸேநர் திருவடி திருவனந்தாழ்வான் முதலாக வுள்ள நித்யஸூரிகள்.

(அவ.) முக்தர் படியை விவரிக்கிறார்—(முக்தராவார்) என்று தொடங்கி.

சூ. முக்தராவார் பகவத்ப்ரஸாதத்தாலே ப்ரக்ருதிஸம்பந்தத்தால் வந்த க்லேசமலங்களெல்லாம் கழிந்து, பகவத்ஸ்வரூப ரூபகுணவிபவங்களை அநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீதி உள்ளடங்காமையாலே வாயாரப் புகழ்ந்து, மீட்சியின்றி வைகுந்தமாநகரத்திலே களித்திருக்கின்ற முநிவர்கள்,

(வ்யா.) அதாவது:— முக்தராவார் - முக்தர் ஆகிறவர்கள், பகவத்ப்ரஸாதத்தாலே - "க்ருபயா பர்யபாலயத்" என்னும்படி ஷட்குணபூர்ணனாகிற பகவானுடைய அநுக்ரஹத்தாலே, ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் வந்த க்லேசமலங்களெல்லாம் கழிந்து - சரீரஸம்பந்தத்தாலே ஸம்பவித்த ஆத்யாத்மிகாதி துக்கங்களும், அஜ்ஞாநாதிமலரூபதர்மங்களுமெல்லாம் நீங்கின என்று சொல்லுதல், அன்றிக்கே- துக்கரூபங்களான அஜ்ஞாநாதிமலரூபதர்மங்கள் நீங்கின என்னவுமாம், அன்னமன்றிக்கே - துக்கரூபமான அவித்யாதி மலங்கள் நீங்கி என்று சொல்லவுமாம். "மனனகமலமற" என்றதில்

பகவத்ப்ரஸாதத்தாலே- ஜ்ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி தேஜஸ்ஸு இவைகளை இயல்பாகவுடையவன் கருணையாலே எல்லாம் கழிந்து - அநாதிபூர்வமாக வந்த பாபங்கள் முதலானவைகள் பூர்வமிருந்து, இப்போதாகக் கழிந்ததாகத் தோற்றும்படி, அநுபவித்து - ஸாக்ஷாத்கரித்து, உள்ளடங்காமையாலே - மனோ தடாகத்துள்ளடங்காமையாலே, மீட்சியின்றி-புனராவ்ருத்தியும் மீளுதலுமில்லாதபடி, மாநகரம் - திரிபாத்விபூதியைப்போல் அழிவுபடாத பரமபதம்.

ஆழ்வார் அருளிச்செய்த அர்த்தம் இவ்விடத்தில் அநுஸந்தேயம்; பகவத்ஸ்வரூப ரூப குணவிபூதிகளை - பகவானுடைய ஸ்வரூபத்தையும், திவ்யமங்களவிக்ரஹத்தையும், ஸ்வரூபநிரூபகதர்மங்களான ஜ்ஞாந ஆநந்த அமலத்வாதிகளையும் நிரூபிதஸ்வரூப விசேஷணங்களான ஜ்ஞாநசக்த்யாதிகளையும், விக்ரஹகுணங்களான சௌந்தர்ய சௌகந்த்ய சௌகுமார்ய லாவண்யாதிகளையும் நித்யரிலே அநுபவிக்கைக்கு நித்யவிபூதியிலே விபவங்கள் உபாதேயமாய் இருக்குமாப்போலே, லீலாவிபூதியிலும் அப்படியே ததீயத்வாகாரத்தாலே அநுபவிக்கைக்கு விபவங்கள் போக்யமாயிருக்கையாலே "விபவங்களே" என்றவிடத்தில் லீலாவிபூதியின் விபவங்களையும் அந்வயிக்கையிறே. அநுபவித்து - அவற்றையெல்லாம் அநுபவித்து, ப்ரீதியாலே அநுபவித்த என்னுதல், அஸ்ஸாதுவான ஐச்வர்யத்தி உள்ளடங்கவுமாமே - இதில் சொன்ன பகவத்ஸ்வரூபாதிகளுடைய அநுபவத்தால் பிறந்த ப்ரீதியாலே உள்ளே தங்கியில்லாமையாலே, வெளியிலே தங்காமையாலே என்னுதல்; வாயாரப்புகழ்ந்து - வாக்குக்களாலே "ஹாவு ஹாவு ஹாவு" என்றும், "அஹமந்நம் அஹமந்நம் அஹமந்நம்" என்று சொல்லிப்பூர்வமாக ஸ்தோத்ரம் பண்ணி; மீட்சியின்றி - "ந ச புநராவர்த்ததே" என்னும்படி, புநராவ்ருத்தியின்றிக்கே அநாதை மறுபடியும் மீளுதலில்லாமல் வைகுந்தமாநகரத்திலே - வைகுண்ட என்கிற தாய்வயிற்றிலே பிறக்கையாலே வைகுண்டன் என்ற ஸர்வேச்வரனுக்குத் திருநாமமாய் அவனுக்கிருக்குமிடமானதாலே வைகுண்டம் என்ற திருநாமத்தையுடையதாய் ஸ்வேதர வைலக்ஷண்யமாய் மஹாநகரமான பரமபதத்திலே; களித்து - பகவதநுபவஜநிதமான ஹர்ஷத்தாலே மகிழ்ந்து; ஆங்கிருக்கும் ஜீவன்கள் - அங்கே வாஸிக்குமவர்களாய், எப்போதும் பகவதநுபவாதிகளிலே வாஸம் பண்ணுகிற ஜீவன்கள்.

(அவ.) இனி, பத்தர் படியை அருளிச்செய்கிறார் — (பத்தராவார்) என்று தொடங்கி.

வி௫ பத்தராவார்:-- பஞ்சபௌதிகமாய், அநித்யமாய் ஸ்வபாவதுக்கஹேதுவான சரீரமாய், ஆத்மஸம்ஸ்லேஷத்தில் தர்சந ஸ்பர்சந யோக்யமில்லாதபடி அசந்தரப்புதமாய், அஜ்ஞான அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞான ஜநகமான ஸ்வதேஹமே ஆத்

மாவாகவும் சப்தாதிவிஷயாநுபவஜநிதமான ஸ்வதேஹபோஷணமே புருஷார்த்தமாகவும், சப்தாதிவிஷயலாபத்துக்கு உபாயமாக வர்ணாச்ரமதர்மங்களையழிய மாறியும் அபே[illegible] பண்ணியும், பூதஹிம்சை பண்ணியும் பரதார பரத்ரவ்யாபஹாரம் பண்ணியும், ஸம்ஸாரவர்த்தகராய், பகவத்விமுகரான சேதநர்.

(வ்யா.) அதாவது:— பத்தர் ஆவார் பத்தர்களாமவர்கள், பார்த்த பௌதிகமாய் - ப்ரக்ருதிவ்யாதிபஞ்சபூதாத்மகமாய், அநித்யமாய் - நித்யமன்றிக்கேயிருப்பதாய், ப்ரவாஹரூபதயா நித்யமாய் என்னுதல், ப்ரளயகாலத்திலும் ப்ரதிஜன்மத்திலும் அழிக்குமதாகையாலே நித்யமன்றிக்கேயிருக்குமது என்னுதல்; ஸுகதுக்க அநுபவபரிகரமாய் - புண்யரூபமான கர்மத்தைப் பண்ணுகைத்தால் வந்த ஸுக அநுபவத்துக்கும், பாபரூபமான கர்மத்தைப் பண்ணுகைத்தால் வந்த துக்க அநுபவத்துக்கும், ஸாதநமாய், உபகரணமாய் என்றபடி - ஆத்மவிச்லேஷத்தில் - ஜீவாத்மவியோகத்தில், வியோகத்தில் - அதாவது, பிரித்தகாலத்திலே என்றபடி; தர்சனஸ்பர்சன யோக்யமில்லாதபடி - பிணம் என்று பார்க்கைக்கும் தொடுகைக்கும் தகுதியாகாத ப்ரகாரம்; அ[illegible] ஹேயமாய் - பவித்ரம் அன்றிக்கேயிருப்பதாய், ஆத்மவன்றிக்கே அபவித்ரமாக்குமதாயிருக்குமதாய், அஜ்ஞாந அந்யதாஜ்ஞாநவிபரீதஜ்ஞாந ஜநகமான ஸ்வதேஹமே - ஜ்ஞாந அநுதயத்துக்கும், அந்யதாஜ்ஞாநத்துக்கும், விபரீதஜ்ஞாநத்துக்கும் பிறப்பிடமான தங்கள் தேஹமே, அதாவது— ஜ்ஞாந அநுதயம் என்கிறது - தேஹாத்மாபிமானத்தை; அந்யதாஜ்ஞாநம் என்கிறது— 'போக்யதாவைதகாத்மகம்' என்னும்படி ஸ்வசேஷத்வ அந்யசேஷத்வரூபமான அந்யசேஷத்வத்தை; விபரீதஜ்ஞாநம் என்றது- ஸ்வஸ்வாதந்த்ர்ய ஜ்ஞாநத்தை; இம்மூன்றையும் பிறப்பிக்குமதான தங்கள் தேஹமே என்னுதல்! ஸ்வதேஹமே ஆத்மாவாகவும்-தங்கள் தேஹமே ஜீவாத்மாவாகவும்; சப்தாதிவிஷய அநுபவஜநிதமான ஸ்வதேஹ போஷணமே புருஷார்த்தமாகவும்-சப்தமும் ஸ்பர்சமும் ரஸமும் ரூபமும் கந்தமுமாகிற விஷயங்களினுடைய அநுபவத்தால்பிறந்ததான தங்கள் தேஹத்தை "அச்சம் போஷ்யம் மநுஷ்யாணும்" என்னும்படி, அக்கம்முதலான பதார்த்தங்களாலேபோஷிக்குமதே புருஷார்த்தமாகவும்; தங்கள்தேஹத்தினது சப்தம் ஸ்பர்சம்,ரூபம்,ரஸம், கந்

தம் ஆகிற விஷயங்களினுடைய அநுபவங்களைப்பிறப்பிக்குமதான 'அர்த்தம் போஜ்யம் மநுஷ்யாணாம்' என்னும்படி, அர்த்தம் முதலான பதார்த்தங்களைக்கொண்டு போஷிக்கும் அந்த போஷணமே புருஷார்த்தமாகவும் என்னவுமமையும்; புருஷார்த்தம்-பலம்; ஸ்ருதி விஷயணாமத்துக்கு உறுப்பாக - சப்தம் ஆதியானவற்றுடைய விஷயங்களை எடுக்கைக்கு, அதாவது-பெறுகைக்கு அங்கமாக, அதாவது-அநுகூலமாக, வர்ணாஸ்ரமதர்மங்களை அழியமாறியும் - தங்களுடைய வர்ணதர்மங்களையும், ஆஸ்ரமதர்மங்களையும் அழியும்படி மாறியும், அழிவைதியாவிதமும் என்றபடி, அழியமாறி என்று விஸ்தாரத்தமாக அருளிச்செய்கிறார். வர்ணதர்மங்களாகிறவை எவை? என்னில்—ப்ராஹ்மணருக்கு தங்கள் வர்ணத்துக்கு அநுகுணமான வேதஅத்யயநாதிகளும், நித்யநைமித்திகாதி கர்மங்களும், ஸதாசாரணையத்தியும் ஆகிற இவை விஹிததர்மங்கள். க்ஷத்ரியனுக்கு - தங்கள் வர்ணத்துக்கு அநுகுணமாக நித்யநைமித்திகாதிகள் கூடுமவையாய், யஜநாதிஷட்கர்மங்களில் யாஜந அத்யாபந ப்ரதிக்ரஹங்களாகிற மூன்றும் கூடாதவையாய் தண்ட யுத்த ப்ரஜாபாலநாதிகள் கூடுமவையாயிருக்கும். வைஸ்யர்க்கு க்ஷத்ரியரைப்போலே தங்களுடைய வர்ணத்துக்கு அநுகுணமான நித்ய கர்மமும் ஸர்வகர்மங்களொழிய குப்தஸம்ஸ்க்ருதமான நைமித்திகாதிகளுங்கூடுமவையாய் யஜந யாஜந அத்யயந அத்யாபந ப்ரதிக்ரஹங்கள் கூடாதவையாய், ஸ்வணவாணிஜ்யாதிகள் கூடுமவையாயிருக்கும். இவை ப்ராஹ்மணாதி மூவர்க்கும் விஹிததர்மங்கள். சூத்திரருக்கோ— தங்களுடைய வர்ணத்துக்கு அநுகுணமான ஸுஸ்ரூஷையும், க்ருஷியும் பண்ணிக்கொண்டிருக்கையே விஹித தர்மம், ஸுஸ்ரூஷா மாத்ரஸ்ய என்றபடி மூவர்க்கும் ஸுஸ்ரூஷை பண்ணுமது; க்ருஷிபண்ணுமதுவே சொல்லிற்றே ஸாத்திரத்தில். இனி ஆஸ்ரமதர்மங்களானவை எவை? எனில் ப்ரஹ்மசர்யாஸ்ரமத்துக்கு வேதஅத்யயந அப்யாஸமாக (தலைபிடித்தல்) பிக்ஷாசரண கமண்டலபலாச தண்ட க்ருஷ்ணாஜிநாதி தாரணங்கள் கூடுமவையாய், ஸ்ரக்சந்தநாதிகள் கூடாதவையாயிருக்கும். க்ருஹஸ்தாச்ரமத்துக்கு பிக்ஷாசரணாதிகள் கூடாதவையாய், ஸ்ரக்சந்தநாதிகள் கூடுமவையாயிருக்கும். வாநப்ரஸ்தாஸ்ரமத்துக்கு ஸ்மஸ்ரு ரோமாதிகளும், வன்யாஹாராதிகளும் அதஸ்ஸயநாதிகளும் கூடுமவையாய், க்ராம்ய ஆஹாரங்களும்,

ஸோம்யபேவாநாதிகளும் கூடாதவையாயிருக்கும். யத்யாஸ்ரமத்துக்கு ஸந்நியாஸத்தாநிகள் மாஸவிஸேஷங்களாய் வைப்பதற்றும் அப்ரேக்ஷாசனைபோலுனக்கத்ய ஸ்வாகாதிகள் கூடுமவையாய் "யாஹந்தம்பநிம்" என்னும்படியன்னமல் வஹனாதிகளும் ஸ்ரக்சந்தநாதிகளும் கூடாதவையாயிருக்கும். இப்படியிருக்கிற வர்ணதர்மங்களையும் ஆஸ்ரமதர்மங்களையும் யதாச்க்தமாக ஸாஹபேறும் நடக்குமதே ப்ரயோஜநமாயிற்றின்பு. அர்த்தகாமங்களின் நிமித்தமாக "ஆசாரஹீநம் ந புநந்தி வேதா:" என்றபடி, ஆசாரா நாசாசாரங்களைப் பண்ணுவதனுடே—வர்ணாஸ்ரமதர்மங்களை அழிய மாறியும்—என்றது. அன்றிக்கே வர்ணாஸ்ரமதர்மங்களை அழிய மாறியும் என்கிற வாக்யத்திற்கு ப்ராஹ்மணனானவன் அர்த்தகாமங்களின் நிமித்தமாக க்ஷத்ரியவர்ண தர்மங்களான தண்டயுத்தாதிகளைப் பேணித்தும், வைஸ்யவர்ண தர்மங்களான க்ருஷிவாணிஜ்யாதிகளை அவலம்பித்தும், "யஸ்யவேதஸ்ச வேதீச" என்கிறபடியே வர்ணாச்ரம தர்மங்களானுஷ்டானத்தாலே தம்முடைய வர்ணாஸ்ரமதர்மங்களுக்கு அநுரூபமான அநுஷ்டானமின்றிக்கே யொழியும்படி நடக்குமவையாலே துர்ப்ராஹ்மணன் என்று பேராயிருக்கும்.

இதுக்கு த்ருஷ்டாந்தம்:— ஸ்ரீபாகவதத்தில் அஜாமிள வ்ருத்தாந்தத்திலே காணலாம். க்ஷத்ரியன் அர்த்தகாமங்கள் நிமித்தமாகத் தன்னுடைய குலதர்மங்களையும் வ்ருத்த ஆசாரங்களையும்விட்டு ப்ராஹ்மண தர்மங்களையும் வைஸ்ய தர்மங்களான க்ருஷ்யாதிகளையும் அவலம்பிக்கிறதுண்டானபடியாலே ஸாத்த க்ஷத்ரியன் என்று சொல்லும்படியன்றிக்கேயிருப்பன். இதுக்கு த்ருஷ்டாந்தம்—க்ஷத்ரியனுக்க காமாதுரனான சந்தான் ப்ராஹ்மணஸ்ரேஷ்டரான குருபத்நி பாதிவ்ரத்யபங்கம் பண்ணின வ்ருத்தாந்தம் கண்டுகொள்வது. வைஸ்யன் அர்த்தகாமங்கள் நிமித்தமாகத் தன்னுடைய குலதர்மங்களையும் வ்ருத்த ஆசாரங்களையும் விட்டு, சதுர்த்தவர்ணத்திற்கு தர்மமான க்ருஷ்யாதிகளையும், ப்ராஹ்மணருக்கு தர்மமான தபஸ்ஸையும் வஹநாதிகளையும் க்ஷத்ரிய தர்மமான தண்டயுத்தாதிகளையும் பரிக்ரஹித்து, இப்படி அநாசார துராசாரங்களை நடத்திக்கொண்டு போருமவனாயிருக்கையாலே சதுர்த்தவர்ணப்ராயனும் ஸத்வைஸ்யன் என்று சொல்லும்படியன்றிக்கேயிருப்பன் என்கை. சூத்ரன்— அர்த்தகாமங்கள் நிமித்தமாக ஸ்வதர்மமான க்ருஷியும் ப்ராத்யுன்னதி நால்வர்க்கும்

ஶுஶ்ரூஷை பண்ணுமதுக்கர்த்தவ்யமாயிருக்க அத்தைவிட்டு ப்ராஹ்மணர் பண்ணும் தபஸ்ஸையும், க்ஷத்ரியன் பண்ணும் தண்டயுத்தங்களையும், வைஶ்யன் பண்ணும் வாணிஜ்யத்தையும் பரிக்ரஹித்து, கிஞ்சித் ஐஶ்வர்யத்தையுடையவனுடன் அஹங்காரத் தாலே ப்ராஹ்மணனுடன் ஸ்பர்த்தீ பரிக்ரஹம் பண்ணி பரநிந்தாப்ரஸங்கம் பண்ணுமவனாய், ஸச்சூத்ரன் என்னும்படியன்றிக்கேயிருப்பன் என்கை. இதுக்கு த்ருஷ்டாந்தம்:— ஸ்ரீராமாயணத்தில் வைஶ்ய ஸ்த்ரீஸம்பந்தியாய்-ஶம்புகன் என்ற பேருடையனான ஶூத்ரன் பாஹ்யமான தபஸ்ஸை யவலம்பித்து பஞ்சாக்நி மத்யத்திலே மிக்க தலையாக மேல்காலாக நின்று தபஸ்ஸு பண்ணின கதையுண்டு. அங்கே கண்டுகொள்வது.

இப்படி ப்ராஹ்மணாதிசதுர்வர்ணமான அதிகாரிகள் தங்களுடைய வர்ணதர்ம ஆஶ்ரமதர்மங்களை அறியாமலேயும் இருப்பர் என்றும் சொல்லுமாம். அஸேவ்யஸேவையைப் பண்ணியும், ஸேவிக்கைக்கு யோக்யராகாத மநுஷ்யருடைய ஸேவையைப்பண்ணியும், பூதஹிம்ஸை பண்ணியும், அர்த்தகாமநிமித்தமாக மநுஷ்யாதி ஹிம்ஸைகள் பண்ணியும், பரதாரபரத்ரவ்யாபஹாரம் பண்ணியும், பதார அபஹாரமும் பாத்ரஸ்வ அபஹாரமும் பண்ணியும், ஸம்ஸாரவர்த்தகராய், (ஸம்ஸாரவர்த்தி:) என்னும்படி ஸம்ஸாரத்தை வ்ருத்தியாக்குமவர்களாய் அதாவது வர்த்திப்பிக்குமவர்களாய், பகவத்விமுகரானசேதனர் பகவானுக்கபிமுகரன்றிக்கேயிருக்கிற சேதனர்.

(அவ) இனிமேல் கேவலன்படியை அருளிச்செய்கிறார்— (கேவலனானவன்) என்று தொடங்கி.

௧௫. கேவலனானவன்-தனிப்பட்டுத் தேஶிகஸம்ஸ்ருஷ்டி பாகங்களாலே நலிவுபட்டவன் பக்ஷபாதஸ்ய விவேகம்பண்ணமாட்டாதே தன்னுடம்பைத் தானே ஜீவித்து ப்ராணங்களை மாட்டுப்போல, ஸம்ஸாரதாவாக்நியாலே தப்தனானவன், ஸம்ஸாரதுக்க நிவ்ருத்திக்குறுப்பாக ஶாஸ்த்ரஜந்ய ஜ்ஞானத்தாலே ப்ரக்ருதி ஆத்மவிவேகம் பண்ணி, ப்ரக்ருதி-துக்காஸ்பதமாய் ஹேயபதார்த்தஸமுதாயமாயிருக்கிறவாகாரத்தையும் ஆத்மா ப்ரக்ருதேபரனாய் பஞ்சவிம்ஶகனாய், ஸ்வயம் ப்ரகாசனாய், ஸ்வதஸ்ஸுகியாய், நித்யனாய் அப்ராக்ருதனாயிருக்கிற வகாரத்தையுமநுஸந்தித்து முன்பு தான்பட்ட துக்கத்தின்

உபகத்தாலே இவ்வபரனத்திலே நல்நாழ்ந்து உணர்முழுநலமான பரமாத்ம விவேகம் பண்ணமாட்டாதே, அம்ருத வெள்ளத்தாலுஞ் சிறப்புவிட்டு பகவத் ப்ராப்திக்கு சாதனமான ஜ்ஞானயோகத்திலே நின்றாலும், யோகபலமான ஆத்மாநுபவமாத்ரத்தையே புருஷார்த்தமாக அநுபவித்து, பின்பு எம்பெருமானைப் பற்றும் பகவத் ப்ராப்தியுமற்று, யாவதாத்மபாவி அசரீரியாய்க் கொண்டிருப்பவர்.

(வ்யா) அதாவது கேவலன் ஆவான் கேவலன் என்கிறவன் ஆகிறவன், நலிவிடத்திலே ஏகாந்த ஸ்தலத்திலே, அதாவது — பசிவிடாய்களைத் தணிப்பிக்கும் பதார்த்தங்கள் ஒப்பில்லாத ஸ்தானத்திலே, மிகவும் அதிகமாகவும், கஷ்டத்தினாலேயானவைகளாலே, பசியாலும் தாகத்தாலேயும், நலிவுபட்டவன் - ம்ருமப்பட்டவன், பாதைப்பட்டவன் என்றபடி, பக்ஷ்ய அபக்ஷ்ய விவேகம் பண்ணமாட்டாதே - பக்ஷ்ய விவேகம் ஆவது ஏதி என்றும் - அநுபவிக்கைக்கு போக்யமான த்ரவ்யம் என்று தெரியாதது, அதுக்கு அமர்த்தனான் நிற்கவிருக்குமது, அபக்ஷ்ய விவேகம் என்கிறது ஏதி என்றும், அநுபவிக்கைக்கு யோக்யமான த்ரவ்யம் என்று தெரிவது, அதுக்கு அமர்த்தனான் நிற்கவிருக்குமது. அதுக்கு - அநுபவிக்கைக்கு யோக்யமான த்ரவ்யத்தை அநுபவிக்க யோக்யமாகாதென் றிருக்கையும், அநுபவிக்க யோக்யமாகாத த்ரவ்யத்தை அநுபவிக்கயோக்யமென் றிருக்கையும் ஆமாம்; தன்னுடம்பைத்தானே ஜீவித்து - தன்னுடைய சரீரத்தின் மாம்சத்தைத் தானே பிடுங்கித்தின் றபிழைத்து ப்ராணனைத் தரிப்பவனைப்போலே வ்ரித்தவன் ஆகுமதுபோலே, எம்பெருமானைக் கிட்டாமலே - எம்பெருமாந்

(அரு.) கேவலம் - அற்பம், தனிமை, தன்மை, மோக்ஷம்; கேவலர் தநிசியர்; தாவக்தி - காட்டுத்தீ, ஆத்மாநுபவம் - இதனை ஆழ்வார் "குறைவிலமவனையாத்தெரு கோக்க கைவல்யம்விட்ட — இறைவிதப்பென்னும்" என்று அருளிச்செய்தார்.

இவர்களும் "முமுக்ஷு" என்று விவக்ஷிப்பதன்று. பகவத்ப்ராப்திகாமருக்கும் சரீரவிமோசனத்தில் இச்சையுள்ளதுபோல இவர்களுக்கும் அந்த இச்சை வேண்டியதாயிருப்பதால், 'முமுக்ஷு' என்ற பேர் இவ்வழியாலுண்டாயிற்று. 'கேவல' சப்தம், முமுக்ஷுபதத்தில் பகவத்ப்ராப்தியும் சரீரவிமோசனம் இவை இரண்டுமுண்டாயிருக்க சரீரவிமோசனத்தில் மாத்திரம் இச்சை கொண்டபடியால் கேவலசப்தம் பெற்றது.

நின் ஆத்யாத்மிக நிருபாதிகமான அக்நியாலே, ஸம்ஸாரரூப தாவாக்நியா லே என்றுஞ் சொல்லுமாம்; தப்தனானவன், தக்தனானவன், ஸம் ஸாரதுக்கநிவ்ருத்திக்கு உறுப்பாக - ஸம்ஸாரரூபமாயிருக்கிற துக்கம் நிவர்த்தியாவதற்கு அநுகுணமாக, அன்றிக்கே - ஸம்ஸாரத்திலே யிருக்கிற தன்னுடைய துக்கநிவாரணத்துக்கு அம்சமாக என்ன வுமாம்; சாஸ்த்ரஜந்யஜ்ஞாநத்தாலே - சாஸ்த்ர அப்யாஸத்தால் பிறந்த ஜ்ஞாநத்தாலே, ப்ரக்ருதி ஆத்மவிவேகம் பண்ணி - ப்ரக்ரு திக்கும் ஜீவாத்மாவுக்குமுண்டான வ்யாவ்ருத்தியைப் பராமர் சித்து. ப்ரக்ருதி - ப்ரக்ருதியானது, துக்கஸம்மிச்ரமாய் - அவஶ்ய மநுபோக்தவ்யம் என்னும்படியான புண்யபாபரூபகர்மங்களுக்கும் அவற்றின் பலங்களான ஸ்வர்க்கநரக அநுபவங்களுக்கும் 'தஸ் மால்லோகாத் புநரேத்யஸ்மை லோகாய கர்மணே' என்கிறபடியே கம் அநுபவித்த பின்பு வருகிற ஜன்மபரம்பராரூபமான ஸகலதுக்கங் களுக்கும் ஆதாரமாய், ஹேயபதார்த்தஸமுதாயமாயிருக்கிற ஆகாரத் தையும் - "மாம்ஸாஸ்ருக்விண்மூத்ரஸ்நாயுமஜ்ஜாஸ்திஸமுதாய:" என் றும், "அழுக்குடம்பு" என்றும், "பாஞ்சபௌதிகஞ்சஸாவயவத்" என் றும் சொல்லுகிறபடியே, ஹேயமான துக்கங்களையுடைய கூட்டமாயி ருக்கிற ஆகாரத்தையும், ஆகாரங்களையுடைய, ஆத்மா - ஜீவாத்மாவானவன், ப்ரக்ருதேபரனும் - தேஹேந்த்ரியமந:ப்ராணேப்ய: பரன் என்கிறப டியே ப்ரக்ருதியிற் காட்டில் வ்யாவ்ருத்தனும், ஸ்வயம்ப்ரகாசனும் - ஸ்வஜ்ஞாநத்தாலே ப்ரகாசிக்குமவனன்றிக்கே தீபவத் தனக்குத் தானே ப்ரகாசிக்குமவனும், ஸ்வதஸ்ஸுகியாய் - ஆநந்தமே தனக்கு ஸ்வபாவமாகவுடையனாய், நித்யனாய் - நித்யாநாம் என்கிற படியே ப்ரவாஹரூபதயா அநித்யத்வநிசயமுடைய ப்ரக்ருதியைக் காட்டில் நித்யனாய், அநாவ்ருத ஸ்வப்ரகாசத்தனாய்; அப்ராக்ருத னாயிருக்கிற ஆகாரத்தையும் - ப்ரக்ருதியைப்பற்றவுண்டானபோது குணத்ரயவச்யனாய் விடுமிறே. அப்படியன்றிக்கே ஸ்வாபாவிக விசேஷத்தை விசாரிக்குமளவில் ஜ்ஞாநாநந்தமே ஸ்வரூபமாயும், குணங்களில் ப்ராக்ருத குணங்களின்றிக்கேயிருக்கும். ஆகை யாலே குணத்ரயாத்மகனன்றிக்கே யிருக்குமவன் என்றார். "நிஸ் த்ரைகுண்ய:" என்னுமாப்போலே, ஆத்மாவுக்கு இப்படியிருக்கிற ஆகாரத்தையும் அநுஸந்தித்து - உக்தமானபடியே மனத்தாலும், வாயாலும் அநுஸந்தாநம் பண்ணி, முன்பு தான் பட்ட - முன்பு ஆவேதனை என்னில் பிறந்தவன்று தொடங்கியிருந்த ஜன்மபீடாக

வுண்டான காலம் என்னுதல்; அதவா மாத்ருகர்ப்பத்தில் நின்று பிறந்த அன்று தொடங்கித் தனக்கு ஜ்ஞானம் பிறக்குமளவும் பட்ட காலம் என்று சொல்லவுமாம்; பூர்வஜன்மங்களில் பட்ட துக்கம் அப்ரத்யக்ஷமாய் இஜ்ஜன்மத்தில் பட்ட துக்கம் ப்ரத்யக்ஷமாயிருப்பது; இப்படி பூர்வத்தில் தான் அநுபவித்த துக்கத்தின் உபத்ரவமே - துக்கத்தினுடைய அதிசயத்தாலே, அதாவது ஜன்ம பரம்பரையாலும், ஈஸ்வரன் ந்ர்ஹேதுக்ருபையின்றிக்கேயிருக்கையாலும் ஸப்தாதி விஷயப்ராவண்யத்தாலும் ஆக, முன்பு தான் பட்ட துக்காதிசயத்தாலே என்னுதல்; இவ்வம்பரத்திலே கோல்தாழ்ந்து - இந்த ஆத்மாநுபவமாகிற அம்பரத்திலே காலூன்றி தாழ்ந்து என்னுதல், அளற்றிலே கால்சேர்த்து என்னுமாப்போலே; பகவதநுபவத்தைப்பற்ற இவ்வாத்மாநுபவத்தை "அம்பரம்" என்னக்குறையில்லையிறே. உணர்முழுநலமான பரமாத்மவிவேகம் பண்ணமாட்டாதே "முழுவுணர்வு - முழுநலம்" என்று பரமாத்மாக்குப் பர்யாயம். ஸகலஜ்ஞானத்தையுடையனுமாய் ஸகல ஆநந்தத்தை யுடையனுமாயிருக்கை யன்றிக்கே அந்த பரசத்துக்கு அர்த்தம் ஜ்ஞான ஆனந்தங்கள் பரிபூர்ணமாய் உடையனாயிருக்குமவன் என்னுதல், அன்றிக்கே ஸர்வருடைய ஸ்வரூபமெல்லாம் ஜ்ஞானைகமயமாய் இருக்குமென்பது ஸ்வரூபமாகவும் குணமாகவும் சொல்லுமிறே. இப்படியிருக்கிற பரமாத்மாவாகிற ஸர்வேஸ்வரன் பக்கலுண்டான அநுபவாதிசயம் தன் ஸ்வரூபத்துக்குப் ப்ராப்தமல்லவென்று விவேகம் பண்ணமாட்டாதே. அல்பமான ஆத்மாநுபவத்தைக்காட்டில் இவ்வாத்மாவுக்கு ஆத்மாவான அவனுடைய அநுபவமன்றோ இவ்வாத்மாவுக்கு ப்ராப்தமானவை என்று விவேகம் பண்ணமாட்டாதே என்னுதல்; அமுதவெள்ளத்தானாம் சிறப்புவிட்டு - பகவதநுபவாதி அம்ருதப்ரவாஹத்தில் அந்தர்பூதமாகிற ஸம்ருத்தியை விட்டு, இவ்வாத்மப்ராப்திக்கு ஸாதநமான ஜ்ஞானயோகத்திலே நின்றும் இந்த ஆத்மாவை ப்ராபிக்கைக்கு ப்ராபகமான ஸாத்ய ஜ்ஞானயோகத்திலே நிலைநின்றும், இழிந்தவனும் ஸுலபமான ஆத்மாநுபவமாத்ரத்தையே ஜ்ஞானயோகத்துக்குப் பலமான ஆத்மாவினுடைய அநுபவமாத்ரத்தையே புருஷார்த்தமாக அநுபவித்து - பலமாக அநுபவித்து, அநுபவித்து என்றது அநுஸந்தித்து என்னவுமாம்; பின்பு இத்தேஹத்தின் நரகாவஸ்தையில்

ஸரீரவிஶிஷ்டனும் ஆத்ம ஸ்வரூபமாத்ரத்தையே பலமாக அநுப
வித்தபிறகு, ஸம்ஸாரஸம்பந்தமும் - ஸம்ஸாரத்தில் வர்த்திக்குகை
க்குக் காரணமான ஜ்ஞானஸங்கோசரூபகர்மசரீரஸம்பந்தமும்,
பகவத்ப்ராப்தியும் அற்று - பகவானுடைய ப்ராப்தியும் அற்று,
அற்று என்கிற பதத்தை "ஸம்ஸாரஸம்பந்தமும் அற்று" என்றும்
"பகவத்ப்ராப்தியும் அற்று" என்றும் இரண்டிடத்திலும் அந்
வயிக்கக்கடவது; யாவத் ஆத்மபாவி - மேல் ஆத்மா இருக்குமள
வும் அசரீரியாய்க்கொண்டு ஜ்ஞானதேஹமானது போமதுக்காகவும்,
ஸங்குசிதஜ்ஞானனாய் இருக்கைக்காகவும் சொன்னும் பேர் ஜன்
மம் எடுக்கைக்குக் காரணமாம், ஆகையாலே அசரீரத்வம் ஸித்தி
யாமல் ஜ்ஞானஸங்கோசரூபசரீரங்கள் இரண்டும் போனவ
ளவிலே அசரீரத்வம் ஸித்திக்கும், ஆகையாலே "அசரீரியாய்க்
கொண்டு" என்றருளிச்செய்கிறார். "யாவதாத்மபாவி அசரீ
ரியாய்க்கொண்டு" என்றருளிச்செய்கையாலே உபாஸநதசையில்
ஸரீரவிஶிஷ்டனும் உபாஸிக்குமவனாகையாலேயும், பலதசையில்
ஜ்ஞானஸங்கோசரூப ஸரீரவிருத்தியைச் சேர்ந்தவனாகையாலேயும்,
மேல் ஆத்மவஸ்துவானது இருக்குமளவும் அசரீரியாயிருக்கு
மதாகும் என்ற வாக்யத்துக்கு முக்யமான அர்த்தம் ஸித்தார்த்த
மாய்விடுகையாலே, ஜன்மகாரணமான ஸங்கோசஸரீரஸம்பந்தமு
மில்லையென்பது ஸித்தம். "விரஜாயாமவகாஹ்ய ஸோத்தீர்ணே
ஸம்ஸ்ருஷ்டம்" என்கிற பத்மஸம்ஹிதா வசனத்தாலும் - விரஜையின் ஸ்நானம் ஸித்த
மாகையாலே மேலே ஜன்மமெடுக்கைக்குக் காரணமான ஸங்கோச
ஸரீரஸம்பந்தமில்லை என்பது நிச்சிதமாயிற்று. இவன் ஒருவன்
ஸம்ஸாரியாயிருக்குமவன் ஒருவன்.

(அவ.) இனி முமுக்ஷுக்கள் படியை அருளிச்செய்யத் திரு
வுள்ளம்பற்றி முதலில் முமுக்ஷுசப்தத்துக்கு அர்த்தமருளிச்செய்
கிறார்— (மோக்ஷத்தில்) இத்யாதியாலே

௧௧. மோக்ஷத்திலே இச்சையுடையவர்களுக்கு முமு
க்ஷுக்கள் என்று பேராகக்கடவது.

(வ்யா.) அதாவது— 'முக்திர்மோக்ஷ மஹாநந்த:' என்கிற
படியே பகவத்ப்ராப்தியில் இச்சையுடையவர்களுக்கு முமுக்ஷுக்
கள் என்று பேராகக்கடவது என்றபடி; அதவா முமுக்ஷுக்கள்
என்று முச்யமோக்ஷணே என்கிற தாது ஸித்தமாக உண்டான
ஸம்ஸாரவிமோசனத்திலே இச்சையுடையவராகக்கடவது. மோக்ஷத்

த்திலே இச்சை என்று பகவத்ப்ராப்தியில் இச்சையுடையவராயிருக்குமவர்களுக்கு முமுக்ஷுக்கள் என்று பேராகக்கடவது என்றும் சொல்லுமாம், ஸம்ஸாரவிமோசனத்தில் இச்சையுடையவர்களுக்கு "முமுக்ஷுக்கள் என்று பேராகக்கடவது என்றுஞ்சொல்லுமாம்.

(அவ.) அவர்களை என்றுமபேக்ஷையில் அருளிச்செய்கிறார்— (அவர்கள்தான்) என்று தொடங்கி,

கஎ அவர்கள்தான் முமுக்ஷுக்களாய் உபாஸகராய் இருப்பாரும், முமுக்ஷுக்களாய் ப்ரபந்நராயிருப்பாருமாய் இரண்டுபடியாயிருப்பர்.

(வ்யா.) அதாவது— அவர்கள்தான் கீழ் உதாஹரித்த லக்ஷணங்களையுடைய முமுக்ஷுக்கள்தான்; முமுக்ஷுக்களாய் உபாஸகராயிருப்பாரும் - முமுக்ஷுக்களாயிருந்து வைத்து பக்திநிஷ்டராயிருப்பவரும்; முமுக்ஷுக்களாய் ப்ரபந்நராயிருப்பாரும் - முமுக்ஷுக்களாயிருந்து வைத்து ப்ரபத்திநிஷ்டராயிருப்பவரும்; ஆய் ஆகி; இரண்டுபடியாயிருப்பர் - இரண்டு ப்ரகாரம் பட்டிருப்பர். "மோக்ஷத்திலே இச்சையுடையவர்கள்" என்றதில் ப்ரஸ்துதமான பகவத்ப்ராப்திக்கு ஸாதநத்வைவித்யத்தையும், அதிகாரித்வைவித்யத்தையும் தர்சிப்பிக்கக்கடவது.

இப்படி சேதநஸ்வரூபமானது அஞ்சுபடி பட்டிருக்குமதை அருளிச்செய்தாராயிற்று.

(அவ.) அநந்தரம் ஈச்வரனுடைய ஸ்வரூபத்தை விவரிக்கிறார்— (ஈச்வரவிஷயத்தில்) என்று தொடங்கி.

கஅ ஈச்வரவிஷயத்தில் பரத்வமாவது—பரமபதத்திலே "அவாக்யநாதர:" என்றெழுந்தருளியிருக்கிற ஆதியஞ்சோதியுருவான பரவாஸுதேவர்.

அரு:— பரத்வமாவது - 'ஆகாய சக்கரமான ஸமஸ்தபுவனங்களிலுமேலான நாட்டிலே வீற்றிருந்தர்க்கு யோக்யரையும் கொண்டெழுந்தருளியிருக்கும் இருப்பு. "பரத்தேத்தில் ஞானாதிகளாலும் பூர்ணமாயிருக்கும்." பரத்வத்திலிருப்பு— ஸூர்யாஸ்தமித்தமேல் நிலையாயிற நிலவு முற்றத்திலே இனிய சந்தனகுஸுமதாம்பூலாதிகளாலே அலங்கரித்து சத்ரசாமராதிகள் பணிமாற அந்தரங்கர்களுக்கு முகங்கொடுத்து திரிபுவனசக்ரவர்த்தியென்று விருது பிடிக்குமாப்போலவும், பயிருலர்ந்த சடங்கிலே வர்ஷிக்கும் கார்மேகம்போலவும், த்ருஷார்த்தன் நாக்குலர்த்திச்சாவதற்கு மத்யத்திற்குத் தண்ணீர் வார்க்கும் தாயைப்போலவும் இந்த ஆநந்தம் ஜலம்போல் விளைவிக்கப்படப்பட்டிருக்கும்.

(வ்யா.) அதாவது— ஈஶ்வரவிஷயத்தில் பரத்வம் ஆவது:- பரத்வாதி பஞ்சப்ரகாரமான ஈஶ்வரவிஷயத்தில் பரத்வம் ஆகிறது ஆகிறதுதான், பரமபதத்திலே - "தத்விஷ்ணோ: பரமம்பதம்" என்கிறபடியே ஸர்வோத்க்ருஷ்டஸ்தானமான ஸ்ரீவைகுண்டத்திலே 'அவாக்யநாதர:' என்று எழுந்தருளியிருக்கிற - நித்யஸூரிகள் முதலானவர்களோடு வார்த்தைசொல்லாதேயிருக்குமவனாய், ஆதர மன்றிக்கேயிருக்குமவனாய், கம்பீரமாக எழுந்தருளியிருக்குமவனாய், "வார்த்தைசொல்லான் ஆதரியான்" என்கிற இவ்வாக்யத்தாலே எந்த அர்த்தம் நிச்சயித்ததாய்த்து என்னில் அப்பாலவர்களைப் போலே பதறிக்கொண்டு இராதே இருக்கையும், "யேந யேந தாதா கச்சதி" என்றும், 'ஓடும்புள்ளேறி' என்றுஞ் சொல்லுகிற படியே தனக்குத் திருவுள்ளமானபோது ஸஞ்சரிக்கையும், திருவடி மேல்கொண்டு ஸஞ்சரிக்கையும் வேணுமாகில் திருத்துழாயை முடியிலே சூடுகை முதலான சேஷ்டிதங்களைப் பண்ணுகையும், "திருமகள் பூமியேவமற்றமராட்செய்வர்" என்றும், "சூட்டுநன் மாலைகள் தூயனவேந்தி" என்றுஞ்சொல்லுகிறபடியே தன்னுடைய கைங்கர்யத்தாலேயாதல், பெரிய பிராட்டியார் முதலான ஸாம்ப்ரியோர் வேதனையோதல் நித்யஸூரிகள் கைங்கர்யங்களையும், கைங்கர்யமில்லாதபோது அவர்கள் தங்கள் கைகளாலும் நாக்களாலும் பரிசுத்தங்களான திருத்துழாய்மாலை முதலிட்ட பதார்த்தங்களையேந்திக்கொண்டிருக்கவுமான சேஷ்டிதங்களைப் பண்ணுகையும் 'மகனை' என்றபடி வேணுமாகில் ஸங்கல்பமாத்ரத்தாலே ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைப் பண்ணுமவனாயிருக்கையும், வார்த்தை சொல்லுங்காலத்திலே சொல்லுகைக்கு ஸர்ப்பபாடில்லாத காலத்திலே வார்த்தைசொல்லாதிருக்கையும் ஆகிறவை சொல்லப்பட்டன. இங்ஙனன்றிக்கே "எப்போதும் வார்த்தைசொல்லாதிருப்பன்—எப்போதும் ஆதரியாதிருப்பன்" என்று சொன்னால் ஆஶ்ரிதவாத்ஸல்யாதிகளும் அத்தாலந்த ஸௌசீல்யாதிகளும், சைதன்யமும் இன்றிக்கேயொழியும். ஆகையாலே கம்பீரமாக எழுந்தருளியிருக்குமிருப்பைச் சொன்ன ப்ரகாரமாகக்கடவது; ஆத்யந்தஜோதியுருவான பரவாஸுதேவன் - ரூபலாவண்யதாரப் ஸௌந்தர்யமான தேஜஸ்ஸையுடைத்தான திருமேனியையுடையரான பரவாஸுதேவர். அதவா ப்ரதமதேஜோ ரூபமான ஸ்வரூபத்தையுடையரான பரவாஸுதேவர் என்றும்

சொல்லுமாம். "பரவாஸுதேவ" என்றது வ்யூஹவாஸுதேவ ஸ்ருக்கையாலே, பரசப்தத்துக்கு "பர:" என்ற ஸ்ருஷ்டிப்பதை தத்தைப் பற்றச்சொல்லுதல், 'வாஸுதேவ' சப்தத்திற்கு வாஸுதேவாய என்று ஸ்ருதி சொன்னபடியே 'ஸர்வத்ராஸௌ' என்னும் படி ஸகல பதார்த்தங்களிலும் நித்யவாஸம்பண்ணிக்கொண்டிருக்குமவன் என்று சொன்னபடி.

(அவ) வ்யூஹத்தை அருளிச்செய்கிறார் மேல்— (வ்யூஹமாவது) என்று தொடங்கி,

௧௯ வ்யூஹமாவது ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களான ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்கள்.

(வ்யா) அதாவது— வ்யூஹமாவது - வ்யூஹங்களாகுமவை, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களான ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்கள் - "தத்வஜ்ஞாநபலத்...த்வாத்" என்கிறபடியே ஜ்ஞாநபலங்கள் இரண்டோடுங்கூடி ஸம்ஹாரகர்த்தாவான ஸங்கர்ஷணரும், "ஐச்வர்யவீர்யஸம்பேதாத்" என்கிறபடியே ஐச்வர்ய வீர்யங்கள் இரண்டோடுங்கூடி ஸ்ருஷ்டி கர்த்தாவான ப்ரத்யும்நரும், "சக்தி தேஜஸமுத்கர்ஷாத்" என்கிறபடியே சக்தி தேஜஸ்ஸுக்கள் இரண்டோடுங்கூடி ஸ்திதிகர்த்தாவான அநிருத்தரும், 'ஷாட்குண்யாத்வாஸுதேவ:' என்று பட்டர் அருளிச்செய்தபடியே அவர் மூவருடனே வ்யூஹவாஸுதேவனையுங்கூட்டி வ்யூஹசதுஷ்டயமென்றுஞ்சொல்லுவர்கள். ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைப் பண்ணும் வ்யூஹங்கள் மூன்று.

(அவ.) விபவத்தின் படியை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்— (விபவமாவது) என்று தொடங்கி.

௨௰ விபவமாவது ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள்.

(வ்யா.) அதாவது— விபவம் ஆவது - அநேகாவதாரங்களுமான, ராமக்ருஷ்ணாதி அவதாரங்கள் - ஸ்ரீராமாவதாரமும், ஸ்ரீக்ருஷ்ண

அரு— வ்யூஹம் பாற்கடல்போலே சென்று காணவரிதாம்படியிருக்கும். இது "பரவேதநாருமிருப்பதொரு தண்ணீர் ஒரு தேசாந்தரத்திற்குக்கொடுத்த த்ரவ்யத்தை மாறு ரோகவிசேஷ வைத்து விபஜித்துக் கொள்ளுமோபாதி அதிரஸ்யமான அவாப்தி

விபவம்:— பெருக்காறுபோலே, தத்காலவர்த்திகளுக்கு ஆச்ரயணீயமாயிருக்கும். இது "குணவத்தர ப்ரவாஹேதநத்தில் குணவான்களைக் கைக்கொள்ளும் பிதாவேயபாதியும் கண்டவர்க்கும் போலவுமாமது."

அவதாரமும், ஆதிசப்தத்தாலே மத்ஸ்யகூர்மவராஹாதி அவதாரங்களை பராமர்சிக்கிறது.

(அவ.) இனிமேல் அந்தர்யாமித்வத்தையுபபாதிக்கிறார் — (அந்தர்யாமித்வம்) என்று தொடங்கி.

உக _ அந்தர்யாமித்வம் இரண்டுபடிப்பட்டிருக்கும்.

(வ்யா.) அதாவது— அந்தர்யாமித்வம் இரண்டுபடிபட்டிருக்கும் - அந்தர்யாமித்வமானது இரண்டுப்ரகாரமாயிருக்கும்.

(அவ.) கீழ் "அந்தர்யாமித்வம் இரண்டுபடி பட்டிருக்கும்" என்றது ஸ்வரூபவ்யாப்தியையும், விக்ரஹவ்யாப்தியையுமிறே. அவற்றை விவரிக்கிறார் — (அதாவது) என்று தொடங்கி.

உஉ. அதாவது 'அடியேனுள்ளான்' என்றும், 'எனதாவி' என்றும், 'என்னுயிர்' என்றும் சொல்லுகிறபடியே ஆத்மாவுக்குள்ளும், 'போதிற்கமலமென்னெஞ்சம்புகுந்து' என்றும், அ

விபவம் அநந்தமாய் கௌணமுக்யபேதத்தாலே பேதித்திருக்கும். மத்ஸ்யத்வம், திர்யக்த்வம்போலே கௌணத்வமும் இச்சையாலே வந்தது, ஸ்வரூபேண அன்று. அதில் அப்ராக்ருதவிக்ரஹங்களுமாய், அஜஹத்ஸ்வபாவ விபவங்களுமாம். தீபாத்துத்பன்ன ப்ரதீபம்போலேயிருக்கக்கடவதான முக்ய ப்ராதுர்பாவங்களெல்லாம் முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யங்களாயிருக்கும். விதி, சிவ, பாவக, வ்யாஸ, ஜாமதக்ன்யார்ஜுன, வித்தேசாதிகளாகிற கௌணப்ராதுர்பாவங்களெல்லாம் அஹங்காரயுக்த ஜீவர்களை அதிஷ்டித்து நிற்கையாலே முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்யங்கள். நித்யோதித சாந்தோதித பேதமும் ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்தியான சதுராத்மயமும் கேசவாதி மூர்த்யந்தரமும், ஷட்த்ரிம்சத் பேதபின்னமான பத்மநாபாதி விபவமும், உபேந்த்ர த்ரிவிக்ரம ததிபக்த ஹயக்ரீவ நாராயண ஹரிக்ருஷ்ண மத்ஸ்யகூர்மவராஹாதியவதாரவிசேஷங்களும் [illegible] ப்ராதுர்பாவ [illegible] பேதங்களும், அவதாரங்களுமாய் [illegible] மாய் இருக்கையாலே சொல்லுகிறிலோம். அவதாரங்களுக்கு ஹேது - இச்சை, பலம் - ஸாது பரித்ராணாதித்ரயம். ப்ரமாணங்களிலும் [illegible] ஸாபாதிகளாலே பிறந்தானென்கையாலே அவதாரங்களுக்குஹேது கர்மமாய் வேண்டாவோவென்னில்; அவையனைத்திலே ஸாபம் வ்யாஜம், அவதாரம் இச்சையென்று பரிஹரித்தது.

22. அந்தர்யாமித்வம்:— "அந்த:ப்ரவிஷ்டஸ்ஸாஸ்தா [illegible]" ஸர்வ [illegible] ப்ரவேசாதி ஸர்வவஸ்துக்களிலும் ஸகல சேதநர்களுக்கும் துணையாய், அவர்களை விடாதே நித்யம் நிற்கும்படியே [illegible]

வித்தப்பாவையும் தானுமகம்படிவந்து புகுந்து' என்றும், 'புந்தியில் புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்தவழகன்' என்றும், 'உள்ளுவாருள்ளத்தெல்லாமுடனிருந்தறிதி' என்றும் சொல்லுகிறபடியே லக்ஷ்மீஸஹிதனாய் விலக்ஷணவிக்ரஹயுக்தனாய்க்கொண்டு ஹ்ருதயகமலத்துள்ளும் ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் ஸாவலோகனம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்குமிருப்பு.

(வ்யா.) அதாவது— அதாவது - அந்தவிரண்டு ப்ரகாரமாயிருக்கும் வ்யாப்திகளாவன. 'அடியேனுள்ளான்' என்று தொடங்கி 'ஆத்மாவுக்குள்ளும்' என்கிற வாக்யத்தளவாக ஸ்வரூப வ்யாப்தியைச்சொல்லுகிறது, 'போதிற்கமலமென்னெஞ்சம் புகுந்த' என்று தொடங்கி 'ஸாவலோகனம் பண்ணிக்கொண்டும்' என்னுமளவாக விக்ரஹவ்யாப்தியைச் சொல்லுகிறது.

அவ்விரண்டிலும் முந்துற ஸ்வரூபவ்யாப்தியையருளிச்செய்கிறார். 'அடியேனுள்ளான்' என்றும் தாஸபூதனான என்னுள்ளே உள்ளவன் என்றும், 'என்னதாவி' என்றும் என்னுடைய ஆத்மா என்றும், என்னுயிர் என்றுஞ் சொல்லுகிறபடியே எனக்கு ப்ராணபூதன் என்றுஞ் சொல்லுகிற ப்ரகாரமே. அதாவது "யஸ்யாத்மா ஶரீரம்" என்கிறபடியே என்னைத் தனக்கு ஶரீரமாகக்கொண்டு தான் ஶரீரியாய், தாரகனாயிருக்கும் என்னுமர்த்தமும் சொல்ல வேண்டுமென்கிறதன்றே. ஆத்மாவுக்குள்ளும் "அந்த:ப்ரவிஷ்ட:" என்கிறபடியே ஆத்மாவுக்குள்ளேயிருக்கிற இருப்பும், ஆத்மாவுக்குள்ளேயிருக்கிற இருப்பு ஸ்வரூபவ்யாப்தி, அத்தைச்சொன்னபடி.

மேல் விக்ரஹவ்யாப்தியைச் சொல்லுகிறது. அதாவது— 'போதில் கமலம் என் நெஞ்சம் புகுந்து' என்றும், போதிற்கமலம் என்றது காலத்தில் விகஸிக்கிற கமலம் என்றபடி, அதுபோலே யிருக்கிற என்னுடைய ஹ்ருதயகமலத்தில் ப்ரவேஶித்து என்றவும், அதவா, போதில்கமலம் என்றதுக்கு ஸங்கோசமின்றிக்கே மிக

திருமேனியோடே கூடிக்கொண்டு, அவர்களுக்கு த்யேயமாகைக்காகவும், அவர்களை ரக்ஷிக்கைக்காகவும், பர்யங்கஸ்தனாய்க்கொண்டு ஹ்ருதயகமலத்திலே எழுந்தருளியிருக்குமிருப்பு.

இது, பூதஜலம்போலே, "லக்ஷ்மீ" என்கிறபடி கண்ணுக்கு அவ்யோகத்தாலல்லாமல், விஷயமாகாமலிருக்கை. "ஸம் ஸத்ய

விக்கும் என்னுடைய ஹ்ருத்பத்மம் என்னவுமாம். ஸத்ஸகடா
ஸஹம் பெற்றவர்களுக்கு ஹ்ருத்பத்மமானது எப்போதும் விகஸித்
திருக்குமாகையாலே [illegible]. "பாலின்நீர்மையும் நானும் அருளப்
படி வந்து புகுந்து" என்றும் கீதாசார்யனோடே கூடவிருக்கும்
போது நாமரூபங்களையுடையான பிராட்டியும் தானுமான அத்யந்த
மான திருமேனியோடே வந்து ப்ரவேசித்து என்னவும், "அகம்"
என்று இவனுடைய ஹ்ருதயம் என்னும் அர்த்தத்தையும், படி
என்று அவனுடைய திருமேனி என்னும் அர்த்தத்தையும் சொல்லு
வதாம்; "புந்தியில் புகுந்து தன்பால் ஆதரம் பெருகவைத்த அழகன்"
என்னும் புந்தி என்று புத்தி என்றதாய் அதனால் மனஸ்ஸாய் புத்தி
என்னும் [illegible] தோன்றும்படி [illegible] சொன்ன
படி. அன்றியிலே புந்தி என்று சரீரத்துக்கும் வாசகமாயிருக்கிறது;
புந்தியில் புகுந்து என்னுடைய ஹ்ருதயத்தில் தன்னுடைய திரு
மேனியை வைத்து அதனை என் சரீரத்தில் தீர்த்தனோடே கூட
ப்ரவேசித்து என்னவுமாம். தன்பால் ஆதரம் பெருகவைத்த
அழகன் — தன் பக்கலிலே எனக்கு ஆதரம் பெருகுமிருக்கும்படி தன்
னுடைய திருமேனியை வைத்த அழகன், என்னுடைய ஹ்ருதயத்
தில் தன்னுடைய திருமேனியைப் புகுரவைத்து தன் பக்கல் ஆத
ரம் பெருகுமிருக்கும்படி வைத்த அழகன் என்னவுமாம். பெருக
வைத்த அநுபவத்தை தன்னோடே ஒக்கவே பெறும்படி
வைத்த. 'வைத்த அழகன்' என்றதுக்கு தன் பக்கலிலே எனக்கு
ஆதரம் பெருகுகைக்காக என் புந்தியில் தன்னை வைத்த அழகன்
என்னவுமாம். அழகன் "போரார் [illegible] கையில் [illegible]
[illegible]" என்கிறபடியே அழகையே நிரூபகமாக உடையவன்.
"உன்னுவார் உள்ளத்தெல்லாம் உடன் இருந்து அறிதி" என்றும்
சொல்லுகிறபடியே தன் பக்கலிலே மனஸ்ஸையுடையவர் மனஸ்ஸி
லேயெல்லாம் திருமேனியோடே கூடவிருந்து "பக்கம் நோக்கி
நிற்பன்" என்னும்படி [illegible] பரிச்
சேதித்திருப்பன் என்று சொல்லுகிறபடியே. அதனை "உன்
னுவார் உள்ளத்தெல்லாம் உடன் இருந்து அறிதி" என்ற பாட

[illegible] அறியாதபடி [illegible] என்னும் [illegible],
[illegible] உதரத்திலே [illegible] காட்டியும், [illegible]
[illegible] பின்னே [illegible]
[illegible] [illegible] அதின் [illegible]
திலே இருந்த [illegible] அதன் [illegible] அதன் [illegible] [illegible]

மாம்போது, கீழ்வழக்கு வாய்த்தமைப்பத்தியிருக்கையாலே அநுஸந்திப்பார். அநுஸந்திக்குமது என்னவென்னில் கூட இருந்து பரிச் சேதிப்பதி என்றுஞ்சொல்லுகிறப்ரகாரமே என்னவுமாம், லக்ஷ்மீ வல்லபனாய் - பிராட்டியோடே கூடினவனாய், விலக்ஷணவிக்ரஹ யுக்தனாய்க் கொண்டு - விலக்ஷணமாக இருக்கிற விக்ரஹத்தைத் தருக்கொண்டு, ஹ்ருத்கமலத்துக்குள்ளே "த்யாயாமீத்ருஸ" இத்யாதிப்படியே ஆத்மாவோடே கூட ஹ்ருதயபத்மத்திலே இப்படி ஸ்வரூபவ்யாப்தியையும், விக்ரஹவ்யாப்தியையுமுடையவனாய்க் கொண்டு, ஆத்மாவோடே கூட உபாஸகருடையவும், ப்ரபந்நருடையவும், ஹ்ருதயபத்மங்களிலே இரண்டு வ்யாப்தியாலும் நக்கும். மற்ற ஸகல சேதநருடைய ஹ்ருதயகமலங்களிலே ஸ்வரூப வ்யாப்தியாலேயிருக்கும் என்றும் அதிகாரிஜ்ஞனாக விக்ரஹ வ்யாப்தியாலிருப்பதாகச் சொல்லுவார்கள். ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் சேதநருடைய ஸகல ப்ரவ்ருத்திகளையும், ஸகல நிவ்ருத்திகளையும், அவை எவை என்னில்— வேதமானது சேதநனைக் குறித்து— 'இதம் குரு இதம்மாகார்ஷீ:' என்று புண்யகர்மத்தில் ப்ரவ்ருத்தியும், பாபகர்மத்தில், நிவ்ருத்தியும், விதிக்குமதாயிருக்க, அப்படிச்செய்யாதே பண்ணவொண்ணாதென்று விதித்த பாபகர்மத்தில் ப்ரவ்ருத்தியும், பண்ணு என்று விதித்த புண்யகர்மத்தில் நிவ்ருத்தியும் உடையனாயிருக்கை; சேதநருடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் இப்படியிருக்குமிறே, பகவத்விஷயத்திலும் கைவல்யத்திலும், ஐச்வர்யாதி இதர புருஷார்த்தங்களிலும் அந்வயிக்கும் கார்யம் முதலிலே விகல்பமிறே; ஆனால் இவனுக்குள்ள கர்த்தவ்யத்தில் ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளுடைய அந்வயமுண்டென்னும் ஸாத்ருபேடதி நிவ்ருத்தி வேணும்என்றும், அக்ஷரார்த்திகளில் ப்ரவ்ருத்தி வேணுமென்றும் பார்த்து இவன் ப்ரவ்ருத்திக்கிறது. ஸம்ஷிஷ்டனுக்கு "தர்மப்ஜாதாத்தம் ஞானிமதே" என்று ச்ருதி விதித்தபடியே பகவதநுபவாதிகளிலும், ஆத்மாநுபவத்திலும் நிவ்ருத்தியும் ஐச்வர்யவிஷயத்திலும், ஸ்வர்க்காதி ஆமுஷ்மிகவிஷயத்திலும் ப்ரவ்ருத்தி உண்டாயிருக்கும். ஜ்ஞாநநிஷ்டனுக்கு இதர விஷயங்கள்

மப்போலவும், இராமடம் வெட்டுவலைப்போலவும், உணவில் மாவைக் கடிக்குமென்று உதக்கத்தில் மாமும் சேறும் பூசிப்பிக்கும் மதாரவைப் போலவும் அத்யந்த யாமித்தவும்". இன்னமும், சேதநசேதனங்கள் சத்தை பெறவும், தான் ஆனந்தமுடைய அடியார்கள் நிறத்தில் "தெளிந்தேன்

ளுடையவும் ஸம்ஸாரிகளுடையவும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள், ஸாதி ப்ரவ்ரு
மனவும் ஆத்மஸ்வரூபத்தில் ப்ரவ்ருத்தியும், ஸமஸ்த பரித்யாகமின்றி
பகவத்விஷயத்தில் ப்ரவ்ருத்தியும், இரண்டுமுண்டாயிருக்கும். பகவத்
விஷயத்தில் ஜ்ஞானயோகநிஷ்டனானவனைப் பற்றிச் சொன்னது.
கேவலனுக்கு இதர விஷயங்களில் நின்றும் நிவ்ருத்தியும்,
ஸாத்யமான ஆத்மாநுபவத்திலே ப்ரவ்ருத்தியும்; அதுக்கு ஸாதந
மாக பகவத்விஷயப்ரவ்ருத்தியும் இரண்டுமுண்டாயிருக்கும். பக
வத்விஷயத்தில் பக்திநிஷ்டனான உபாஸகனுக்கு பகவத்விஷயத்
தில் ஸ்வயத்ந ஸ்வரூபபக்தியின் ஸாதநத்வப்ரவ்ருத்தியும், வைஷ
யத்திலும் ஸ்வர்க்காதிகளிலும் நிவ்ருத்தியும் உண்டாயிருக்கும்.
ப்ரபந்நனுக்கு ஸ்வதந்த்ரமாகவும் ஸாதநமாகவும் பகவத்விஷய ப்ர
வ்ருத்தியும் உபாஸகனுக்குண்டான ஸ்வயத்நரூபஸாதநப்ரவ்ருத்தி
யில் நிவ்ருத்தியும் உண்டாயிருக்கும்; ஆசார்யாபிமான நிஷ்ட
னுக்கு "வித்திர்பவதி நாசேத்" இத்யாதிப்படி ஸ்வாபாதந்த்ர்ய
பக்தி நிவ்ருத்தியும் ஆசார்யாபிமானநிஷ்டர் பக்கல் ப்ரவ்ருத்தியும்
உண்டாயிருக்கும். பரமபதத்திலே நித்யர்க்கும் முக்தர்க்கும்
"மருத்தோங்கள்போலமிழ்ச்சிக்கு" என்று எங்களுடைய ஸ்வ
போக்த்ருத்வாதிதோஷங்களுக்கு மருந்தானவனே என்று அநு
ஸந்தித்து ஸ்வபோக்த்ருத்வாதி தோஷங்களில் நிவ்ருத்தியும், பகவ
தநுபவாதிகளில் ப்ரவ்ருத்தியும் உண்டாயிருக்கும். இப்படி நித்ய
முக்தருடையவும், ஆசார்யாபிமான நிஷ்டருடையவும், ப்ரபந்நரு
டையவும், உபாஸகருடையவும், கேவலருடையவும், கர்மயோக
நிஷ்டருடையவும் ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் என்கை. ஸதா
வலோகனம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கும் இருப்பு
எப்போதும் பார்த்துக்கொண்டும், இப்படியிரண்டு ப்ரகாரங்களை
யும் "அஹம்ஸ்ரக்ஷ:" என்னும்படி ப்ரக்ருதி புருஷர்களுக்குண்
டான விகாராதிதோஷங்களில் பற்றின்றிக்கே, ஹேயப்ரத்யநீகனாய்க்
கொண்டு எழுந்தருளியிருக்கும் இருப்பு என்கை. (௨௯)

(அவ.) இனி அர்ச்சாவதாரத்தை உபபாதிக்கிறார் மேல்
(அர்ச்சாவதாரமாவது) என்று தொடங்கி.

கிக்குமையல்குழியாதே" என்றும், "தேனும் பாலும் கன்னலும் அமுத
மாகி தித்தித்து என் னாவினுயிர்த்தூண்டில் நின்றவொன்றைபுணர்ச்
தே(?)" என்ற உக்தே வர்த்தல்.

உக. அர்ச்சாவதாரமாவது— "தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவந்தானே தமருகந்ததெப்பேர் மற்றப்பேர்" என்கிறபடியே தனக்கென்ன ஒருருவும் ஓர் பேருமின்றிக்கே, ஆச்ரிதருகந்தவடிவே வடிவாகவும், அவர்களிட்ட பேரே பேராகவும், ஸர்வஜ்ஞனாய் இருக்கச்செய்தே அஜ்ஞனைப்போலேயும், ஸர்வசக்தனாயிருக்கச்செய்தே அசக்தனைப்போலேயும், அவாப்தஸமஸ்தகாமனாயிருக்கச்செய்தே ஸாபேக்ஷனைப்போலேயும், ரக்ஷகனாயிருக்கச்செய்தே ரக்ஷ்யம்போலேயும், ஸ்வஸ்வாமிபாவத்தை மாறாடிக்கொண்டு கண்ணுக்கு விஷயமாம்படி ஸர்வஸுலபனாய்க்கொண்டு கோயில்களிலும், க்ருஹங்களிலும் தேசகாலாவதியின்றிக்கே யெழுந்தருளியிருக்கும் நிலை.

(வ்யா) அதாவது— அர்ச்சாவதாரம் ஆவது - அர்ச்சாவதாரம் ஆகிறது. "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவந்தானே - தமர் உகந்தது எப்பேர் மற்று அப்பேர்" என்கிறபடியே "ஸ்வஸ்வாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரகல்பயதி சேதநம் க்ருத்வா [illegible] [illegible]" என்கிறபடியே ஆச்ரிதர் உகந்தவையான ஸ்வர்ண ரஜத தாம்ர தாரு சிலா ம்ருண்மயங்களான த்ரவ்யங்களை கொண்டு ஒரு திருமேனியைச் சேர்த்தார்களோ, அப்படியே ஏகத்ரவ்யம் என்றும், அசேதனத்ரவ்யம் என்றும் பாராமல் தனக்குத் திருமேனியாக பரிக்ரஹித்தருளுமவனும், ஆச்ரிதர் உகந்த எந்த திருநாமத்தையிட்டார்களோ, அந்த திருநாமமே திருநாமமாக ப்ரஹ்மிக்குமவனும் என்று சொல்லுகிற அருளிச்செயலின் படியே, தனக்கென்ன ஒருருவும் ஓர் பேருமின்றிக்கே தனக்கு இந்தத் திருமேனி வேணும், இந்தத் திருமேனி வேணும் என்கிற நிர்ப்பந்தமில்லாமலேயே, ஆச்ரிதர் உகந்தவடிவே வடிவாகவும், அவர்கள் இட்ட பெயரே பெயர் ஆகவும் - ஆச்ரயித்தவர்கள் ஆனவர்கள் தாங்களுகந்து ஏதேனும் ஒரு த்ரவ்யத்தாலே விக்ரஹத்

அர்ச்சாவதாரம்:— குணபூர்த்தியுள்ளவிடமாயும், ப்ரபத்தி பண்ணும் முக்ய ஸ்தலமாயுமானது. இது இருட்டறையில் விளக்குப்போல ப்ரகாசிப்பது. தேக்கின மடுக்கள்போலுள்ளது. "[illegible] [illegible] [illegible] செஞ்சிறை [illegible] [illegible] அழுந்தும் [illegible] [illegible]" என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி. சேதனர்க்கு [illegible] ஸ்தலங்களிலே தேசகால அதிகாரி நியதியில்லாதபடி ஸந்நிதி பண்ணும்

தைப் பண்ண என்றால் கல்லையென்று அப்படியே அந்த விக்ரஹத்தில் அஸாதாரணமான அதிஷ்டானவிசேஷத்தை அதிஷ்டித்து அதுவே தனக்கு அஸாதாரணமான திருமேனியாக பரிக்ரஹித்தும், "என்னுடைய ராமன், என்னுடைய க்ருஷ்ணன்" என்னும்படி அவர்கள் உகப்பாலேயிட்ட திருநாமமே தனக்குத் திருநாமமாக அங்கீகரித்தும்; ஸர்வஜ்ஞனாயிருக்கச்செய்தே அஜ்ஞனைப் போலேயும் 'அஸர்வஜ்ஞ:' என்கிறபடியே தன் கார்யமும் பிறர் கார்யமுமெல்லாம் அறிந்திருக்கச்செய்தேயும் இழவு பேறுகள் தன்னதென்றறியாத அஜ்ஞனைப்போலேயும் ஸர்வஶக்தியாயிருக்கச் செய்தே அஶக்தனைப்போலேயும் 'ஸர்வ ஶக்தி:' என்றும் 'ஸர்வ ஶக்தி:' என்றும் சொல்லுகிறபடியே கார்யங்களைச் செய்யுமளவில் எத்தனை ஸர்வஜ்ஞத்வமுண்டானாலும் ஶக்தியில்லாதபோது கடாக்ஷமாகவே அதுக்காக ஸர்வஶக்தி ஸம்பந்நனாயிருக்கச்செய்தே 'அஶக்தஇவ சேஷ்டதே' என்னும்படி ஸ்வவ்யாபாரங்களைப் பண்ணுகைக்கேற்ற ஶக்தியில்லாத அசக்தனைப்போலும், அவாப்த ஸமஸ்தகாமனாயிருக்கச்செய்தே ஸாபேக்ஷனைப்போலேயும் "வெ ணைக் காணாத், தத்த்யாப்யராந்த இவ கேஸவதே" என்றும், 'நாக் கொண்டு மானிடம் பாட" என்னும் பாட்டிலும், 'குன்றனும்' என்கிற பாட்டிலும் ஸாரஸ்யத்திலும், ஆழ்வார் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களிலும் சொல்லுகிறபடியே தான் ஸமஸ்தகாமங்களையும் பெறாதிருக்கிறவனாய், ஆஶ்ரிதர்க்கு ஐஹிக ஆமுஷ்மிகரூபமான அபீஷ்டங்களையும் கொடுக்குமவனாகவிருக்கச்செய்தே 'தநிச்சயா' என்கிறபடியே லோகத்திலேயொருவன் பசியாலும் தாகத்தாலும் நலிவுபட்டு, ஆரேனும் இத்தனை சோறுந்தண்ணீருங்கொடுக்குமவர்களுண்டோ இல்லையோ என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்குமாப்போலே அவனும் தன்னையழிக்

க்ஷணக்கணாம். "ராஜமஹிஷி தன் பர்த்தாவினுடைய பூம்படுக்கையிற் கட்டின் ப்ரஜையினுடைய தொட்டில் காத்தலே போக்யமாக வந்து கிடக்குமாப்போலேயும் கோயில் திருமலை பெருமாள்கோயில் தொடக்கமான அர்ச்சாஸ்தலங்கள்." இவை ஸ்வயம்வ்யக்தம், தைவம், ஸைத்தம், மாநுஷம் என்று சதுர்விதமாயிருக்கும். ஸ்வயம்வ்யக்தமாவது - ஒருவனுடைய ப்ரதிஷ்டையின்றிக்கேதானே ஆவிர்பவித்த ப்ரஸித்தமான ஸ்ரீரங்கவிமானாதிகள், தைவமாவது - ப்ரஹ்மாதிகளாலே ப்ரதிஷ்டிப்பிக்கப்பட்ட காஞ்சி முதலான திவ்யதேசங்களிலெழுந்தருளியிருக்கும் ஸ்

ருமவர்களாகவுமாம், எவரேனுமாகவுமாம் எனக்கித்தனை சோறும் தண்ணீருங்கொடுக்குமவர்களுண்டோ இல்லையோ என்று அவர் கள் அவஸரப்ரதீக்ஷனாயிருக்குமதுபோலவும், ஸர்வரக்ஷகனா யிருக்கச்செய்தே ரக்ஷ்யம்போலேயும் அகாரத்தில் 'அவ—ரக்ஷணே' என்கிற தாதுஸித்தமான ரக்ஷித்ருத்வ அகாரவாச்யத்வம் தன் பக்கலிருக்கச்செய்தேயும், தன்னையாஶ்ரயித்த ஜ்ஞாநிகளுக்குப் பாதந்த்ரனாயிருக்குமாத்ரமன்றிக்கே, பக்தரான ஸம்ஸாரிகளுக் கும் க்ருபாபரவஶனாய்க்கொண்டு ரக்ஷ்யபூதனாயிருக்குமிருப்பைச் சொன்னபடி. எங்ஙனே என்னில் 'கைங்கர்யமுபஜீவந்தே' என் றும், 'ஸுக்ரீவம் ஶரணமிச்சந்தி' என்று சொல்லுகிறபடியே ஜ்ஞாநவான்களான விஶ்வாமித்ரர் பக்கலிலும், மஹாராஜர் பக்க லிலும் 'மமப்ராணாஹி' என்னும்படி ஐஶ்வர்யாபேக்ஷையுடையவர் களாய் பக்தரான பாண்டவர்கள் பக்கலிலும் தனக்கு ரக்ஷகராக வும், தான் அவர்களுக்கு க்ருபாதிசயத்தாலும் வைவஶ்யத்தா லும் ரக்ஷ்யபூதனாய்க்கொண்டு தன் ஸ்வாதந்த்ர்யத்தைப்பண்ணியும் இப்படி ரக்ஷ்யபூதனாகயிருந்த இருப்பு ப்ரஸித்தமிறே. "ஜ்ஞாநீத் வாத்மைவ" என்றதுவே ஜ்ஞாநிகளுக்கு தான் பரதந்த்ரபாதந் த்ரன் என்றருளிச்செய்தானிறே. "ஸித்தமேவச்சஜகதாம் ஸ்வாமி த்வம் பரமார்த்ததம் அமோக்ஷமம்ஸதத்த்ரஞ்ச ரக்ஷ்யஞ்சாபி ஜநார்த்த நம்" என்னவும் கடவதிறே.

ஸ்வஸ்வாமிபாவத்தை மாறாடிக்கொண்டு "ஸ்வத்வமாத்மநி ஸஞ் ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்" என்கிறபடியே ஸ்வத் வம் ஆனது ஆத்மாவின் பக்கலிலே ஆகவும், ஸ்வாமித்வம் ஆனது தன்பக்கலிலேயாகவும் ஸ்வதஸ்ஸித்தமாயிருக்க, அதைவிட்டு, ஸ்வத்வம் ஆனது தன் பக்கலிலும், ஸ்வாமித்வம் ஆனது அர்ச்சகன் தன் பக்கலிலும் மாறாடிக்கொண்டு கண்ணுக்கு விஷய

பெருமான்கள். ஸித்தமாவது - ருஷிகள் முதலானோர் ப்ரதிஷ்டிப் பித்த திருவல்லிக்கேணி முதலான திவ்யதேசத்து எம்பெருமான்கள். மாநுஷமாவது - ஆழ்வார்களாலே ப்ரதிஷ்டிப்பிக்கப்பட்டு க்ராமங் களிலும் க்ருஹங்களிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள். "இவை கள், முத்தத்தறையிலே குடம் கட்டிக்கொண்டு ஸர்வஜ்ஞனைப்போலவும் க்ராமதேவதைகளும் க்ருதார்த்தராக வென்றுபிருக்குமவைப்பின்னான் பணிப்பர்." இதன் பெருமையை 'ஸ்ரீவசநபூஷண அரும்பத விளக்கம்' முத லிய க்ரந்தங்களில் விரிவாகக் காணலாம்.

மாம்படி "ஸசக்ஷுஷா பச்யதி" என்கிற பாத்வ அவஸ்தைகுறித்து சேதநருடைய மாம்ஸநேத்ரங்களுக்கு விஷயமாம்படி, ஸர்வஸுலபனாய்க்கொண்டு "ஸர்வைபோஷ்யுத்தரோத்தர:" என்கிறபடியே ஆச்ரித அநாச்ரித விபாகமன்றிக்கே ஸுலபனாய்க்கொண்டு; கோயில்களிலும் "பௌமநிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு" என்றபடி ஸ்வயம்வ்யக்த-திவ்ய... களான கோயில்களிலேயும், க்ருஹங்களிலும் "தனிவரப் வீட்டின்பம்" என்னும்படி வர்ணாச்ரமாத்யபாதியின்றிக்கே தன்பக்கல்பக்ஷமான பழம்போல் இருக்கிற திருவுள்ளக்கலையுடையவரான ஞானாதிகருக்கு ஆனைத் தரவஹாப்ரக்கொண்டு அவர்கள் க்ருஹங்களிலேயும், அன்றிக்கே க்ருஹங்களிலும் என்றது-ஆச்ரிதாநாச்ரித விபாகமற எல்லாருடைய க்ருஹங்களிலும் என்றுஞ்சொல்லவுமாம்; தேசகால அவதியின்றிக்கே தேசாந்தரத்துக்கு அவதியின்றிக்கே, காலத்துக்கு அவதியின்றிக்கே, தேச-கால-வஸ்து-விப்ரக்ருஷ்டதையின்றிக்கே என்னுதல். தேசவிப்ரக்ருஷ்டதை-பரவ்யூஹங்களுக்கும், காலவிப்ரக்ருஷ்டதை அவதாரங்களுக்கும், காணவிப்ரக்ருஷ்டதை அந்தர்யாமித்வத்துக்கும் உண்டிறே. இந்த மூன்று தோஷமுமின்றிக்கே ஸர்வதேசங்களிலும், ஸர்வகாலங்களிலும், ஸர்வாவஸ்தைகளிலும் என்றபடி; எழுந்தருளியிருக்கும் நிலை எழுந்தருளியிருக்கும் ஸ்திதி. (23)

இப்படி பரஸ்வரூபமான்று பஞ்சப்ரகாரமாக இருக்கும்படியையருளிச்செய்தாராயிற்று.

(அவ) மேல்புருஷார்த்தஸ்வரூபத்தை உபபாதிக்கிறார் — (புருஷார்த்தங்களில்) என்று தொடங்கி.

உச புருஷார்த்தங்களில் தர்மமாவது-ப்ராணிரக்ஷணத்துக்குறுப்பாகப்பண்ணும் வ்ருத்திவிசேஷங்கள்.

(வ்யா) அதாவது— புருஷார்த்தங்களில் தர்மமாவது - புருஷார்த்தங்களில் வைத்துக்கொண்டு தர்மம் ஆகிறது. ப்ராணிரக்ஷணத்துக்கு உறுப்பாகப்பண்ணும் வ்ருத்திவிசேஷங்கள் தடாகத்ராதிகள் முதலாக ஆச்ரித அநாச்ரித விபாகமன்றிக்கே அன்னவஸ்த்ராதிகளையிட்டு ரக்ஷிக்கைக்கு அங்கமாக(ஹேதுவாக)செய்கிற க்ருஷி-வ்யவஹார-அத்யயனாதிப்ரவர்த்தக விசேஷம்.

(அவ)—அர்த்தமாவது ஏதென்ன அருளிச்செய்கிறார். (அர்த்தமாவது) என்று தொடங்கி.

உரு அர்த்தமாவது— வர்ணாச்ரமாநுரூபமாக த்ரவ்யங்களை ஸங்க்ரஹித்து, தேவதாவிஷயங்களிலும் - பைத்ருகமான கர்மங்களிலும் - ப்ராணிகள் விஷயமாகவும், உத்க்ருஷ்டமான தேச-கால-பாத்ரங்களை அறிந்து தர்மபுத்யா வ்யயிக்கை.

(வ்யா) அர்த்தமாவது— அர்த்தம் ஆவது - அர்த்தம் என்றது, வர்ணாச்ரமாநுரூபமாக தன்னுடைய வர்ணத்திற்கும், ஆச்ரமத்திற்கும் உசிதமாக, த்ரவ்யங்களை ஸங்க்ரஹித்து அபிமத - பதித - சண்டாள - ம்லேச்சாதிகளுடைய த்ரவ்யத்தைப் பரிக்ரஹிக்கையன்றிக்கே, விஹிதமான வ்ருத்திகளாலன்றி பரிகத்யமான அர்த்தத்தையும் தான்யத்தையும் ஸம்பாதித்து தேவதாவிஷயங்களிலும் தேவதாராதநாதிகள் விஷயமாகவும், பைத்ருகமான கர்மங்களிலும் பித்ருக்களைக் குறித்துப் பண்ணப்படுகிற க்ரியைகள் விஷயமாகவும், ப்ராணிகள் விஷயமாகவும், ஸர்வப்ராணிகளின் விஷயமாகவும், உத்க்ருஷ்டமான தேசகால பாத்ரங்களை அறிந்து உத்க்ருஷ்டமான புண்ய க்ஷேத்ரங்களிலும் உத்க்ருஷ்டமான புண்யகாலங்களான ஸங்க்ராந்தி புண்யகாலங்களிலும், வேதாந்தபாரகருமாய் ஸ்வரூபஜ்ஞாநநிஷ்டராய் போக்யராயிருக்குமவர்களே பாத்ரர் என்று தெளிந்து உத்க்ருஷ்டமான புண்யக்ஷேத்ரங்களையும், உத்க்ருஷ்டமான புண்யகாலங்களான ஸங்க்ராந்தி புண்யகாலங்களையும், வேதாந்தபாரகர்களுமாய், ஸ்வரூபஜ்ஞாநநிஷ்டராய், போக்யராயிருக்குமவர்களே பாத்ரபூதர் என்று அவர்களைத் தெரிந்து கொள்ளுகையும். தர்மபுத்யா வ்யயிக்கை நிஷ்ப்ரயோஜனமாகவே செய்கிறதை. அன்றிக்கே நம்மிடம் புண்யம் வரும் என்று நினைத்து ஸாதனபுத்தியாலே வ்யயமாக்குவது என்னவுமாயும். (25)

(அவ) காமத்தின் ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார்— (காமமாவது) என்று தொடங்கி.

உசு காமமாவது ஐஹலௌகிகமாயும், பாரலௌகிகமாயும் த்விவிதமாயிருக்கும்.

உத்க்ருஷ்டமான தேசம்:— அயோத்தி, மதுரை, மாயா, காஞ்சி, அவந்திகா, காசி, த்வாரகை முதலியன. உத்க்ருஷ்டகாலம்:— மஹோதயம், அமாவாசை, உத்தராயணம், க்ரஹணம் முதலிய காலங்கள். தர்மபுத்யா வ்யயிக்கை:— பலத்தை இச்சியாமல் செலவுசெய்தல்,

(வ்யா) அதாவது— காமம் ஆவது - காமம் ஆகிறது, ஐஹலௌகிகம் ஆயும் - இஹலோகஸம்பந்தமாகவும், பாரலௌகிகம் ஆயும் - பரலோகஸம்பந்தமாகவும், த்விவிதமாயிருக்கும் - இரண்டு வகையாயிருக்கும். (36)

(அவ) த்விவிதகாமத்திலும் வைத்துக்கொண்டு முந்தற ஐஹலௌகிகத்தை உதாஹரிக்கிறார்— (இஹலோகத்தில் காமமாவது) என்ற தொடக்கி.

உஎ இஹலோகத்தில் காமமாவது— பித்ருமாத்ருரத்ந தநதாந்ய வஸ்த்ர அந்நபாந புத்ர மித்ர களத்ர பசு க்ருஹ க்ஷேத்ர சந்தநகுஸுமதாம்பூலாதி பதார்த்தங்களில் சப்தாதி விஷயாநுபவத்தால் வந்த ஸுகவிசேஷங்கள்.

(வ்யா) அதாவது— இஹலோகத்தில் காமம் ஆவது - இந்த லோகஸம்பந்தமான காமம் ஆகிறது, பித்ருமாத்ரு - ஜநகனான பிதாவின்பக்கலிலும், ப்ரிய (ஜநநீ) ஜநநியான மாதாவின்பக்கலிலும், ரத்ந - ரத்நங்களின்பக்கலிலும், தநதாந்ய - தநத்தின் பக்கலிலும், தாந்யத்தின்பக்கலிலும், வஸ்த்ர - உடுக்கும் வஸ்த்ரத்தின்பக்கலிலும், அந்நபாந - புஜிக்கும் அன்னத்தின்பக்கலிலும், குடிக்கும் ஜலத்தின்பக்கலிலும், புத்ரமித்ர - ப்ரியரான புத்ரர்பக்கலிலும், இருவரும்பேத ஸம்பந்தமுடையரான ஸ்நேஹிதர்கள்பக்கலிலும், களத்ர - தாரத்தின்பக்கலிலும், பசு - ஸ்வார்த்தமாக கோவின் பக்கலிலும், வாஹநங்களுக்குமுபலக்ஷணம்; க்ருஹக்ஷேத்ர - அலங்காரமான க்ருஹங்களின்பக்கலிலும், பயிர்செய்கிற பூமியின் பக்கலிலும், சந்தநகுஸும - பூசுகிற சந்தனத்தின்பக்கலிலும், அலங்காரம் பண்ணுகிற புஷ்பத்தின்பக்கலிலும், தாம்பூலாதிபதார்த்தங்களில் - தின்னும் தாம்பூலம் ஆகியான பதார்த்தங்களின்பக்கலிலும், ஆக 'பித்ரு மாத்ரு' என்று தொடங்கி 'தாம்பூல' பர்யந்தஞ் சொன்ன பதார்த்தங்களில் என்றபடி; இவற்றில் மாதாவும் பிதாவும் ஸம்ஸ்காரயோக்யபதார்த்தங்கள்; ரத்ந சந்தன குஸும வஸ்த்ரங்கள் தானும் பார்யையும் புத்ரரும் மித்ரரும் அலங்காரம் பண்ணும் பதார்த்தங்கள்; தநதாந்ய அந்நபாந பசு க்ஷேத்ர தாம்பூலங்கள் ஒழிந்தசொன்ன எல்லாருமநுபவிக்கிற பதார்த்தங்கள்; க்ருஹம் அவர்களெல்லாரும் வசிக்கைக்கிடம், குடும்பியானவன் தன்னொருத்தனுக்கே அநுபவிக்கும் பதார்த்தம் என்றும் சொல்லக்

டைதை; இப்படி அந்தப் பதார்த்தங்களை ஸம்ப்ராப்தி விஷயாநுபவத்தால் வந்த ஸுகவிசேஷங்கள் என்றபடி. மேற்சொன்ன ரத்னாதிபதார்த்தங்களின் ஸம்ப்ராப்திவிஷயாநுபவம் பண்ணும் பதார்த்தத்தையும், அவைவருக்கும் ஸமுதாயமான பதார்த்தத்தையும் பிரித்துச் சொல்லுகையாலே ரத்னாதிகளால் வந்த ஸுகவிசேஷங்களும் ஸம்ப்ராப்திவிஷயாநுபவத்தால் வந்த ஸுகவிசேஷங்களும் என்று பேசித்திருக்கிறது; மாதாபிதாக்கள் பக்கலுண்டான ஸுகவிசேஷம் ஸ்வதந்த்ராதிகளும் விதாயாதிகளுமான காரியங்களிலேயாயிருக்கும்; ஆக இவற்றால் வந்த ஸுகவிசேஷங்கள் என்றது ஆனந்தத்தைப் பிறப்பிக்கும் ஸுகவிசேஷங்கள் என்றபடி.

(அவ) பாரலௌகிகத்தை உபபாதிக்கிறார்— (பாரலௌகிகத்தில் காமமாவது) என்று தொடங்கி.

உ-ரை பாரலௌகிகத்தில் காமமாவது— இதில் விலக்ஷணமாய், தேஜோரூபமான ஸ்வர்க்காதிலோகங்களிலே சென்று, பசிதாஹமோஹசோகஜராமரணாதிகளன்றிக்கே, ஆர்ஜித்த புண்யத்துக்கீடாக அம்ருதபானம் பண்ணி, அப்ஸரஸ்ஸுக்களோடே ஸம்ப்ராப்திவிஷயாநுபவம் பண்ணுகை.

(வ்யா) அதாவது— பாரலௌகிகத்தில் காமம் ஆவது பரலோகஸம்பந்தமான காமம் ஆகிறது, இதில் விலக்ஷணமாய் — கர்மஸம்பந்தமான இந்த லோகத்தில் காட்டில் வைலக்ஷண்யத்தை உடைத்தாய், விலக்ஷணமாவது அன்னபதார்த்தபோகாதிகளும் ஸ்த்ரீபுருஷாதிகளுமின்றிக்கேயிருப்பதோடு அதிசயித்தவையும், அம்ருதசேவையும் முதலான விசேஷங்களுமுண்டாகையாலே இந்த மனுஷ்யலோகத்தில் காட்டில் வைலக்ஷண்யம் என்றபடி. தேஜோரூபமான ஸ்வர்க்காதிலோகங்களிலே சென்று— இந்த பூலோகத்திலிருந்து 'ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத' என்கிறபடியே ஜ்யோதிஷ்டோமம், வாஜபேயம், அச்வமேதம், பௌண்டரீகம் முதலான யஜ்ஞாதிகளைப் பண்ணி, ஸ்வர்க்கஸாதனத்தாலே, ஸ்வர்லோகதேவலோகஸமூஹமான அப்பு தேஜோமயங்க

அப்ஸரஸ்ஸு— தேவலோகத்திலுள்ள பெண்கள் (ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, க்ருதாசி, மேனகை முதலியவர்கள்) இவர்கள் பாற்கடலிற் பிறந்தவரெனவும், கச்யப முனி என்னும் பர்வதியிடம் பிறந்தவர்களெனவும் புராணங்கள் கூறும்.

னான ஸ்வர்க்கம் ஆகியவைகளெல்லா வர்த்தலோகங்களிலே போல். பசி தாஹ மோஹ சோக ஜராமரணாதிகள் இன்றிக்கே - பசியும், தாஹமும், ஸப்தாதிகளிலுண்டான வ்யாமோஹமும், தனைப்பத்தில் சோகமும், அவிநதமான ஜரையும் மரணமும், ஆகிறப்பதத்தாலே ஜாகமும் ! ஆகிற அனர்த்தங்களின்றிக்கே, ஸ்வர்க்கம் என்கிறது— ஸரீரணப்பத்யாதி வியோகாதிகளுக்கும் உபலக்ஷணம்; ஆர்ஜித்தபுண்யத்துக்கீடாக - பூலோகத்திலிருக்கும்போது யஜ்ஞாதிகளைப்பண்ணியும், அன்னதான அர்த்ததானாதிகளைப்பண்ணியும், ஸம்பாதித்த ஸுக்ருதத்துக்குத்தகுதியாக, அம்ருதபானம் பண்ணி - தேவர்கள் தரும் அம்ருதத்தைக்குடித்து, அப்ஸரஸ்ஸுக்களோடே ஸப்தாதிவிஷயாநுபவம் பண்ணுகை - அப்ஸரஸ்ஸுகளுடனே ஸப்தாதி விஷயங்களின் அநுபவத்தைப் பண்ணுவது.

(அவ) ஆத்மாநுபவத்தை அருளிச்செய்கிறார்- (ஆத்மாநுபவமாவது) என்று தொடங்கி.

உக. ஆத்மாநுபவமாவது— துக்கநிவ்ருத்திமாத்ரமான கேவலாத்மாநுபவமாத்ரத்தையும் மோக்ஷமென்று சொல்லுவார்கள்.

(வ்யா) அதாவது— ஆத்மாநுபவம் ஆவது - ஆத்மாவையே அநுபவிக்கிற அநுபவம் ஆகிறது, துக்கநிவ்ருத்திமாத்ரமான - ஆத்யாத்மிகாதி தாபத்ரயாத்மக ஸம்ஸார துக்கநிவ்ருத்திமாத்ரமாகிற, கேவல ஆத்மாநுபவமாத்ரத்தையும் - கைவல்யத்துக்கு கேவலனுடைய ஆத்மாநுபவமாத்ரத்தையும் என்னுதல்; அன்றிக்கே பகவதநுபவாதிகளின்றிக்கே மிகவும் ஆத்மாநுபவமாத்ரத்தையும் என்றாகு சொல்லுதலாகவுமாம்; மோக்ஷம் என்று சொல்லுவர்கள் - இப்படிப்பட்ட ஆத்மாநுபவமாத்ரமாயிருக்குமதனையும் மோக்ஷம் என்று சிலர் சொல்லுகிறார்கள். "யோகோமம்ருதம் ஸ்தானம்" என்கிறபடியே துக்கரூபமான ஸம்ஸாரநிவ்ருத்தியையும், ஸுகரூபமான ஸ்வரூபநிவ்ருத்தியையும் உடையனாய், விரஜைக்கு அக்கரையிலேயிருக்கிற ஸ்தானத்தில் ப்ரவேசித்து, தன்னையநுபவிக்கிறது எதுவோ, அதுக்கும் மோக்ஷம் என்று பேரக்கடவது. கேவல துக்கநிவ்ருத்திமாத்ரமான ஆத்மாநுபவத்தை மோக்ஷம் என்று சொல்லில் ஸம்ஸாரத்திலிருக்கும் ஸரீரவியோகத்துமிருக்கும் ஞானத்தாலே துக்கநிவ்ருத்தியைப்பண்ணிக்கொண்டு தன்னையநுபவிக்கிறது மோக்ஷஸப்தத்துக்கு எங்ஙனே சேரும்

படி என்று க்ராந்திதாபிப்ராயம்போலே தோற்றுகிறது; ஆகையால் ஸ்தூலஸூக்ஷ்ம தேஹவிமோசனமுடையனாய் விரஜைக்கு அக்கரையிலேயிருக்கிற ஸ்தானத்தில் ப்ரவேசித்து ஆநந்தாநுபவத்தைப் பண்ணுவதும் மோக்ஷமென்றபிப்ராயம். இது 'யாவதாத்மபாவி அசரீரியாய்க்கொண்டு திரிவானொருவன்' என்றருளிச்செய்கையாலும் 'இங்ஙனே சொல்லுவர்கள்' என்ற பரபக்ஷம் அங்கீகரிக்கையாலும் இப்படிச் சொல்லவேண்டியிருப்பது; இதுவுமொரு பக்ஷமுண்டாகையாலே 'சொல்லுவர்கள்' என்று அருளிச்செய்தது. (29)

(அவ) அநந்தரம் பரமபுருஷார்த்த லக்ஷணமோக்ஷத்தை அருளிச்செய்கிறார்— (இனி) என்று தொடங்கி.

௩௰ இனிப்பகவதநுபவகைங்கர்யரூபபுருஷார்த்தலக்ஷண மோக்ஷமாவது– ப்ராரப்தகர்மாவஸானத்தில் அவச்யமநுபாவ்யமான புண்யபாபங்கள் நசித்து, ''அஸ்தி ஜாயதே பரிணமதே விவர்த்ததே அபக்ஷீயதே விநச்யதே'' என்கிறபடியே ஷட்பாவவிகாராஸ்பதமாய், தாபத்ரயாச்ரயமாய், பகவத்ஸ்வரூபத்தை மறைப்பித்து விபரீதஜ்ஞானத்தை ஜநிப்பிக்கக்கடவதாய் ஸம்ஸாரவர்த்தகமான ஸ்தூலசரீரத்தை உபேக்ஷயோடே போகட்டு, ஸுஷும்நாநாடியாலே சிரக்கபாலத்தைப் பேதித்துப் புறப்பட்டு ஸூக்ஷ்மசரீரத்தோடே வானேறவழிபெற்று மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் அன்னதோர் இல்லியினூடுபோய், ஸூக்ஷ்மசரீரத்தையும், வாஸநாரேணுவையும், விரஜாஸ்நானத்தாலே கழித்து, ஸகல தாபங்களும் தீரப்பட்டு அமாநவகரஸ்பர்சமும் பெற்று, ஸத்த்வைகத்ரவ்யாத்மகமாய், பஞ்சோபநிஷந்மயமாய், ஜ்ஞாநாநந்தஜநகமாய் பகவதநுபவைகபரிகரமாய் ஒளிகொண்ட சோதியுமாயிருக்கிற அப்ராக்ருத விக்ரஹத்தைப்பெற்று, முடியுடைவானவர் முறைமுறையெதிர்கொள்ள நிரதிசயாநந்தமயமான திருமாமணி மண்டபத்தை ப்ராபித்து, லக்ஷ்மீஸஹிதனும், பூமிநீளாநாயகனும் விலக்ஷணவிக்ரஹயுக்தனும் குழுமித்தேவர்குழாங்கள் கைதொழச்சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோருருவனுமான ஸ்ரீவைகுண்டநாதனை நித்யாநுபவம்பண்ணி நித்யகிங்கரஸ்வபாவனாகை.

(வ்யா) அதாவது— இனி - இவற்றையுபபாதித்தன்மேல், பகவத் அநுபவரூபமான - பகவானையநுபவிக்கிற ரூபமாயிருந்துள்ள, பரமபுருஷார்த்தலக்ஷணமோக்ஷம் ஆவது - புருஷனாலே அர்த்திக்கப்படுமதே லக்ஷணமாக உடையதாய் உத்க்ருஷ்டதமமாயிருக்கிற மோக்ஷம் ஆகிறது, 'பரமபுருஷார்த்தம்' என்றது ஐச்வர்ய கைவல்யங்களைப்பற்ற. ப்ராரப்தகர்மசேஷமாய் ஜென்மமெடுக்கைக்கு காரணயோக்யமான ப்ராரப்தகர்மத்தினது சேஷமாய் அதாவது "பூர்வோத்தராகயோரச்லேஷவிநாசௌ" என்கிறபடியேபகவத்ப்ரபத்தியாலேப்ராரப்தமென்றபேரையுடைத்தாய், ஜந்மகாரணமான பூர்வாகங்களும்புத்திபூர்வகமாகவும்அபுத்திபூர்வகமாகவும் உண்டானவைகளும்பால்வருமுத்தராகங்களும் கழிந்த பின்னுமிருக்கையாலே, அதுக்குத்தக்க ப்ராரப்தகர்மத்தினது சேஷமாயிருக்கும் சரீரம் என்கை. அவஸ்யம் அநுபோக்தவ்யா புண்ய பாபங்கள் கழித்து 'அவஸ்யமநுபோக்தவ்யம்' என்கிறபடியே அவஸ்யமாக அநுபவிக்கைக்கு யோக்யமாய் பூர்வஜன்மங்களுக்கும் பவிஷ்யத்காலஜன்மங்களுக்கும் காரணமான புண்ய பாபங்கள் கழித்து, அன்றிக்கே ப்ராரப்தகர்மசேஷமான புண்ய பாபங்கள் கழிந்து என்னவுமாம், புண்யபாபரூபகர்மங்கள் கழிக்கும்போது ஸ்தூலதேஹம் கழிக்கையாலே இக்ஜன்மத்திற்குப் பூர்வஜன்மத்திலிருக்கிற புண்யபாபங்களுமே கழித்து, ஸூக்ஷ்ம ரூபமான சரீரமிருக்கையாலே, அந்த ஸூக்ஷ்மசரீரத்துக்குக் காரணமான கர்மவாஸனையோடேயும், அந்த கர்மவாஸனாரூபமான ஸூக்ஷ்மதேஹமும் விரஜாஸ்நானத்தாலேயிருக்கையாலே நிச்சேஷமான புண்யபாபரூபகர்மங்களை கழிக்கும் என்கை; கர்மநிஷ்டனுக்கு அநுபவத்தாலேயாதல், ப்ராயச்சித்தத்தாலேயாதல், தேவதாந்தர்யாமியான ஈச்வராநுக்ரஹத்தாலேயாதல் கர்மம் க்ஷயித்து, ஸ்தூலதேஹம் விமோசனமாய் ஊர்த்வலோக ப்ராப்தியுண்டாம், ப்ரபன்னனுக்கு "இஷ்டாநாம்" என்று சொல்லுகிறபடியே பகவதநுக்ரஹத்தாலே புண்யபாபங்கள் கழித்துப்போகையாலே இந்த சரீரமிருக்கும்தனையும் பூர்வஸம்பந்தமான ப்ராரப்தசேஷத்தையும், பகவத்வைமுஸ்யாநுக்ரஹம் ப்ரமாதத்தாலேயாதல், புத்தியாலேயாதல், பண்ணுங்கர்மங்களையும், ஸூக்ஷ்மரூபமாக அநுபவித்து ஸ்தூலதேஹஸம்பந்தத்தைப் பண்ணும் ஈச்வரன் என்கை, இப்படிகளாக புண்யபாபரூபகர்மங்கள் கழித்து, "அஸ்திஜாயதே பரிணமதே விவர்த்ததே அபக்ஷீயதே விநச்

யதே" என்கிறபடியே ஷட்பாவவிகாராஸ்பதமாய் - கர்ப்பத்தில் பிண்டாவஸ்தையுடன் வர்த்திருப்பதும், பக்குவமானவாறே, கர்ப்பத்திலின்றும் பிறக்கிறதும், பின் பால்யாவஸ்தையாய் வளர்கிறதும், யௌவனாவஸ்தையாய் பாபபுண்யங்களை ஆர்ஜிக்கிறதும், வார்த்தகாவஸ்தையாய் ஜரிக்கிறதும், மரணாவஸ்தையையடைந்த போய் சரீரநாசம் பண்ணுகிறதுமாகச்சொன்ன விகாரஷட்கத்துக்கும் ஆதாரமாய், தாபத்ரய ஆஸ்பதமாய - ஆத்யாத்மிகம் என்றும், ஆதிபௌதிகம் என்றும் ஆதிதைவிகம் என்றும் சொல்லப்பட்ட மூன்று தாபங்களுக்கும் ஸ்தானமாய், ஆத்யாத்மிகம் ஆவது சரீரத்தில் நின்றும் வருகிற வ்ரணஜ்வராதிகளால் ஸம்பவிக்கிற துக்கம்; ஆதிபௌதிகம் ஆவது ஸர்ப்ப வ்ருச்சிகாதி பூதங்களால் வருகிற துக்கம், ஆதிதைவிகம் ஆவது அமாக்யாதப்ராணிகளால் வருகிற துக்கம், அபரி — இது ஆதாரம் - வெம்மீச் இலத்துக்குத் தக்கபடியாதி என்றது, பகவத்ஸ்வரூபத்தை மறைப்பித்து "பகவத்ஸ்வரூபதிரோதாயிநீம்" என்றபடி பகவானுடைய ஸ்வரூபாதிகளை மறையச்செய்து, இங்கு பகவத்ஸ்வரூபாதிகளின் ஜ்ஞாநார்த்தமான ஆத்மாவினுடைய ஜ்ஞாநாதிகளையும் ப்ரகாசிப்பியாதே மறையவைத்து அன்யதையும்; விபரீதஜ்ஞானத்தை ஜநிப்பிக்கக்கடவதாய் "விபரீதஜ்ஞாநஜநநீம்", என்கிறபடியே விபரீதஜ்ஞானத்தைப் பிறப்பிக்கக்கடவதாய், அதாவது பகவத்ஸ்வரூபாதிகளையும் ஆத்மஸ்வரூபத்தையும், ஆத்மாவினுடைய ஜ்ஞானாதிகளையும் மறையச்செய்வதுமாத்ரமன்றிக்கே, "அநாத்மந்யாத்மபுத்திர்யா" என்னும்படி அநாத்மாவான தேஹத்தில் ஆத்மபுத்தியையும், இந்த்ரியங்களின் ஸப்தாதிவிஷயப்ராவண்யத்தையும் ஜநிப்பிக்கைமுதலான துர்புத்திகளையும் பிறப்பிக்குமது என்றபடி. ஸம்ஸாரவர்த்தகமான ஸ்தூலசரீரத்தை ஸம்ஸாரத்தை விளைச்செய்வதாகிற ஸ்தூல தேஹத்தை உபேக்ஷியாடே போகட்டு "ம்ருத்யும் ப்ரியமதிதிம்" என்னும்படி-தன்னுடைய ஜ்ஞானத்தாலே இந்த சரீரம் போகவேணும், பகவத்ப்ராப்தியை சீக்ரமாகப் பெறவேணும் என்று தேஹத்திலே ஜிஹாஸையோடே, உதாஸீன த்ரவ்யத்தைப் போகட்டுப்போலே போகட்டு, ஸூக்ஷ்மகாயையாலே சிர: கபாலத்தை பேதித்துப்புறப்பட்டு ப்ரஹ்மரந்த்ரத்திலிருக்கிற ஸுஷும்நா நாடியாலே. மூர்த்தத்திலே யிருக்கிற ப்ரஹ்மரந்த்ரத்தை பேதித்துக்கொண்டு வெளிப்பட்டு,

ஸூக்ஷ்மசரீரத்தோடே வாஸோ வாஸித்த ஸ்தூலதேஹத்துக்குக் காரணமான ஸூக்ஷ்மசரீரத்துடனே ஆகாசத்திலே ஏறுகைக்கான அர்ச்சிராதி மார்க்கத்தை ப்ராபித்து; மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தின்னன்னடுவுள் - அன்னதோரில்லியினூடு போய் ஜ்ஞாநநிதிகமான ஸஹஸ்ரகிரண விசிஷ்டனான ஸூர்யமண்டலத்துடைய நன்றாய் நடுவிலிருக்கிற அதிவிதீபமான இல்லியின் நடுவில் " பித்வா ஸூர்யமண்டலம் " என்றபடியே பேதித்துப்போய்; நிதிகம்-பொருமை, யத்வா, " அன்னதோர் இல்லியினூடுபோய் " என்கிற வாக்யத்துக்கு ஸாரமாக்கும் மேலேயிருக்கிற அர்ச்சிராபிமாநி- அஹராபிமாநி - பக்ஷாபிமாநி- மாஸாபிமாநி, உத்தராயணாபிமாநி-ஸம்வத்ஸராபிமாநிகளுடையவும் வாயுவினுடையவும், ஸ்தானங்களைக் கடந்து ஆதித்யமண்டலத்துக்கு மேலேயிருக்கிற சந்த்ரமண்டல வருணமண்டலங்களையும், இந்த்ரனுக்கு ஸ்தானமான ஸ்வர்க்கலோக மஹர்லோக ஜனலோக தபோலோகங்களையும், சதுர்முகன் ஸ்தானமாகிய ஸத்யலோகத்தையும், அண்டகடாஹத்தையும் கடந்து, "ஸலிலாத்யைஸ் ஆவரணை:" என்னும்படி-ஜல அக்னி வாயு ஆகாச அஹங்கார மஹத் அவ்யக்தமான ஸப்தகத்தையும் கடந்து விரஜையளவுஞ் செல்லுமதுக்கு உபலக்ஷணமாகச் சொல்லுமதாம்; ஸூக்ஷ்மசரீரத்தையும் வாஸனாரேணுவையும் விரஜாஸ்நானத்தாலே கழித்து ஸ்தூலதேஹத்துக்குக் காரணமான ஸூக்ஷ்மசரீரத்தையும், ஸ்தூலஸூக்ஷ்ம தேஹகாரணமான கர்மத்தினுடைய வாஸனையையும், கர்மத்தினுடைய ரேணுவையும், ரேணு-தூள், துகள் என்றபடி; "தத்ரைவ ஸ்பர்சமாத்ரேண" இத்யாதிப்படி விரஜையில் பண்ணும் ஸ்நானத்தாலே கழியச் செய்து, அதாவது போக்கி, ஸகலதாபங்களும் ஆறும்படி அமாநவகரஸ்பர்சம் பெற்று லீலாவிபூதிக்குள்ளேபட்ட ஸாமம் எல்லாத்தனியப்படி, " அமானவம் ஸமாகத்ய " என்கிறபடியே பகவத்தார விசேஷமான அப்ராக்ருத ஸம்பர்சத்தையும் பெற்று, ஸாந்த்ரானந்தாத்மகமாய் " ஞானமதீதம்" என்னும்படி லீலாவிபூதியைப்போலே ஸத்வ ரஜஸ் தமோகுணாத்மகமன்றிக்கே கேவல ஸாத்த்விகமயமாய், பஞ்சோபநிஷந்மயமாய் பரமேஷ்டி ஆதி ஸக்திபஞ்சமயமாய், அதாவது பரமேஷ்டி புமான் விச்வ நிவ்ருத்த ஸர்வ என்னும் ஸக்திபஞ்சமயமாய், ஜ்ஞான ஆநந்த ஜனகமாய் "இருள் தருமா ஞாலம்" என்றபடி-அஜ்ஞானஜனகமான லீலாவிபூதிகளுக்கு மேலேயிருக்கிற பஞ்ச

பௌதிகமான சரீரம்போலன்றிக்கே பகவத்குணானுபவஜ்ஞானத்தையும் அவ்வநுபவஜன்யஜ்ஞான வைசத்யாதிகளையும் ஜநிப்பிக்கக் கடவதாய், பகவதநுபவைகபரிகரமாய் பகவானை அநுபவிக்கைக்கு அத்யந்த ஸாதனமாய்; ஒளிகொண்ட சோதியும் ஆயிருக்கிற அப்ராக்ருத விக்ரஹத்தைப்பெற்று "ஒளிகொண்ட சோதியுமாய்" என்று ஆழ்வாரருளிச்செய்தபடியே, தேஜஸ்ஸை உடைத்தாய்க் கொண்டு ப்ரகாசத்தையுடையதான அப்ராக்ருத சரீரத்தைப் பெற்று, முடியுடை வானவர் முறைமுறை யெதிர்கொள்ள விசிட்டங்களையுடையரான நித்யஸூரிகள் ஸம்ப்ரமமாக எதிர் கொண்டுபோய், கோடிஸூர்யஸந்நிபமான திருமாமணிமண்டபத்தைப் ப்ராபித்து ப்ரஹ்ம ருத்ராதிகளுடைய மண்டபாதிகளில் காட்டில் அதிசயத்தையுடைத்தாய் ஆநந்தமயமாய் ஸ்ரீமத்தமாய் விலக்ஷணமான மணிஸ்தம்ப ஸஹஸ்ரத்தின ஆஸ்தானமண்டபத்தைக்கிட்டி, லக்ஷ்மீபதினுடைய "ச்ரீஸஹாய:" என்கிறபடி பெரிய பிராட்டியாரோடே கூடியிருக்குமவனாய், பூமிநீளா நாயகனாய் "ஏவம்பூதபூமிநீளா நாயக:" என்றும் "உபய்யாம் பூமிநீளாப்யாம்" என்றுஞ்சொல்லுகிறபடியே பார்ஸ்வஸ்தராயிருக்கிற பூமிநீளைகளாகிற தேவிமார்க்கு நாயகனாய், விலக்ஷண விக்ரஹயுக்தனாய் "நீலதோயதமத்யஸ்த" என்றும், "நீலமேகநிபச்யாமம்" என்றும், "நீலமுகில்வண்ணன்" என்றுஞ்சொல்லுகிறபடியே விலக்ஷணமான திவ்ய திருமேனி விசிஷ்டனாய், குழுமித்தேவர் குழாங்கள் கைதொழ ஸூழ்ந்திருக்கிற நித்யமுக்தருடைய குழாங்கள் கைதொழ. சோதிவெள்ளத்தினுள்ளே திவ்ய ஆயுத திவ்ய ஆபரண திவ்யவஸ்த்ர திவ்யமால்ய திவ்ய அலங்காரங்களுடையனாய், பிராட்டிமாரோடே இருக்கையான சேர்த்தியுடையவனும் நித்யமுக்தருடைய சேர்த்தியுடையவனும், முந்தினதேஹஸம்பந்தத்தாக்குள்ளே, எழுவதோர் உருவான தேஹின் உபாஸித்த தேஜோவிசேஷங்களிற்காட்டில் பேரொளிபெருகிறதாய் அதிப்ரகாசமாய் அத்புதமாய், அத்விதீயமான ஸ்வரூபத்தை உடையவனும், "உருவானை" என்று திருமேனியைச் சொல்லுமாம்; ஸ்ரீ வைகுண்டநாதனை ஸ்ரீ வைகுண்டத்துக்கு நிர்வாஹகனானவனை, நித்யாநுபவம் பண்ணி நித்யகைங்கர்யம் செய்து "நித்யம்" என்றது யாவதாத்மபாவி என்றபடி; அதாவது "ஆப்ரஹ்மபவனால்லோகா:" என்று பகவான்றானே அருளிச்செய்கையாலே ஸ்வர்க்காநுபவம் தொடக்கி சதுர்முக ஐச்வர்யபர்யந்தமான அநுபவங்களெல்-

ஸம் இந்த லோகத்தில் பண்ணின ஸாம்ராஜ்யத்துக்கு ஈடான வையாகையாலே அல்ப பலங்களாய், புநர்ஜன்ம ஹேதுக்களாய், அநித்யங்களாயிருக்கையாலே நித்யாநுபவங்கள் என்று சொல்ல வொண்ணாதிறே; கைவல்யாநுபவம்- பகவதநுபவ அபேக்ஷையில் ஸ்வல்பமே அத்யல்பமாய், ஸ்வாத்மாநுபவமாகையாலே நித்ய மாயிருந்தாலும்- ஸாக்ஷாத்ப்ரதிஷ்டமாகையாலே ஆத்மவஸ்து இருக்குமளவும்- புருஷ அபாவத்தாலே ஸ்திரீயானவள் தன்னு டைய யௌவநாநுபவத்தைத் தானே பண்ணுமாப்போலே பாத(ஹேய)அநுபவம் என்று சொல்லப்படும்; பகவதநுபவம்- அவையிரண்டும் போலன்றிக்கே நித்யமாயிருக்கும் என்றபடி; நித்யஸித்த ஸ்வபாவனுடைய "நித்யஸித்தா:" என்றபடி நித்யமா கக்ஷிக்காள் என்கிற ஸ்வபாவமுடையவனுடைய. அதாவது- யா வதாத்மபாவி என்றபடி. நித்யசப்தத்துக்கு ப்ரதிதினம் என்ற அர்த்தம் சொல்லில்- "ஏகாந்தர வைபவ:" என்கிறபடியே- காலக்ருத பரிணாமமில்லாத தேசத்துக்கு இந்த பூலோகம்போலே காலக்ருத பரிணாமம் ஸம்பவித்து கர்மலோகம் என்று சொல்லும் படியாயிறே. ஆகையாலே யாவதாத்மபாவி பகவதநுபவஜநித ப்ரீதிஜநித கைங்கர்யமானவன் ஆகுமதென்று தாத்பர்யம்.(30)

இப்படி புருஷார்த்த ஸ்வரூபமானது பஞ்சப்ரகாரமாயிருக் கும்படியை அருளிச்செய்தாராயிற்று.

(அவ) இனி உபாயஸ்வரூபத்தை விவரிக்கிறார் மேல்- (உபா யங்களில் கர்மயோகமாவது) என்று தொடங்கி.

௩௧ உபாயங்களில் கர்மயோகமாவது- யஜ்ஞ தாந தபோ த்யான ஸந்த்யாவந்தன பஞ்சமஹாயஜ்ஞ அக்நிஹோத்ர தீர்த்தயாத்ரா புண்யக்ஷேத்ரவாஸ க்ருச்ர சாந்த்ராயண புண்யநதீஸ்நாந வ்ரத சாதுர்மாஸ்ய பலமூலாசந சாஸ்த்ராப் யாஸ ஸமாராதந ஜபதர்ப்பணாதி கர்மாநுஷ்டாநத்தால் வந்த காயசோஷணத்தாலே பாபநாசம்பிறந்து, அத்தாலே இந்த்ரி யாதித்வாரா ப்ரஸரிக்கிற தர்மபூதஜ்ஞாநத்துக்கு சப்தாதிகள் விஷயமல்லாமையாலே விஷயவைராக்யம் பிறந்து யமநிய மாஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார த்யான தாரணாதி ரூபமான அஷ்டாங்க யோகக்ரமத்தாலே யோகாப்யாஸகாலத் தளவும் ஜ்ஞாநத்துக்கு ஆத்மாவை விஷயமாக்குகை.

(வ்யா.) அதாவது— உபாயங்களில் கர்மயோகமாவது, உபாயங்களில் வைத்துக்கொண்டு கர்மயோகம் ஆகிறது; யஜ்ஞ "வர்ணே வர்ணே" என்கிறபடியே யஜ்ஞங்களாலும், தாந, அன்ன கோ பூ ஹிரண்யாதி தானங்களாலும், தப: "தபஸாநாஸகேந" என்றும் "வெங்கானமும் கல்லும் கடலுமெல்லாம் கொதிக்க" என்றும் சொல்லுகிறபடியே, சரீரத்தைப்பொறுத்து ப்ராணனை ஸம்வத்ஸர லக்ஷ்யபாகத்தப (?) பண்ணுவதாலும் த்யாக "யத்வி மனஸா த்யாயதி" என்கிறபடியே மானஸத்யாகத்தாலும், ஸந்த்யாவந்தன காலாதிக்ரமமானால் ப்ராயச்சித்தம் பண்ணவேண்டியும், அதனாலே ப்ரத்யவாயமும் வருகிறது. அவை

யஜ்ஞ - ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்கள், தானம் கோதானம், பூதானம், திலதானம், ஹிரண்யதானம் க்ருததானம் முதலியவை. தபம் - வெயில்காலத்தில் பஞ்சாக்னிமத்தியிலும், மழைகாலத்தில் ஜலத்திலும், பனிகாலத்தில் மண்ணின் உச்சியிலிருந்தும் தவம் செய்தல். பகவானும் ஆட்கொள்ள பகவானை த்யானம்செய்கிறது த்யானம். இது ஐந்து விதமாயிருக்கும்.

1. பகவானைத் திவ்யமங்கள விக்ரஹத்தோடு திவ்ய ஆயுதங்களோடு த்யானித்தல்.

2. திவ்யஆபரணத்தோடுகூடியிருக்கும்படியைத் த்யானித்தல்.
3. பகவானுடைய ஒவ்வொரு அவயவங்களையும் நினைக்கிறது.
4. வேறுபட்டிருக்கிற அவயவத்தைவிட்டு ப்ரதான அங்கத்தை நினைக்கிறது.
5. அவயவஸமுதாயத்தைத் த்யானித்தல்.

த்யானமாவது ஒன்றை வேறு எண்ணம் கலப்பில்லாமல் நினைத்துக் கொண்டிருக்கிறது. இதுதான் ஸமாதி என்பது. த்யானத்திற்கும் ஸமாதிக்கும் வித்யாஸம்- பகவானுடைய திருமேனியையும் சேர்த்து நினைத்தல் த்யானம், ஸமாதியென்பது பகவானுடைய திருமேனியைவிட்டு ஸ்வரூபத்தைமாத்திரம் நினைத்துக்கொண்டிருப்பது.

ஸந்த்யாவந்தனம்:— மூன்று காலத்திலும் ஸூர்யமண்டலமத்தியிலிருக்கும் ஸ்ரீமந்நாராயணனை த்யானித்து அர்க்யப்ரதானம் ஸமர்ப்பிக்கை. மூன்று காலங்களில் செய்கிற ஸந்தியாவந்தனங்களிலும் ஸூர்யனுக்கு அபிமுகமாக நின்று இரண்டு கைகளும் சேர ஜலத்தை எடுத்து காயத்ரியினால் அபிமந்த்ரித்துவிடுகிற ஜலம். இந்த அர்க்யப்ரதானத்துக்கு ப்ரயோஜனம் - மந்தேஹரென்கிற அஸுரர்கள் ப்ரஹ்மாவினுடைய வரத்தினால் பலத்தையடைந்து ஸூர்யனுடைய தேஜஸ்ஸைப்பொறுக்கமாட்டாமல் நடுத்து எப்போதும் யுத்தம் பண்ணுகிறார்கள். அர்க்யப்ரதானம் பண்ணினால்

வாராவமைக்காகக் காலத்ரயத்திலும், தப்பாதபடி ஸந்த்யாவந்தன த்ரயமும் பண்ணுவதனாலும், பஞ்சமஹாயஜ்ஞ தேவயஜ்ஞ பித்ரு யஜ்ஞ மனுஷ்ய யஜ்ஞ பூதயஜ்ஞ ப்ரஹ்மயஜ்ஞங்களாகிற பஞ்ச மஹாயஜ்ஞங்களைப் பண்ணுகையாலும், அக்நிஹோத்ர "யாவஜ் ஜீவம் அக்நிஹோத்ரம் ஜுஹுயாத்" என்றபடி- கார்ஹபத்யம் ஆஹவநீயம்- தக்ஷிணாக்நிஆகிற அக்நித்ரயமும், ஔபாஸநாக் நிகளில் பண்ணும் ஆராதனமும் ஆகிறவற்றாலும், அநவ அக்நிஹோத்ரம் என்றது ஸாயமௌபாஸனமும், ப்ராதரௌபா ஸனமும், என்றுஞ்சொல்லுமாம்; தீர்த்தஸ்நானத்தைப் புண்யதீர்த்தயாத் திரைகளாலும், புண்யக்ஷேத்ரவாஸ ஜ்ஞாநஸாதனமாகவும், முக்தி ஸாதனமாகவும் பண்ணும் புண்யக்ஷேத்ரவாஸத்தாலும், 'தேசோ

இந்த ஜலம் ஸர்வமோக்ஷப்ரதமென்று அப்பையாஜ்ஜ்வல ஸர்வேச்வரனுடைய ஸ்ரீபாதத்தில் நின்றும் பெருகுகிறது என்றும், அந்த ஜலத்திலும் ருத்ரனுடைய தேஜஸ்ஸால் விருத்தியடைந்து அவதாரச்சேர்த்தியே யிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

பஞ்சமஹாயஜ்ஞம்:—

1. பூதயஜ்ஞம்— காக்கை முதலான ஜந்துக்களுக்கு அன்னம் போடுகிறது.

2. தேவயஜ்ஞம்— தேவதைகளை உத்தேசித்து அக்னியிடத்தில் நெய் அல்லது ஸமித்துக்களைக்கொண்டு ஹோமம் செய்கிறது.

3. பித்ருயஜ்ஞம்—பித்ருதேவதைகளை உத்தேசித்து ச்ரத்தை என்று அன்னத்தையாவது ஜலத்தையாவது விடுகிறது.

4. மநுஷ்யயஜ்ஞம்— ஸத்புருஷர்களுக்கு அர்க்யபாத்ய ஆஸனம் ஸமர்ப்பித்து அன்னம் கொடுத்து ஸத்காரம் செய்து ப்ரஸாதம் செய்து வைக்கிறது.

5. ப்ரஹ்மயஜ்ஞம்— தன் குலத்திற்கு ஏற்பட்ட வேதசாகைகளில் ஒருசாகையை அத்யயனம் செய்கிறது. இல்லாவிடில் தனக்குகந்த தேவதைக்குத் திருவாராதனம் செய்கிறது.

அக்நிஹோத்ரம்:—நித்ய ஹோத்ரம்- இது ஸாதாரண அக்நிஹோத்ரம். ஸர்வ அக்னிஹோத்ரம் இரண்டாவது. ஸாதாரண அக்நிஹோத்ரம் ப்ரதிதினம் செய்கிற ஔபாஸனாக்னி; ஸர்வாக்னி—தன்னுடைய கல்யாண காலத்தில் ஔபாஸனாக்னியின் உஷ்ணத்தைத்தொடங்கிக்கொண்டு ப்ரதிதினம் செய்து வந்து ஸரீரமுடிவில் அந்த அக்னியைக்கொண்டு ஸம்ஸ்காரம் செய்கிறது. தீர்த்தயாத்திரை:— கங்கை, யமுனை, ஸரஸ்வதி, நர்மதை ஸிந்து, காவேரி, கோதாவரி, சோணை, துங்கபத்ரா, முதலிய புண்ய தீர்த்தயாத்திரை.

யம் ஸர்வகாமதுக்” என்னக்கடவதே! க்ருச்ர[1] புண்யக்ஷேத்ரங்களிலேயாதல் புண்யநதி தீரங்களிலேயாதல் பாபாசார்த்தமாகப் பண்ணும் ப்ராயச்சித்தரூபமான (ஸர்வாபராதங்களுக்குமான க்ருச்ராரூப கர்மாநுஷ்டானத்தாலும்) சாந்த்ராயண “புக்த்வா சாந்த்ராயணம்[2] சரேத்” இத்யாதிப்படியாய் அநுஷ்டிக்கும் சாந்த்ராயணாதிகளாலும். புண்யநதிகளாக பாபமானது நசிக்கைக்காகவும் புண்யமானது வருகைக்காகவும், பூலோகத்திலுள்ள கங்காதி புண்யநதிகளில் பண்ணும் ஸ்நானத்தாலும், வ்ரத அவாந்தர விசேஷநாதிநிஷ்டைகளாலும், சாதுர்மாஸ்ய ஆஷாடசுக்ல ஏகாதசி தொடங்கிக் கார்த்திக சுக்லைகாதசி பர்யந்தமாக உண்டான சாதுர்மாஸத்துக்கும் “விஷ்ணுசயநம்” என்றுபேராம்; அந்த சாதுர்மாஸ்யத்தில் எங்கும் ஸஞ்சரியாமல் ஓரிடத்தில் இருக்கவேணுமென்கிற நிஷ்டையாலும், இதுஸந்யாஸிகளுக்கும் க்ருஹஸ்தருக்கும் ஒக்குமே! பலமூலாதி ஆரண்யபலங்களையும் *பாரணைமுதலாக உண்டான கந்தமூலாதிகளையும் ஆஹாரம்பண்ணிக்கொண்டிருக்கையாலும், மாஸோபவாஸ மாஸத்ரவ்ரதாதியுடைய அப்யாஸத்தாலும், ஸமாராதன தேவபித்ரு ப்ராம்மண

---

[1] க்ருச்ரம்;— இதுப்ராயச்சித்த கர்மங்களில் ஒன்று. தப்தக்ருச்ரம், சீதக்ருச்ரம், ப்ராஜாபத்யக்ருச்ரம், சாந்தபனக்ருச்ரம், அர்த்தக்ருச்ரம், க்ருச்ராதிக்ருச்ரம் என்று அநேக விதமாயிருக்கும். க்ருச்ரம் - ஒன் வீதம், 10 20, 30, க்ருச்ரம் செய்தவர்களுக்குச் சேர்த்து செலுத்தும் பாபத்தைப் போக்கிக் கொள்ளுகிறது. இவ்வாக்யத்தல் பதினாயிரம் காயத்ரி, 200 ப்ராணாயாமம், 1000 திலஹோமம், வேதாத்யயனம் செய்கிறது.

[2] சாந்த்ராயணம்:— இது ப்ராயச்சித்தகர்மம்: யவமத்யசாந்த்ராயணம் பிபீலிகா மத்யசாந்த்ராயணம், ருஷி சாந்த்ராயணம், சிசு சாந்த்ராயணம் யதி சாந்த்ராயணம், என்று பலவிதம்: சந்திரன் கலை குறையும்போது குறைத்தும், விருத்தியாகும்போது அதிகப்படுத்தியும் புஜிக்கிறது. கவளம் 400-உருண்டையிலிட, சாந்த்ராயணம் என்பது 30-நாளில் முடிக்கக்கூடிய விரதம். ஒருவன் ஆஹாரத்தை பதினைந்து பாகமாகப்பண்ணி கிருஷ்ண பக்ஷ ப்ரதமை முதல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாகத்தைக் குறைத்துக் கொண்டுவந்து சுக்லபக்ஷம் முதல் ஆஹாரத்தை பதினைந்துபாகமாகப் பண்ணி ஒவ்வொரு பங்காக ஏற்றிக்கொண்டு வருகிறது. பூர்ணிமையன்று பூர்ணமான ஆஹாரம்.

வ்ரதம்:— உபவாசம், 400 விதமுண்டு. தர்பணம்— ஜலம் விடுகிறது.

---

* பாரணம் முடிக்கிறது.

ஸமாராதனங்களாலும், அதவா- ஶாஸ்த்ரப்யாஸ ஸமாராதன என்னவுமாமே ஶாஸ்த்ராப்யாஸம் பண்ணி க்ரந்தஸாரார்த்தம் பண்ணுகிற ஸமாராதனத்தாலும் என்னவுமாம்; ஜப ஸாதன ஓங்காராதி ஸங்க்யையாகப்பண்ணும் ஜபத்தாலும், தர்ப்பணாதிகர் மானுஷ்டானத்தால் வந்த காயசோஷணத்தாலே தேவபித்ரு ஆதி களுடைய தர்ப்பணாதிகளான கர்மங்களின் அனுஷ்டானத்தாலும் உண்டான ஶரீரஶோஷணத்தாலே, பாபநாசம் பிறந்து பாபங் களுக்கு க்ஷயம் பிறந்து, அத்தாலே இந்த்ரியத்வாரா ப்ரஸரிக்கிற தர்மபூதஜ்ஞானத்துக்கு அத்தாலே என்றது- அந்த பாபக்ஷயத் தாலே—என்றபடி; அன்றிக்கே, காயஶோஷணத்தாலே என்னு தல், "மனஇந்த்ரியேண" என்னும்படி அந்தரிந்த்ரியமாகிற மனஸ் ஸை ஸஹாயமாகக்கொண்டு ப்ரவர்த்திக்கிற இந்த்ரியத்வாரா ஸுகதுக்கங்களை க்ரஹிக்குமதாய், ஆத்மாவுக்கு தர்மபூதஜ்ஞானத் துக்கு, ஶப்தாதிகள் விஷயம் அல்லாமையாலே இதரவிஷயங்க ளான ஶப்தாதிகள் விஷயங்களல்லாததினாலே, விஷயாபேக்ஷை பிறந்து பகவத்விஷயத்தில் அபேக்ஷை ஜநித்து; யம யமம் ஆவது பாஹ்ய இந்த்ரியநிக்ரஹம், நியம நியமம் ஆவது- அந்தரிந்த்ரிய நிக்ரஹம், பாஹ்யபரிஶுத்தி என்றும், ஆந்தரபரிஶுத்தி என்றும் சொல்லுவார்கள்; ஆஸநம் ஆஸநம் ஆகிறது- கூர்மாஸநம் குக்குடாஸநம்- பத்மாஸநம் முதலியவை ப்ராணாயாம- ப்ராணாயா மம் ஆவது- ஒரு யாமத்தளவும் பஞ்சவாயுக்களை ஸ்வரந்த்ரங்களால் ஶரீரத்தினின்றும் புறப்படாதபடி பிடித்துக்கொண்டிருக்கை, ப்ர த்யாஹார ப்ரத்யாஹாரம் ஆவது- பஞ்சவாயுக்களை [illegible] ஸரத்மிக்க வெளியில் புறப்படவிடுகை, அதவா- ப்ரத்யாஹாரம் என்பதற்கு காயசோஷணத்துக்குத்தக்க ஆஹாரத்தையும் சொல் லுமாம்; ப்ரயாணத்துக்குச்சேருமது முதலிலே சொன்னதாகும்; த்யான த்யானம் ஆவது- அவிச்சின்னஸ்மரணம், தாரண தாரணம்

யமம்:— பாஹ்ய இந்த்ரிய நிக்ரஹம் ஸத்யம்சொல்லுதல், திரு டாமலிருத்தல், விஹித த்ரவ்யங்களை வாங்காமலிருத்தல் முதலியன.

நியமம்— அந்தரிந்த்ரிய நிக்ரஹம்; குலத்திற்கு ஏற்பட்ட வேதசாகைகளை அத்தியயனம் செய்து சுசியாயிருத்தல், அடைந்ததைக்கொண்டு திருப்தி யடைதல், உபவாசமிருத்தல், பகவானிடத்தில் ப்ராவண்யத்தோடிருத்தல்.

ஆஸநம்— பத்மாஸனம், ஸிம்ஹாஸனம், கூர்மாஸனம், குக்குட (கோழி) ஆச னம், மயூர ஆசனம், ஸ்வஸ்தி ஆஸனம், வீராசனம், முதலியவை.

தாரணம்:— த்யானத்தினுடைய முதிர்ந்த அவஸ்தை.

ஆவது- மந்தாரணம்; அன்றிக்கே ஸாத்திவிமோதத்தைச் சொல்லுமாம்- அதாவது- ஓருகூபத்தில் பகவத்விக்ரஹ விஷைத சிரத்ததுமாகும்- ... ஆமிறது, ஈச்வரன் திருவடிகளிலே மனம்வை பிசைவிடாதே பொருந்தியிருக்க வைத்தல், மூன்னை அஷ்டாங்கயோகக்ரமத்தாலே. இப்படியான ஆஸாரங்களை யுடையவையான அஷ்டவித அங்கங்களோடு கூடியிருக்கிற யோகத்தின் க்ரமத்தாலே; ப்ரகரணத்துக்குச் சேர்ந்திருக்குமர்த்தம்- கர்மயோகத்துக்கு இந்த அஷ்டவிதங்களை அங்கங்களாகச் சொல்லுமதும், தர்மபூத ஜ்ஞானத்துக்கும் அப்படியே அங்கங்களாக விருக்கும் என்று சொல்லுமதும் தோற்றியிருக்குமிறே! இப்படி அஷ்டாங்க யோகக்ரமத்தாலே, யோக அப்யாஸ காலத்திலும் இந்த அஷ்டவிதமான யோகங்களை அப்யாஸம் பண்ணுகிற ஸாமர்த்யமும், ஜ்ஞானத்துக்கு ஆத்மாவை விஷயமாக்குகை. ஆத்மாவை தர்மபூத ஜ்ஞானத்துக்கு விஷயமாக்குவது. (31)

(அவ) ஸம்பூர்ணமான கர்மயோகத்தினுடைய ப்ரயோஜனத்தை அருளிச்செய்கிறார்-(இதுதான்) என்று தொடங்கி.

௩௨. இதுதான் ஜ்ஞானயோகத்துக்கு ஸாதகமாயும், ஐச்வர்யத்துக்கு ப்ரதானஸாதனமுமாயிருக்கும்.

வ்யா- அதாவது- இதுதான் இக்கர்மயோகந்தான், ஜ்ஞான யோகத்துக்கு ஸாதகமாய் ஜ்ஞானயோகத்துக்கு ஸாதகமுமாயும் ஐச்வர்யத்துக்கு முக்யஸாதனமுமாயிருக்கும். ஸ்வர்காதிஐச்வர்யத்துக்கு முக்யஸாதனமுமாயிருக்கும். (32)

இந்த கர்மயோகந்தான் ஜ்ஞானயோகத்துக்கு ஸாதகமாயிருக்குமது எங்ஙனே? என்னில், "கர்மபக்த்யவிதம் ஜ்ஞானம்" என்கிறபடியே- கர்மயோக பக்தியோகங்களிரண்டையும் அங்கமாகக்கொண்டு ஜ்ஞானயோகந்தான் அங்கியாயிருக்கிற தசையிலே, கர்மயோகந்தான்- ஸாதகரூபத்தாலே அங்கமாயிருக்கும்; "ஜ்ஞானபக்த்யவிதம் கர்ம" என்கிறபடி- கர்மயோகந்தான்- அங்கியாயிருக்கும்போது ஜ்ஞானபக்தி யோகங்களிரண்டையும் அங்கமாகக்கொண்டிருக்கும்; "கர்மஜ்ஞானாந்விதா பக்தி:" என்கிறபடி கர்மஜ்ஞான யோகங்களிரண்டையும் அங்கமாகக்கொண்டு பக்தியோகந்தான் அங்கியாயிருக்கும்; ஜ்ஞானயோகத்துக்கு கர்ம

யோகம் ஜ்ஞானஸ்வரூபத்தாலே அங்கமாயிருக்குமிருப்புடைத்தத்துக்கு
தண்டசக்ராதிகள் அங்கமாய், அவை ஸ்வயம் ஸாதனமாயிருக்கு
மாப்போலே, ஐஶ்வர்யத்துக்கு ப்ரதான ஸாதனமாயிருக்கும்படி
எங்ஙனே? என்னில், ஜ்யோதிஷ்டோமாதி முகத்தாலே ஸ்வர்காதி
ஐஶ்வர்யத்துக்கு ப்ரதான ஸாதனமாயிருக்கும் என்கை. ப்ரதான
ஸாதனம் என்றது- ஸ்வர்க்காதி புருஷார்த்தத்தைக் குறித்து ஜ்ஞா
னமும், பக்தியும், ஆசார்யஸம்ஸ்காரமும், அன்னதானமும், ப்ராஹ்
மணுக்கு ஊணும் ஆகிய அநேக ஸாதனங்களிருக்கச்
செய்தேயும் கர்மத்தின்மேலே த்ருஷ்டியை வைத்துக்கொண்டு
ஸ்ருதி சொல்லுகையாலே ஐச்வர்யத்துக்கு ப்ரதானஸாதனம்
என்னுதல். மோக்ஷத்துக்கு ஸாதனமாயிருக்கிற கர்மத்தை ஐஶ்
வர்யத்துக்கு ஸாதனம் என்று சொல்லக்கூடுமோ? என்னில், கர்ம
யோகம் அங்கியாய், அதற்கு அங்கமாக ப்ரபத்தியைப் பண்ணுகை
யாலே, அப்படி ப்ரபத்தி பண்ணின அதிகாரிக்கு ஐஶ்வர்யாதிகள்
பகவத்ப்ராப்தி விரோதிகள் என்றுவிடுகையாலே தத்ப்ராப்திநிமித்
தமாக பலஸந்தித்யாகபூர்வமாய், பகவதாராதனரூபமாய் மோக்ஷோ
பாயமான கர்மத்துக்கு ஐஶ்வர்யஸாதனத்வம் என்று சொன்னது.
கர்மாராத்யனான ஈஶ்வரன் கைவல்யங்களையும் கொடுக்குமவனாகை
யாலே அருளிச்செய்தாரித்தனை. ஜ்ஞானபக்திகளுக்கு விஷயம்
ஈஶ்வரன் என்றிருக்குமிருப்பு ப்ரதானமாய், புருஷார்த்தவிஷயத்தி
லும் ஆசார்யவிஷயத்திலும் ஜ்ஞானமும் பக்தியும் ஸாதனமாயிருக்
குமிருப்புப் போலே இந்த கர்மயோகமும் ஐச்வர்யத்துக்கும் மற்
றுமுள்ள ஸாதனங்களில் வைத்துக்கொண்டு ப்ரதானமாயிருக்கும்
என்கை. "விஷயஸாபேக்ஷ ஹேது" என்றவிடத்தில் பகவத்
விஷயஸாபேக்ஷ என்றசொன்னால் "ஜ்ஞானத்துக்கு ஆத்மாவை
விஷயமாக்குகை" என்ற மேல்வாக்யத்தோடே சேருமோ என்னில்;
அதுக்குமேல். "ஜ்ஞானத்துக்கு விஷயபூதமாய் ஆதித்யமண்
டலம் தொடக்கமான ஸ்தலவிஶேஷங்களில் எழுந்தருளி
இருக்கிற ஸர்வேஶ்வரன் விஷயமாக்கி" என்றருளிச்செய்கை
யாலே சேரும்; மோக்ஷோபாயமாகையாலே ப்ரதானயோக்யன ஈச்
வரனே விஷயம்; "ஜ்ஞானத்துக்கு ஆத்மாவை விஷயமாக்குகை"
என்று சொன்னது கர்மத்தைப்பண்ணுமவன் சேதனனாகையாலே
முமுக்ஷுஸ்வரூபத்தைப் பராமர்சித்திறே மேல்போவது அதுக்காக
முதலில் "யோகஅப்யாஸ காலத்திலும்" என்று காலக்ரமத்தைப்

பண்ணியருளிச்செய்கையாலே விரோதமில்லை; மேல் "யோகஜ்ஞ
ஜ்ஞானத்துக்கு ஸாருப்யமாம் ஆதித்யமண்டலத் தொடக்கமான
ஸ்தான விசேஷங்களில் எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனே
விஷயமாகில்" என்று சொல்லுகையாலே, ஜ்ஞாநத்துக்கு விஷயம்
ஸர்வேச்வரனே என்பது நிச்சயமாய்த்து; கர்மஜ்ஞானபக்திகளைத் தனக்
ஸாதனமாயுடையராரும் உபாஸகருக்கு ஸாத்யம் பகவத்ப்ராப்தி
யாகும் தேசாந்தரப்ராப்யமான ஸர்வேச்வரனே ப்ராப்தாவாகையா
லும், கேவல ஐச்வர்யார்த்திகளுக்கும் ப்ராப்யர் அவனே ஆகையா
லும்; கேவலர் ஸாதந தசையிலே ஸர்வேச்வரனே ப்ராப்
தாவாகவும், அவனுடைய குணாநுபவங்களே புருஷார்த்தமாகவும்
அறிந்திருக்கச்செய்தேயும் ஸ்வ ஆத்மாநுபவத்தில் ஸங்கம் வைத்த
வர்களுடைய ஸர்வேச்வரனே ஸாதனமாகவும் ஸ்வாத்மாநுபவத்தைப்
பலமாகவும் அநுஸந்தித்து, ஜ்ஞானத்துக்கு ஆத்மாவை விஷய
மாக்கியிருக்கும் தன்படி தேர்ந்து ஐச்வர்யார்த்தி உபாஸிஷ்டனுமிருக்
குந்தசையிலே பரமாத்மஜ்ஞ ஜ்ஞானத்தாலே தேஹாந்தரமில்
லதுமிருக்குமவன் ஆத்மாவுண்டு, அவனுக்கு ஸ்வாத்மப்ராப்தி
யிலையாம் புருஷார்த்தம், ஜீவோநிஷ்டோபாஸிகர் ஸாதனங்களென்
றெண்ணி, அவ்வோமுகத்தாலே ஜ்ஞானத்துக்கு ஆத்மாவை விஷ
யமாக்கு மதிதான் தவிடே; கேவலர் உபாஸனமிஷ்டனுமிருக்
குந்தசையிலே ஸர்வாநுக்கும் ஆத்மாவுக்கும் அபேதம் சொல்லு
மதந்வேதார்த்தம் இது என்று பாப்பாட்டமத்துக்குவைகைத்கன்பத்
தையும், ஜீவாயுஷ்டிவெல்லாம் அந்த பரப்ரஹ்மம் என்பதையும்
நிச்சயித்து, உபாஸிகிர்முக்த தசையிலே ஸர்வாத்மாநுபவே
ஸ்வீகரித்து பிற்றும் என்று சொல்லுமதொன்றுண்டோ! கேவல
ரைப்போலே உபாஸகருக்கு ஸ்வாத்மாநுபவம் புருஷார்த்தம் ஸர்
வேச்வரன் ஸாதனம் என்று இருக்கையும், ஜ்ஞாநத்துக்கு ஆத்மாவை
விஷயமாக தர்சிக்குமதுமில்லையே! பகவத்ப்ராப்தி காமரான ப்ர
பந்நிஷ்டருக்கும் ஸர்வேச்வரனுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தாலும்
ஆசார்ய உபதேசத்தாலும் விசேஷஜ்ஞானம் பிறந்து ஸர்வேச்
சேஷி ஜீவாத்மாக்கள் அவனுக்கு சேஷம் பாரதந்த்ர்யங்
களிரண்டும் அவனே என்றிருக்கையும், தங்களுடைய தர்மபூத
ஜ்ஞாநத்துக்கு அவஸ்தாவிசேஷம் பிறந்து, ஐச்வர்யகைவல்யார்த்தி
களைப்போலே ஐச்வர்யமும் ஆத்மாநுபவமும் புருஷார்த்தமன்றிக்
கே ஸர்வேச்வரனுடைய குணாநுபவகைங்கர்யங்களே புருஷார்த்தம்.

என்ற கீதைத்திருக்கு மதிதான்றன்றே! உபாயங்களுக்கும் ப்ர பத்திபிப்பதுக்கும் ஸாதனத்வங்களின் பேதமுண்டிறே; உபாயங்களுக்கு ஸாதனம் பக்தி, ஸாத்யம்பகவத்ப்ராப்தியும்; தர்மபூத ஜ்ஞானத்தாலே ஈச்வரனுடைய ஸ்வரூபரூப குணவிபூதிகளைத் தர்சிக்கும்போது சேதன அசேதனங்களிரண்டும் அவனுக்கு சேஷமாயிருக்கும் என்றே தர்சிப்பதொன்றன்றே! நம்முடைய தர்சானனைதருக்கிருக்கும்படி; ஈச்வரபோஷமாக ஆத்மவஸ்துவை "உயிரினால் குறைவிலம்" என்றும், "இடைப்பெறாதுறையுமிடமன்றோ" என்றும், என்று தொடங்கி ஆத்மாவுடைய ஸ்வரூப ஸ்வபாவம் என்கிறவிதைவ, என்றுமவைகள் த்யாஜ்யமாக அனுஸந்தித்தார்களிறே! ஆழ்வார்களுடைய தர்மபூத ஜ்ஞானத்துக்கு விஷயம் ஈச்வரனுடைய தர்சனமும், ஸம்ச்லேஷமும், விச்லேஷாஸஹத்வமுமிறே! ஆழ்வார்களுடைய திருவுள்ளத்தைப் பின்சென்றும் ஆசார்யர்களும் அப்படியே,—"உ தேனும்" என்றும், "ஞான வைராக்யவைனி" என்றும், "மதியமுர்ந்தநாள்மங்கவித்யநேசர்" என்றும் சொல்லுகிறபடியே ஒருவருமன்றிருக்கை எல்லார்க்கும் ஒக்குமிறே! கர்மஜ்ஞானத்யனுன ஈச்வரனை வகை, பலங்களையும் கொடுக்குமவனுமையாலே அநுவிச்சேபதாரித்தனே; ஜ்ஞானபக்திகளுக்கு விஷயம் ஈச்வரன் என்கிற விருப்பு ப்ரதானமாய், புருஷார்த்த விஷயத்திலும் ஆசார்யவிஷயத்திலும் ஜ்ஞானமும் பக்தியும் ஸாதனமாயிருக்குமிருப்புப்போலே இந்த கர்மயோகரும் ஐச்வர்யத்துக்கு மற்றுமுள்ள ஸாதனங்களில் வைத்துக்கொண்டு ப்ரதானமாயிருக்கும்.

(அவ) ஜ்ஞானயோகத்தை விவரிக்கிறார். (ஜ்ஞானயோமாவது) என்று தொடங்கி.

௩௫. ஜ்ஞானயோகமாவது இப்படி யோகஜன்யமான ஜ்ஞானத்துக்கு ஸ்ருதுபகமான ஆதித்யமண்டலந்தொடக்கமான ஸ்தல விசேஷங்களிலெழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனை விஷயமாக்கி, அவ்விஷயம்தன்னை சங்கசக்ரகதாதரமாய் பீதாம்பரயுக்தமாய், கிரீடாதி நூபுராந்த திவ்ய பூஷணங்களுமாய், லக்ஷ்மீஸஹிதமாகவும் த்யானித்து, யோகாப்யாஸ க்ரமத்தாலே அநுபவகாலத்தைப் பெருக்கி அவ்வாத பாவனாமாக்குகை.

(கக) அதாவது ஜ்ஞானயோகமாவது ஜ்ஞானயோக மென்பது. இப்படி யோகஜ்ய ஜ்ஞானத்துக்கு மேற்சொன்ன ப்ரகாரத்திலே கர்மயோகத்தாலே ஜநிக்குமதாகிற, ஜ்ஞானத்துக்கு ஹ்ருதய கமலம் ஆதித்ய மண்டலம் தொடக்கமான ஸ்தலவிசேஷங்களில், ஹ்ருதய புண்டரீகம், ஸூர்யமண்டலம் முதலானவென்ற ஸ்தல விசேஷங்களில், எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனே விஷயமாய்த் எழுந்தருளி இருக்கும் அந்த ஸர்வேச்வரனே விஷயமாகப் பண்ணி அவ்விஷயந்தன்னை அங்கெழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரன் ஆகிற அவ்விஷயத்தை ஸங்கல்பத்ரகதாநுமாய் "ஸர்வ சக்ஷு:" என்கிறபடியே ஆச்ரித ஜ்ஞான ப்ரதானத்துக்கும் ஆச்ரித விரோதி நிரஸனத்துக்கும், அழகு முதலானவற்றிற்கும் திவ்ய ரத்நங்கள் கையிலே தரிக்குமதாகவும், பீதாம்பர யுக்தமாய் "பீதாம்பரதர:" என்றும் "பீதகவாடைப்பிரான்" என்றுஞ்சொன்னபடியே பீதாம்பரத்தோடே கூடினதாகவும், கிரீடாதி ஸகல அந்த திவ்யரூபத்தை அலங்கரிப்பதாய் † ஆதிராஜ்ய ஸூசகமான கிரீடம் தொடக்கமாக நூபுரம் வரையுள்ள திவ்ய ஆபரணங்களாலே அலங்கரிக்கப்பட்டதாய், லக்ஷ்மீ ஸஹிதமாகவும் அநுபவித்து விஷ்ணு பத்னீ என்று ஸ்ருதியிலும் மந்த்ர ரத்னத்திலும் சொன்ன ப்ரக்ரியையாலே பிராட்டி ஸஹிதமாக அநுபவிக்கையின்றி; யோக அப்யாஸ க்ரமத்தாலே அநுபவத்தைப் பெருக்கி யம நியமாத்யஷ்டாங்க யோகத்தை அப்யஸிக்கிற க்ரமத்தாலே அநுபவிக்கைக்கு உடலாகக் காலத்தைவளர்த்து அவிச்சின்ன ஸ்ம்ருதி ஸந்ததியாகை. ஹ்ருதய கமலத்திலும் ஆதித்ய மண்டலம் தொடக்கமான ஸ்தல விசேஷங்களிலும் எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரன் விஷயத்தில் தைலதாராவத் அவிச்சின்ன பாவனாரூபமாக அநுபவிக்குமது ஜ்ஞானயோகமென்றபடி.

(கஉ) இப்படிப்பட்ட ஜ்ஞானயோகத்தினுடைய ப்ரயோஜனத்தை அருளிச்செய்கின்றார்—(இதுதான்) என்று தொடங்கி.

கஉ இதுதான் பக்தியோகத்துக்கு ஸஹகாரியுமாய், கைவல்யமோக்ஷத்துக்கும் ப்ரதாநஸாதநமுமாயிருக்கும்.

---

†: ஆதிராஜ்ய ஸூசகம்—ராஜ்யத்தைத் தன்பக்கலே ஒப்படைக்கப்பட்டதன் ஸூசகம்.

(வ்யா) அதாவது— இதுதான் - இந்த ஜ்ஞானயோகம் - ஆகி றதாவது என்று ஜ்ஞானயோகத்தைப் பராமர்சிக்கிறது, பக்தி யோகத்துக்கு ஸஹகாரியுமாய் - பக்தியோகம் தனக்கு ஸஹகாரிக் குமதாயும், கைவல்யமோக்ஷத்துக்கும் ப்ரதானஸாதனமுமாயிருக் கும் - ஆத்மாநுபவரூபமான கைவல்யமோக்ஷார்த்தனுக்கும் முக்ய ஸாதனமாக ஆயிருக்கும்.

இந்த ஜ்ஞானயோகந்தான் பக்தியோகத்துக்கு ஸஹகாரிக்கும் அது எங்ஙனே? என்னில் அசித்விலக்ஷணரூப அவஸ்தை தனக் குண்டாகையாலே ததவஸ்தையை ப்ரீதிரூபாவஸ்தையாகப் பரிக் கைக்கும் பண்ணவேண்டுகையாலே, இந்த ப்ரகாரத்தால் பக்திக்கு ஸஹகாரிக்குமதாயிருக்கும் என்கை. கைவல்யமோக்ஷத்துக்கு ப்ரதானஸாதனமாயிருக்குமது எங்ஙனே? என்னில் பகவத்ப்ராப்தி யையபேக்ஷித்து அதிகாரிகளுடைய பக்திக்கு அங்கமாயிருப்பதும் ஸ்வதந்த்ரமாய்ப் பரிசுத்திமோசனமும், பகவதநுபவத்தில் நிவ்ருத்தி யும் ஜ்ஞானாக்யமாகையாலே பலாபிஸந்திக்குறித்து ஜ்ஞானயோகாய என்கிறபடியே பூர்வத்திலேப் பண்ணுகையும், யோகத் தில் நிஷ்கர்ஷிக்கிறபோது ஜ்ஞானாகாரதனங்களும் அநேகமாக உண்டாகிலும் ஜ்ஞானத்துக்கு ஆத்மாநுபவத்திலே த்ருஷ்டியிருக் கையாலேயிறே "கைவல்யமோக்ஷத்துக்கு ஸாதனமாயிருக்கும்" என்றது. ஜ்ஞானத்துக்கிருக்கிற அவாந்தரவிசேஷங்களிலே இதோரவாந்தரவிசேஷம் என்று கருத்து. ஐஸ்வர்யார்த்திக்கு ஐஸ்வர்யநிமித்தம் த்யாஜ்யமாய், உபாதேயம் ஐஸ்வர்யாதி களாய் ஜ்யோதிஷ்டோமம் ப்ரதானஸாதனமாய், அந்த ஸாதனத் துக்கு அங்கமாக அன்டாநிபதயே நம: என்கிறபடியே ஐஸ்வர்ய விசிஷ்டனான பகவதாராதனம் அபேக்ஷிதமாயிருக்கும். கேவல னுக்கு ஐஸ்வர்யமும் பகவத்ப்ராப்தியும் ஆகிறவிரண்டும் த்யாஜ்ய மாய், ஆத்மாநுபவம் புருஷார்த்தமாய், அந்த புருஷார்த்தத்துக்கு சத்திருணவிசிஷ்டனான பகவதநுஸ்மரணம் அங்கமாய், ஆத்மாநுப வத்துக்கு ஜ்ஞானம் ஸாதனமாயிருக்கும். இத்தால் கேவலன் தேஹவிசிஷ்டனாயிருந்து "விஜ்ஞாநாநாம்" என்னும்படி ஸாதன தசையிலே ஜ்ஞானத்வாரா ஆத்மஸாக்ஷாத்காரம் பண்ணிக்கொண்டு ஸாத்யதசையிலே ஸ்தூல ஸூக்ஷ்ம தேஹ விமோசனமான பின்பு அவனுடைய ஜ்ஞானத்துக்கு வேறொரு வஸ்துவை ஸா

ஸாக்ஷாத்கரிக்குமளவாயமே ஆத்மஸ்வரூப ப்ரகாரத்துக்குமே ஜ்ஞானம் ஸாதனமாயிருக்கும் என்றபடி.

(அவ) பக்தியோகமாவது ஏது? என்ன அருளிச்செய்கிறார் (பக்தியோகம் ஆவது) என்று தொடங்கி,

௩௫— பக்தியோகமாவது இப்படி தைலதாராவதவிச்சின்ன ஸ்ம்ருதி ஸந்தான ரூபமான அனுபவம் ப்ரீதிரூபாபன்னமாகையும், அது தன்னையறியப் பார்த்தால் ப்ராரப்தகர்மங்கழிகையும், ஸாதனஸாத்யங்களை யனுஸந்தித்து அதினுடைய ஸங்கோச விகாஸமாம்படி பரிணமிக்கையும்,

வ்யா- அதாவது— பக்தியோகம் ஆவது பக்தியோகம் ஆகிறது, இப்படி இப்படி என்று கீழ்ஜ்ஞானயோகத்தில் சொன்னவற்றைப்பராமர்சிக்கிறது, தைலதாராவதவிச்சின்ன ஸ்ம்ருதிஸந்தானரூபமான அனுபவம் தைலதாரையைப்போலே அவிச்சின்னமான ஸ்மரண பரம்பராரூபமான ஜ்ஞானயோகத்தால் அனுபவிக்கிற அனுபவத்தை, ப்ரீதிரூபாபன்னமாயிருக்கையும் ப்ரீதிரூபமாகப்பொருந்தினதாயிருக்கும் என்று அனுஸந்திக்கிறதும் என்னுதல், ப்ரீதியோடே கூடினதாயிருக்கும் என்று அனுஸந்திக்கிறதும் என்னுதல், அது தன்னையறியப்பார்த்தால் ப்ரீதிரூபமாகிற அந்த பகவதனுபவத்தை அறியப் பார்ப்பதுண்டாகில், ப்ராரப்தகர்மங்கழிகையும் ப்ராக்தனப்ராரப்த கர்மமெல்லாம் விட்டுப்போவதும், ஸாதனஸாத்யங்களை யனுஸந்தித்து ஸாதனம் என்றது பக்தியோகத்தை, ஸாத்யம் என்றது பக்தியோகத்தாலே ஸாதிக்குமதை மற்றை ஈச்வரானுபவத்தை யன்றிக்கே ஸாத்யம்என்று ஈச்வரனைச் சொல்லுமாம்; இவையிரண்டையும் அனுஸந்தித்து, அதினுடைய அந்த அனுஸந்தானத்தினுடைய, ஸங்கோச விகாஸமாம்படி பரிணமிக்கையும் தன்னுடைய பக்தியாலேயிறே ஈச்வரன் ப்ரஸன்னனாவான் என்று நினையாதே, "த்வயி ப்ரஸந்நே மம கிம் குணேந" என்றபடி ஸாதனத்திலே ப்ரீதியை ஸங்கோசமாகப்பரிணமிப்பிக்கையும் அன்றிக்கே, ஈச்வரன் விஷயத்தில் ப்ரீதியை விகாஸமாகும்படி பரிணமிக்கையும் என்றுஞ்சொல்லுமாம். (35)

அவ- இனிமேல் ப்ரபத்யுபாயத்தின் வைலக்ஷண்யத்தை அருளிச் செய்கிறார் (ப்ரபத்யுபாயமாவது) என்று தொடங்கி.

மூ- ௩௯- ப்ரபத்த்யுபாயமாவது- இப்படி கர்மஜ்ஞாநஸஹக்ருதையான பக்தியோகத்தில் அசக்தர்க்கும் அப்ராப்தர்க்கும் ஸுகரமுமாய், சீக்ரஃபலப்ரதமுமாய், உபாயம் ஸக்ருத்தாகையாலே உபாயாநுஷ்டானாநந்தரமுண்டாகக் கடவதான பகவத்விஷயானுபவங்களெல்லாம் ப்ராப்யகோடி கடிதங்களாகையாலே ஸ்வரூபாநுரூபமாயிருக்கும்.

(வ்யா) அதாவது— ப்ரபத்த்யுபாயமாவது ப்ரபத்தியுபாயமானது, இப்படி இப்படி என்கிறது கீழ் கர்மஜ்ஞானபக்தியோகங்களை உபபாதித்த ப்ரகாரத்தை நினைத்து இந்த ப்ரகாரத்தாலே என்கிறார், கர்மஜ்ஞான ஸஹக்ருதையான பக்தியோகத்தில் "உபாஸ்யாம் ஜ்ஞானகர்மப்யாம்" என்கிறபடி கர்மஜ்ஞானங்களிரண்டாலே ஸஹக்ருதையான பக்தியோகத்தில் பக்திக்கு அவையிரண்டும் ஸஹகரிக்கும்படி எங்ஙனே? என்னில், கர்மஸாத்யமானது ஜ்ஞானம் என்றும் ஜ்ஞானஸாத்யமானது பக்தி என்றுஞ் சொல்லுகிற க்ரமத்தாலிப்படியிருக்க, கர்மஜ்ஞானங்களிரண்டாலே ஸஹகரிக்

அ-ப்ரபத்திக்கு லக்ஷணம் யாது? ப்ரபத்தி பண்ணும் அதிகாரிகள் யாவர்? ப்ரபத்திக்கும் கர்மஜ்ஞானபக்திகளுக்குமுண்டான வாசிகள் யாவை? ப்ரபத்தி பண்ணும் அதிகாரிகள் பரிஹரிக்கவேண்டியவைகள் எத்தனை?

ப்ரபத்திக்கு லக்ஷணமாவது— "இது தனக்கு ஸ்வரூபம் தன்னைப் பொறுத்தொழிகை" என்கிறபடியே, அதாவது "உபாயவர்ணாத்மகமான தன்னை உபாயமென்று நினையாதபடியாயிருக்கை; அதாவது ஆபத்ப்ராப்தியொழிய உள்ளபடி நிரூபித்தால் ஸ்வஸ்மிந்நுபாயத்வப்ரதிபத்திக்கு யோக்யமாகவொட்டாதபடியிருக்கை" என்றபடி; அதாவது விடுவதெல்லாம் விட்டுத் தன்னையும் விடுகையாம்.

ப்ரபத்தி பண்ணும் அதிகாரிகளாவார்:— அஜ்ஞர், ஜ்ஞாநாதிகர், பக்திவிவசரென மூவராவர். ப்ரபத்திக்கும், கர்மஜ்ஞானபக்திகளுக்குமுண்டான வாசிகளாவன:— இதரோபாயங்கள் அசக்தாதிகாரமாகை; இது ஸர்வாதிகாரமாகை. அதுக்கு காலநியதி, தேசநியதி, ப்ரகாரநியதி முதலியவை வேண்டுகை; இதுக்கு அவைகள் வேண்டாதொழிகை. அது விதிபாரதந்த்ர்யமாய்ச் செய்கை; இது ஆசார்யருசிபரிக்ருஹீதமாயிருக்கை. அதுக்கு ஸாபக்லேசம் வேண்டுகை; இதுக்கு அது வேண்டாதொழிகை. அதுக்கு ஆபாஸ்மரணம் வேண்டுகை; இதுக்கு அது வேண்டாதொழிகை. அது ப்ராரப்தகர்மாவஸாநத்திலே ஃபலமாகை; இது தேஹாவஸாநத்திலே ஃபலமாகை. அதுக்கு அந்திமஸ்ம்ருதி வேண்டுகை; இதுக்கு அந்திமஸ்ம்ருதி

னும் கர்மத்தால் அபக்தனைக் கர்மம் பண்ணினாலும், அபக்தனும் ஜ்ஞானமுடையவனானாலும் பக்தியானது ஜ்ஞானவிசேஷமாகை யாலே அவை நிலைநிற்கமாட்டா. 'கர்மஸாபேக்ஷம்' என்றும், 'அகர்

ம்ஸாபேக்ஷமாகை. அது அசேதனமாகை; இது பரமசேதனமாகை. அது அசேதனமான தன்னையுண்டாக்குமவர்க்கு சேதனனை அபேக்ஷிக்கை; இது பரமசேதனமாகையாலே "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று தன்னைக்காட்டுகை. அது பலப்ராப்திக்கு ஸர்வேச்வரனை அபேக்ஷித்திருக்கை; இது தானே பலமாகை. அது ஸாத்யஸாதனமாகை; இது ஸித்தஸாதனமாகை. அது ப்ராப்யத்துக்கு விஜாதீயமாகை; இது தானே ப்ராப்யமாகை. அது பலவாகை; இது ஒன்றாகை. அது ஸ்வரூபவிரோதியான ஸ்வாதந்த்ர்யயுக்தனுடைய செய்கை; இது ஸ்வரூபத்தோடே சேர்ந்த பாரதந்த்ர்யனுடைய செய்கை.

ப்ரபந்நனுக்கு பரிஹார்யம் ஆறு ப்ரகாரமாயிருக்கும். அவையாவன:— ஆஶ்ரயணவிரோதி, ஶ்ரவணவிரோதி, அநுபவவிரோதி, ஸ்வரூபவிரோதி, பரத்வவிரோதி, ப்ராப்திவிரோதி என்று ஆறுவகையாயிருக்கும். இதில் ஆஶ்ரயணவிரோதியாவது— அஹங்காரமமகாரங்கள். அவையாவன— நாம் ஜ்ஞானாநுஷ்டானமுடையவன் என்றும், இந்த ஸாதநாதியானது என்ன நியமங்களோடே பண்ணப்பட்டது, இந்த இரண்டுவகையும் ஒருவருக்குமில்லை நமக்கொழியவென்றிருக்கை. பலாபிஸந்தியாவது— ஸாதநத்தில் ஸஹ்யப்ரதயமிருக்குமவையாலே "தாம் வேண்டுமதுவே காட்டும்கடிது" என்னுமது, நமக்கு மோக்ஷத்தைக் கொடுக்கத் தட்டில்லையென்றிருக்கை. புருஷகாரத்தை இகழ்கையாவது— நாம் ஸாதநங்களையிருக்க நமக்கும் பலமுடைமைக்கு ஸாதநமுண்டாயிருக்க ஆசார்யனைத்தேர்ந்து புருஷகாரத்தையிகழுகை. இந்த ஸாதநத்தை நமக்கே கொடாவிட்டால் பின்னையாருக்குத்தான் கொடுக்குமென்று பேற்றில் ஸம்சயமுமாகிற இவையொத்தும், பலாபிஸந்தியும் புருஷகாரத்தையிகழ்கையும் பேற்றில் ஸம்சயமுமாகிற அஞ்சுவகையாயிருக்குமென்கை. ஶ்ரவணவிரோதியாவது- தேவதாந்தர கதாவிஷயங்களிலே அவகாஹித்துச் செவிதாழ்க்கை. அதாவது— பகவத்குணாநுபவ பரவசனுக்குச் செவி தாராதே அந்யகதாஶ்ரவணமாகை. அநுபவவிரோதியாவது:— போகத்ரவ்யங்கொண்டு புத்ரகளத்ராதிகளைக் கொண்டு விஷயாநுபவம் பண்ணுகை. அதாவது— நித்யவிபூதியுக்தனானவனோடே நித்யாநுபவம் பண்ண ப்ராப்தனாயிருக்க நித்யஸம்ஸாரிகளோடே நித்யாநுபவம் பண்ணுகை. ஸ்வரூபவிரோதியாவது:— பரதந்த்ரனான தன்னை ஸ்வதந்த்ரனாக நினைத்திருக்கை. பரத்வவிரோதியாவது:—க்ஷேத்ரஜ்ஞரான ப்ரஹ்மாதிகளைப் பரனென்று ப்ரபத்தி பண்ணுகை. ப்ராப்திவிரோதியாவது ஐச்வர்யாதிகளை பேற்றைப்பேறாக அநுபவம் பண்ணுகை. ஆகையால் ப்ரபந்நனுக்கிந்த ஆறு ப்ரகாரங்களும் பரிஹரிக்கவேணுமென்பதே.

மனீ ச கர்ம" என்றும் "ஸபுத்திமான்" என்றும், "ஸயுக்த:"
என்றும், "க்ருத்ஸ்ந கர்மக்ருத்" என்றும் ப்ரகாரத்தாலே ஜ்ஞானத்
துக்கு அநேக அவஸ்தா விசேஷங்களுண்டாயிருக்க, ஐச்
வர்யார்த்தமாகக் கர்மத்தைப் பண்ணுமவனுக்கு பகவத்ப்ராப்தியும்
கைவல்யமும் ஆகிற இரண்டும் த்யாஜ்யமாயிருக்கும். மோக்ஷத்து
க்கு ஸாதனமாகக் கர்மத்தைப் பண்ணுமவன் - ஸகல தர்மங்களுடை
யவும், ஐச்வர்ய கைவல்யங்களுடையவும் த்யாக பூர்வகமாக
பகவதர்ப்பண புத்தியாலும் ப்ரீதியாலும் பண்ணுமவனுகை
யாலே ப்ரீதிரூபமானதே பக்தி. ஆகையாலே, கர்மயோகந்
தான் ஸ்வயமேவ பக்தி யோகத்துக்கு ஸஹகரிக்குமதாயி
ருக்கும், ஜ்ஞானயோகந்தானும் பக்திக்கு ஸஹகரிக்கும்படி
எங்ஙனே என்னில், மோக்ஷார்த்திக்கு ஐச்வர்ய கைவல்யங்களி
ரண்டும் த்யாஜ்யமாய், பகவத்ப்ராப்தி உபாதேயமாய், கர்மத்
தைப் பண்ணும்போது ஜ்ஞானபக்திகள் இரண்டும் உடையனும்
பண்ணுகையாலே, கர்மந்தான் எப்படி பக்திக்கு அங்கமாய்
இருக்குமோ அப்படியே ஜ்ஞானமும் பக்திக்கு அங்கமாயிருக்கிற
படி. அதாவது - அங்கமாயிருக்கும் தசையிலே ப்ரீதிரூபத்வத்தை
தனக்கில்லாமையாலே ஜ்ஞானமானது மேல் ப்ரீதிரூபத்வத்தை
அடைந்து பக்தியாகும். ஆகையாலே ஸஹகரிக்குமதாயிருக்கும் என்
றபடி. ஆனால், ஜ்ஞானந்தானே பக்தியாமோ? என்னில் "பக்திஸ்
ச ஜ்ஞானவிசேஷ:" என்று சொல்லும்போது ஸாமாந்ய ஜ்ஞானத்
துக்கு ஜ்ஞானவிசேஷம் என்று சொல்லவொண்ணாதிறே, ஜ்ஞா
னத்திற்கு விசேஷணத்தையைச் சொல்லுகையாலே விசேஷண
த்தையுடைத்தான ஜ்ஞானத்துக்கு பக்தியென்று பேராய்,
அந்த விசேஷணத்தையுண்டாக்கும்படி ஸஹகரிக்குமதாயிருக்கும்
ஜ்ஞானந்தான், ஸாமாந்யமான ஜ்ஞானத்தாலே பக்திக்கு ஸஹக
ரிக்குமதாயிருக்கும் என்கிற சிர்ப்பக்தியில்லை. கர்மயோகந்தான்
அங்கியாயிருக்கும்போது - ஜ்ஞானபக்திகளிரண்டும் அங்கங்களாய்
ஸஹகரிக்குமவையாயிருக்கிற ஆகாரமுண்டாயிருக்க, ஜ்ஞான
யோகந்தான் ஸாக்ஷாத்காரத்தாலே, கர்மயோகத்துக்கும் ஸஹ
காரியாய் பக்தியோகத்துக்கும் அங்கமாய் ஸஹகரிக்குமதாயிருக்
கும். கர்மயோக-பக்தியோகங்களிரண்டும் ஜ்ஞானயோகத்துக்கு அங்
கங்களாய் ஜ்ஞானயோகந்தான் அங்கியாயிருக்கும்போது ஜ்ஞான
யோகத்துக்கும் ஸஹகரிக்குமதாய் பக்தியோகத்துக்கும் ஸஹகரித்

குமதாயிருக்குமிறே கர்மயோகந்தான்; பக்தியோகந்தான், அக்நி யாய் ஜ்ஞாநகர்மங்களாகிறவிரண்டு யோகங்களும் தனக்கு அங்கங் களாயிருக்கும்போது ஜ்ஞாநயோகத்துக்கும் ஸஹகாரிக்குமதாய் கர்மயோகத்துக்கும் வ்யதிரிக்குமதாயிருக்கும். இப்படி தத்வ த்ரிதயிருக்கையாலே, கர்மயோகத்துக்கு முன்பே ஜ்ஞாநபக்தி யோகங்களிரண்டு முண்டாகையாலேயும் ஜ்ஞாநயோகத்துக்கு முன்பே கர்மபக்தி யோகங்களிரண்டின் விஷயத்தில் ஜ்ஞாநமுண் டாகையாலும், பக்தியோகத்துக்கு முன்பே கர்மஜ்ஞாநயோகங்க ளிரண்டின் விஷயத்தில் பக்தியுண்டாகையாலும் கர்மயோக ஸஹ க்ருதையாயும், ஜ்ஞாநயோக ஸஹக்ருதையாயுமிருக்கும் பக்தியோ கந்தான் "கர்மஜந்யம் ஜ்ஞாநம்-ஜ்ஞாநஜந்யம் பக்தி" என்றிவ ற்றை சொல்லுகிறது. யோகஜந்யம் என்கிறது ஸாத்யம் கொண்டு ஜ்ஞாநத்துக்குண்டான ஓர் அவஸ்தாவிசேஷஞ்சொல்லுகையிறே ஆழ்வார் முக்யமாகச்சொல்லின் ஸாக்ஷாத்ஜந்ய ஜ்ஞாநிகளுக்கும் ஆசார்யோபதேசத்தால் வந்த ஜ்ஞாநிகளுக்கும் வைராக்யம் வருமிறே! 'பரிக்ஷபமோஷாக' இத்யாதி இப்படியாலே ஸகல ஸாத்யங்களாய், விளம்ப பலப்ரதங்களாய் ஸாபேக்ஷங்களாய் ஸாதிக்குமவையாய் அந்திமஸ்ம்ருதியில்லாதபோது பரிபாலிக்கு க்குமவையாய் சேதநனுடைய அத்யந்தபாரதந்த்ர்ய ஸ்வரூப ஸ்வரூபத்துக்கு விரோதியாயிருக்கையாலே "இப்படி கர்மஜ்ஞாந ஜ்ஞாநஸஹக்ருதையான பக்தியோகத்தில் அஶக்தர்க்கும்" என்ற படி. அஶக்தர்க்கும் கீழ் சொன்ன கர்மஜ்ஞாநஸஹித பக்தியில் ஶக்தியில்லாதவர்க்கும், அநுஷ்டாநாதிகாரிகளுக்கும் என்றபடி. அப்ராப்தர்க்கும் கர்மாதிகளில் அதிகாரமாகிற ப்ராப்தியில்லாத வர்க்கும், அத்வைத ஜ்ஞாநிகர்க்கும், ப்ரபத்தியதிகாரிகளுக்கும் என் றபடி, ஸ்வரூபமுமாய் மேழுக்தமான உபாயாந்தரங்களைப் போலே தஞ்சமாயிருக்குமதன்றிக்கே ஸ்வரூபமுமாய் சித்தமுமாய் "அப்ராப்தோ ஸாதநம்" என்கிறபடியே ஸ்ரீமாந பகவானுடைய ஸத்தையன்றுமிக்குமதாய்; உபாயம் ஸக்ருத்துகையாலே "ஸக் ருதேவ" என்றும் "ஸக்ருதேவ நாம்" என்றும், "மேந்நிப்போமையும்" என்றுஞ்சொல்லுகிறபடியே உபாயமாம்பன்னுமது ஸக்ருத் துகையாலே, உடைய அநுஷ்டாநமொன்றும் உண்டாகக்கடவ தல்ல பகவத்விஷய அநுபவங்களெல்லாம் "ப்ரபத்யே" என்று ஒத்தொரு அனந்தமுண்டாகக்கடவன பகவத்விஷயத்

